

# சொல்

பெண்ணியத்தின் மகத்துவம்

## பாலியல்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

R. Pathmanaba Iyer
27-B, High Street,
Plaistow
London E13 0AD

# சொல்

பெண்ணியத்தின் மகத்துவம்

இரண்டாம் / மூன்றாம் காலாண்டு - 2008
ISSN 1391-958X

**கௌரவ ஆசிரியை**
சித்ரலேகா மௌனகுரு

**சரவை பார்த்தவர்**
குகநிதி குகநேசன்

**அட்டை மற்றும் பக்கங்கள் வடிவமைப்பு**
வேலாயுதம் ஜெயச்சித்ரா

**சஞ்சிகை வெளியீடு**
பெண்கள் தொடர்பு ஊடகங்களுக்கான கூட்டமைப்பு,
174, அல்விஸ் ஒழுங்கை, காசல் வீதி,
கொழும்பு 8, இலங்கை.
தொலைபேசி : 94-11-5632045 / 5635900
தொலைநகல் : 94-11-2690192
மின்தபால் : womedia@sltnet.lk அல்லது options@sltnet.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் சொல்ல விரும்புவது ....

2008 சொல் சஞ்சிகையின் இரண்டாம் மூன்றாம் இதழ்களை ஒன்றாகச் சேர்த்து இவ்விதழ் வெளிவருகின்றது. இவ்விதழின் தொனிப்பொருள் பால்மை/பாலியல்பு (sexuality) என்பதாகும். மனித சமூகத்தின் இன்றியமையாத் தன்மைகளுள் ஒன்றாக பால்மை இருப்பினும் அது பற்றிய சொல்லாடல்களும் கருத்துரைகளும் கருத்துப் பரிமாறல்களும் எமது சமூகத்தில் என்றும் மறைபொருளாகவே இருந்து வந்துள்ளன. மனித சாராம்சத்தில் தவிர்க்க முடியாததும் இன்றியமையாததுமான இவ்விடயம் பற்றிப் பேசுவதற்கு, குறிப்பாகப் பெண்களுக்கு பல தடைகள் இடப்பட்டிருந்தன. பெண்களின் பால்மை பற்றி இலக்கியங்களிலும் சாஸ்திர நூல்களிலும் அதிகார பூர்வமான முறையில் வரையறைகளும் விதிமுறைகளும் ஆண்களினது பார்வையில் கட்டமைக்கப்பட்டுள்ளன. வாத்ஸாயனரின் காமசூத்திரத்திலிருந்து ஆறுமுகநாவலரின் பாலபாடங்கள் வரை இதனைப் பரக்கக் காணலாம். அத்துடன் ஆண், பெண் என்ற கட்டுத்திட்டமான உயிரியல், உடலியல் வரையறைகளுக்கு அப்பால் இவையிரண்டிலும் அடங்காத பால்மாறிகளாக (Trans gender) பலர் தம்மை இன்று அடையாளப்படுத்துகின்றனர். குறிப்பாகத் தமிழ் நாட்டில் அரவாணிகள் (இவர்களை 'அலி'கள் என்று கொச்சைப்படுத்தி அடையாளப்படுத்தும் நிலை இன்று மாறி வருகின்றது). உள்ளத்தாலும் உணர்வாலும் பெண்ணாகவும் உடலால் ஆணாகவும் நம்மத்தியில் பலர் உலவுகின்றனர். இவர்களைப் 'பொண்ணயன்' எனவும், 'பேடிகள்' எனவும் கேலி செய்கின்ற, கீழ்மைப்படுத்துகின்ற போக்கு சமூகத்தில் உண்டு. இது போலவே பெண்மை என வரையறை செய்யப்பட்ட நாற்குணங்களை வெளிப்படுத்தாத பெண்களை 'ஆண்கோணி', 'ஆண்மாரி' எனக் கேலி செய்தலும் கண்டித்தலும் இன்றும் நிகழ்கின்றன. மனிதர் தங்களைத் தங்கள் இயல்பில் உணரவும் வெளிப்படுத்தவும் சாத்தியமான வெளியொன்று எமக்கு வேண்டும். ஆண்மையும் பெண்மையும் கலந்த, ஒன்றையொன்று விரவிய பண்புகள் வாழ்க்கைக்கு செழுமையளிப்பனவாகும்.

இந்தச் 'சொல்' பால்மை பற்றிய பல்வேறு கருத்தாடல்களையும் குரல்களையும் வெளிப்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது என நம்புகிறோம். இவ்விடயம் குறித்த கருத்துகளையும் மேலும் பல விவாதங்களையும் தூண்டும் வகையில் சில மொழிபெயர்ப்புகளையும் ஏற்கனவே வேறு இடங்களில் வெளிவந்தவற்றையும் சேர்த்துள்ளோம். இவ்வகையிலேயே அம்பையினுடைய கைலாசம் என்ற சிறுகதை இங்கு மீள் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. மனித உறவுகளில் பால்மை வகிக்கின்ற பங்கும் பாதிப்பும் முக்கியமானவை. இவ்விடயம் தொடர்பான மௌனத்தை விலக்கி பெண்கள் பேசத்தலைப்பட்டுள்ள இக்காலகட்டத்தில் உங்களது கருத்துகளை எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள் எனக் கேட்டுக்கொள்கின்றோம். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல் விடுக்கும் அறைகூவல்!

2008 செப்ரெம்பர் மாதம் இலங்கை வரலாற்றில் தீர்மானம் மிக்க காலத்தைக் குறிக்கும் ஒரு மாதமாகும். வடபுலத்தில் யுத்தம் நாளுக்கு நாள் உக்கிரமடைந்து வருகிறது. இடம்பெயரும் மற்றும் மரணிக்கும் தமிழர்களின் மொத்த எண்ணிக்கை பற்றிய சரியான தகவல்கள் இல்லாவிடினும் அத்தொகை இரண்டு இலட்சத்தை விஞ்சுமென்பது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. யுத்தம் காரணமாகக் கொல்லப்படும் இராணுவ வீரர்களின் எண்ணிக்கை தொடர்பாக சரியான தகவல்கள் இல்லாதிருப்பினும், அவ்வாறு கொல்லப்படும் ஒவ்வொருவருக்காகவும் கண்ணீர் சிந்த ஒரு தாய் அல்லது ஒரு மனைவி இருப்பதை எவரும் மறந்துவிட முடியாது.

சரிவு கண்டுள்ள பொருளாதாரம், அசுர வேகத்தில் உயரும் பொருட்களின் விலை, எரிபொருள் விலை, கூலி வேலைக் கட்டணங்கள் மற்றும் போக்குவரத்துச் செலவு போன்றவற்றிற்கு மத்தியில் தினசரி வாழ்வுக்காக போராடிக்கொண்டிருக்கும் நாம், போரின் வெற்றி குறித்த எதிர்பார்ப்புடன் விட்டுக்கொடுப்புகளை செய்து வருகிறோம். ஆயினும் அந்த வெற்றியை நாம் கொண்டாட வேண்டுமெனில் போரின் முடிவில் சமாதானமும் சுபீட்சமும் வளர வேண்டும். ஆனால் நாம் எதிர்பார்த்துக் காத்திருக்கும் சமாதானமும் சுபீட்சமும் வெகுதூரத்திலேயே உள்ளது.

நாட்டையே கபளீகரம் செய்து கொண்டிருக்கும் ஊழல்கள் மற்றும் மோசடிகள் காரணமாக நாம் பின்னோக்கிச் சென்று கொண்டிருக்கிறோம். இரத்த வங்கியில் அண்மையில் பாவனைக்கு உதவாத, காலத்தால் பிந்திய வடிகட்டும் கருவி (filter) பயன்படுத்தப்பட்டமை தொடர்பான பிரச்சினை காரணமாக இரண்டுபேர் வேலையிலிருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளபோதும், இதற்குப் பொறுப்புக் கூற வேண்டியவர்களை பொலிசார் சட்டத்தின் முன் நிறுத்துவார்களா? என்பது சந்தேகத்திற்குரியது. Lanka Marine Series லங்கா மரீன் சீரிஸ் குறைந்த விலைக்கு விற்கப்பட்டமை தொடர்பாக நிதி அமைச்சின் செயலாளர் பி. வி. ஜயசுந்தர அவர்களும் பொறுப்புக்கூற வேண்டியுள்ளதாக பேச்சுக்கள் அடிபட்டுக் கொண்டிருக்கும் அதேநேரத்தில் நாட்டு மக்களோ கவலையுடன் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். பொறுப்புக்கூற வேண்டிய பதவிகளில் இருந்து கொண்டு அதற்காக ஊதியம் பெறும், உயர்பதவி வகிக்கும் உத்தியோகத்தர்கள் இதுபோன்ற மோசடிகளுக்கு பொறுப்புக்கூற வேண்டுமாயின் பொதுமக்களின் நம்பிக்கையை எவ்வாறு வெல்ல முடியும்.

சட்டத்தையும் சமாதானத்தையும் பாதுகாக்கும் கடமைகளுக்குப் பொறுப்பாகவுள்ள பொலிசார் பிரஜைகளின் நம்பிக்கைக்குரியவர்களாக செயற்பட வேண்டும். இனப்பிரச்சினை காரணமாக அனைத்துத் தமிழர்களையும் பயங்கரவாதிகளாக சந்தேகிக்கின்றமை குறித்து நாம் வியப்படையா-விட்டாலும், சிங்கள மக்கள் மீதான அவர்களின் அக்கறையின்மை மற்றும் இரக்கமின்மை தொடர்பாக தினசரி அறியக் கிடைக்கிறது. அவர்களில் ஒரு சிலர் மோசடி மற்றும் ஊழல் விடயங்களில் மிகுதியாக செயற்படுகின்றமை தெரிய வந்துள்ளது.

இந்நிலையில் எங்களினதும் எங்கள் பிள்ளைகளினதும் எதிர்காலம் குறித்து எவ்வாறு கனவு காணமுடியும்? எம் கண்முன்னே யுத்தம், கலவரம், படுகொலை, பயங்கரவாதம், கண்ணீர் இவை மட்டுமே தோன்றுகின்றன. நாம் சமாதானம் மற்றும் ஜனநாயகம் குறித்து எவ்வளவுதான் மனக்கோட்டை கட்டினாலும், பெண்களின் உரிமைகள் மற்றும் மனித உரிமைகள் பற்றி குரலெழுப்பினாலும், சமத்துவத்தை அடைய முயற்சி செய்தாலும் இறுதியாக நாம் கொடூரத்தையும் மிலேச்சத்தனத்தையும் சந்திக்கின்றோமே தவிர எம்மால் நல்லெண்ணங்களைத் தோற்றுவிக்க முடியாதுள்ளது.

சாதகமாக ஏதாவதொரு விடயத்தை எழுத முயற்சி செய்தாலும், எம்மனைவரையும் சூழ்ந்து கொண்டுள்ள கொடிய இருள் மற்றும் சிக்கல்களிலிருந்து மீண்டெழும் சவாலுக்கு மத்தியில் நாம் வாழ்ந்து வருகின்றோம் என்பதையே சொல்ல வேண்டியுள்ளது. ■

**சுனிலா அபேசேக்ர**

*ஆகஸ்ட், 2008.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பெண்களுக்கு சுய உணர்வு இருக்கக் கூடாதா?

இயற்கை சார்ந்த உயிரியல் அமைப்பில் மக்கள் உடலமைப்பு ரீதியாக ஆணாகவோ அல்லது பெண்ணாகவோ பிறந்துள்ளார்கள் என்பது உயிரியல் உண்மை. ஆனால் இந்த உயிரியல் வேறுபாடே சமூகத்தில் வேறுபாட்டை ஏற்படுத்தியிருக்கின்றது. இன்றும் ஏற்படுத்தி வருகின்றது. ஆண் - பெண் பாகுபாடு என்பது விதிவசமானது. சமூகமானது ஆணைப் பாதுகாவலனாகவும், வலிமை பொருந்தியவனாகவும் சித்தரித்து அவனை உயர்நிலையில் வைக்கின்றது. ஆனால் பெண்ணோ பேதை. அவளை இரக்கத்திற்கும் அனுதாபத்திற்கும் உரியவளாகக் கருதி அவளை கீழ் நிலைக்குத் தள்ளுகின்றது. இது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும்.

ஆண்முதன்மைச் சமூகமானது ஆரம்பத்தில் பெண்களை அடக்கி ஒடுக்கியதன் மூலம் ஆணாதிக்க கலாசாரத்தினை நிலைநிறுத்தியது. உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் பெண்கள் ஆண்முதன்மை ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவரப்பட்டனர். அதன் முதற்கட்டமாக உலகில் பெண்கள் போகப் பொருட்களாக ஆண்களால் கணிக்கப்பட்டனர். தன்னலமின்மை, தியாகம், பொறுமை போன்ற சில குணாம்சங்கள் பெண்களிடம் இயல்பாகவே காணப்படுவதனால் ஆண்கள் அதை சாதகமாகப் பயன்படுத்தி தம் நிலைப்பாட்டை நிலைநிறுத்தினர். அந்த வகையில் பெண்ணானவள் மனையைக் குறிக்கும் பெயரால் மனைவியானாள். கணவனோ கணங்களின் தலைவன் என்பதில் இருந்து கணவனானான். ஆண் சமூகத்தின் தலைவன் என்ற நிலைக்கு உயர பெண்ணோ வீட்டோடு முடக்கப்பட்டாள்.

பிள்ளைகளைப் பெறுதல், அவர்களை வளர்த்தல், உணவு தயாரித்தல், வீட்டையும் வீட்டுச் சுற்றுப்புறத்தையும் சுத்தமாக வைத்திருத்தல், ஒவ்வொரு வழியிலும் கணவனுக்கு ஒத்தாசையாக இருத்தல் முதலியன திருமணமான ஒரு பெண்ணின் கடமைகளாக ஆண் சமூகத்தால் வரையறுக்கப்படுகின்றன. ஒரு பெண்ணின் வாழ்க்கையின் மெய்யான பணி கணவனுக்கும் குழந்தைகளுக்கும் பணி செய்தல் என்று ஆணாதிக்கம் கருதுகின்றது. பெண்களுக்கான வரையறைகளை வகுத்த ஆண் வீட்டில் ஆட்சியின் கடிவாளத்தைக் கைப்பற்றினான். பெண்ணோ கீழ்நிலைக்குத் தள்ளப்பட்டு அடிமைப்படுத்தப்பட்டாள். அவளின் வாழ்வு வீட்டுக்குள்ளேயே அடங்கிவிடுகின்றது. அவளின் உரிமைகள், வளர்ச்சி என்பன திட்டமிட்டு ஆண்முதன்மைச் சமூகத்தால் நசுக்கப்படுகின்றன.

இவ்வாறு ஆணின் அடக்குமுறைக்கு உள்ளான பெண் அவனின் உடலின்ப வேட்கைக்கு கருவியானாள். இதனால் குழந்தைகளைப் பெறுகின்ற சாதனமாக ஆகி விட்டாள். இது பெண்ணின் நிலையை மேலும் கீழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறக்குவதாக அமைகின்றது. பெண்களுக்கு ஒதுங்கி வாழும் நிலையையும் தங்கி வாழும் நிலையையும் உருவாக்கிய ஆண்முதன்மைச் சமூகம் பெண்ணை ஆணின் பாலியல் தேவையைப் பூர்த்தி செய்யும் இயந்திரமாக பிள்ளை பெறும் கருவியாக மட்டுமன்றி ஆணுக்குச் சேவை செய்யும் அடிமையாகவும் கேவலப்படுத்தியது.

"பெண்கள் இயலும் வரையிலும் குழந்தைகளைப் பெறட்டும். அவள் வேறெதுவாகவும் இருப்பதற்குத் தேவையுமில்லை அதற்கு உரிமையுமில்லை" என்ற கருத்தானது ஆண்முதன்மைச் சமூகத்திற்கு துணை போவதாய் இருக்கின்றது. பெண் என்ன குழந்தைகளை உற்பத்தி செய்யும் கருவியா? அவளுக்கென்று தனிப்பட்ட உரிமைகள், உணர்வுகள் எதுவும் இருக்கக்கூடாதா?

இந்த ஆண்முதன்மைச் சமூகமானது தனது அடக்குமுறைக்கு இசைவாக பல செயற்பாடுகளில் இறங்கியது. பழமொழிகளையும் பாரம்பரியக் கதைகளையும் தனக்கு ஏற்றவாறு மாற்றியமைத்துக் கொண்டு பெண்ணை அடிமைப்படுத்த முயற்சித்தது. அது அவர்களுக்கு ஆரம்பத்தில் வெற்றியையே தேடிக் கொடுத்தது எனலாம். அந்த வகையில் "கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்" என்று கூறியே பெண்ணின் அடிமைத்தனத்தை ஆண் சமுதாயம் பண்பாடாக்க முயற்சிக்கின்றது. கணவன் எவ்வளவு கீழ்த்தரமானவனாக இருந்தாலும் பெண் அவனுக்கு அடங்கி சேவை செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது.

அச்சம், மடம், நாணம், பொறுமை, அடக்கம் என்பவை பெண்ணுக்கு மிக முக்கியமாக இருக்க வேண்டிய பண்புகள் எனக் கூறி ஆண்முதன்மைச் சமூகத்துக்குள் பெண்ணை பேணி வைக்கின்றனர். பெண்ணை இவ்வாறு அடிமைப்படுத்தியதன் மூலம் ஆண்முதன்மைச் சமூகம் வளர்ச்சி பெற்றது. இன்றும் வலுப் பெற்று வருகின்றது என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

**அச்சம், மடம், நாணம், பொறுமை, அடக்கம் என்பவை பெண்ணுக்கு மிக முக்கியமாக இருக்க வேண்டிய பண்புகள் எனக் கூறி ஆண்முதன்மைச் சமூகத்துக்குள் பெண்ணை பேணி வைக்கின்றனர். பெண்ணை இவ்வாறு அடிமைப்படுத்தியதன் மூலம் ஆண்முதன்மைச் சமூகம் வளர்ச்சி பெற்றது. இன்றும் வலுப் பெற்று வருகின்றது என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.**

எனினும் பெண்களை அடக்கி ஒடுக்கிய காலம் இன்று மலையேறிவிட்டது. பெண்ணின் உரிமைகள் பற்றிய புரிதல்கள் ஆரம்பித்துவிட்டன. "பெண் புத்தி பின் புத்தி அல்ல". பெண் புத்தி முன் புத்தி எனப் பெண்கள் புரியவைத்துக் கொண்டிருக்கிறார்கள். பெண்கள் இன்று மிகவும் வலிமை வாய்ந்தவர்களாக வெல்லற்கரியவர்களாக மீண்டு எழுந்துள்ளார்கள். இன்று பெண்கள் பல துறைகளில் ஆண்களுக்கு ஒப்பாக நுழைந்து, அவர்களால் சிறந்த முறையில் பணியாற்ற முடியும், ஜெயிக்க முடியும் என்பதை நிருபித்துக் கொண்டிருக்கின்றனர்.

ஆணாதிக்கம் தகர்க்கப்பட்டு ஆண் பெண் சமத்துவம் நிலவ வேண்டுமாயின் முதலில் ஆண்களுக்கு இணையான கருத்துச் சுதந்திரம், கல்விச் சுதந்திரம், பொருளாதார சுதந்திரம் என்பன பெண்களுக்குப் பூரணமாகக் கிடைக்க வழி செய்ய வேண்டும். மணவாழ்க்கையில் கடமைகள், உரிமைகள் இருபாலாருக்கும் சமநிலையில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். பெண் மீதான ஆணின் அத்துமீறல்களுக்கு தண்டனை அளிக்கப்பட வேண்டும். இவ்வாறான செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டால் தான் ஆண் பெண் சமத்துவம் நிலவமுடியும்.

மேலும் பெண் சுதந்திரமாக சிந்திக்கத் தொடங்க வேண்டும். ஒரு ஆணின் உழைப்பைச் சார்ந்து பெண் இருக்கும் வரை ஆணின் பொருளாதார நலனுக்கு உட்பட்டுத்தான் பெண் சிந்திக்கத் தொடங்க வேண்டும். எனவே இதிலிருந்து பெண் மீண்டு சமூக உழைப்பில் சுய ஆற்றலுடன் வாழும் போதுதான் அவளது சிந்தனை வெளிப்படும். பெண்கள் சுயமதிப்பும் பொருளாதார சுயசார்பும் பெற்றுவிட்டால் மாத்திரமே சமுதாயத்தில் ஆரோக்கியமான மாற்றத்தை ஏற்படுத்த முடியும். ■

**"அறிவு கொண்ட**
**மனித உயிர்களை அடிமையாக்க**
**முயல்பவர் பித்தராம்"**

**- பாரதி**

**அனித்தா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலுணர்வும் குழந்தைப் பருவமும்

பாலுணர்வு என்பது பலரும் பகிரங்கமாகக் கதைக்க வெட்கப்படும் ஓர் விடயம் என்பது வெளிப்படையான உண்மை. பாலுணர்வு பற்றி பலரும் கதைப்பதற்கும், அறிவதற்கும் ஆசைப்படுவது என்பது வெளிப்படையான இரகசியம். இந்த வகையில் பாலுணர்வு பற்றி குழந்தைப் பருவம் என்ன எண்ணுகின்றது, உணர வைக்கின்றது என்பதனை அறிய முயல்வது மிகவும் முக்கியமான ஓர் விடயமாகும்.

பாலுணர்வு என்பது வளர்ந்தோருக்கு மட்டுமே உரித்தான ஓர் விடயமல்ல. சிறியோர் முதல் பெரியோர் வரை இதில் ஈடுபாடு உடையோராகக் காணப்படுகின்றனர். ஆனால் இது மனிதனது மாற்றங்களுக்கேற்ப ஒவ்வொரு மனிதனிடமும் வேறுபட்டுக் காணப்படுகின்றது எனலாம். குழந்தைகள் சிறார்களைப் பொறுத்தமட்டில் இது அவர்களின் விளையாட்டுக்களின் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றது. அதிகமாகப் பிள்ளைகள் தமது சம வயதுடைய பிள்ளைகளுடன் விளையாடும் போது, தமது பாலுறுப்புகளைத் தொட்டுணரும் போது, தமது சகாக்களின் பாலுறுப்புகளைப் பாரக்கும் போது பாலுணர்வு சம்பந்தமான உணர்வுகளைப் பெறுகின்றனர் என ஆய்வுகள் கூறுகின்றன. மிகவும் முக்கியமாக சிறுவர்கள் ஆண், பெண் உடலுறுப்புகளின் வேறுபாட்டிலிருந்து, அவற்றினைப் பார்த்து பாலுணர்வு சம்பந்தமான உணர்வினைப் பெறுகின்றனர். சில சிறுவர்கள் தமது கை விரலை வாயில் வைத்திருப்பர். இது பாலுணர்வின் ஒரு வெளிப்பாடுதான் எனச் சிலர் விவாதிக்கின்றனர்.



சிறுவர்களின் இந்த செயற்பாடு பற்றி அறிய வேண்டும் என எண்ணும் வெளிப்பாடு போன்றவற்றிற்கு பாலுணர்வு சம்பந்தமான அறிவினைக் கொடுப்பதற்கு பெற்றோர் பெரிய பங்கினைச் செய்ய வேண்டியவர்களாகக் காணப்படுகின்றனர். குளியலறைப் பகிடிகள் மூலம் சிறுவர்களிடையே பாலுணர்வு பற்றிய அறிவு புகுத்தப்படுகிறது எனலாம்.

சில பெற்றோர் தமது பிள்ளைகளுடன் பாலுணர்வு பற்றிக் கதைக்கின்றனர். அதன் மூலம் பாலுணர்வு பற்றி பெற்றோருடன் கதைத்துக் கொள்ளலாம் எனும் தன்னம்பிக்கை பிள்ளைகளுக்கு ஏற்படுகிறது. பொதுவாக பெண் சிறுமிகள் தாய்மாரிடம் இவ்வாறு அன்னியோன்னியமாக கலந்துரையாடுவதைக் காணலாம். மேலும் இத்தகைய உரையாடல் அறிவினைக் கொடுப்பதோடு மட்டுமன்றி பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் துன்புறுத்தல்களில் இருந்து தப்பித்துக் கொள்ள வாய்ப்பளிக்கின்றது. அத்தோடு பிள்ளைகள் தமக்கு இடம்பெறக் கூடிய அசம்பாவிதங்கள் பற்றி பெற்றோரிடம் வெளிப்படையாக உரையாடவும் முற்படுவர்.

இன்றைய காலகட்டத்தில் சினிமா, இணையத்தளம் போன்றன பாலுணர்வு தொடர்பான விடயங்களை சிறுவர்கள் மத்தியில் அதிகம் புகுத்தும் முயற்சியில் ஈடுபடுகின்றன. சிறுவர்கள் பாலுணர்வு பற்றிய விளக்கத்தை சரியான வழியில் புரிந்து கொள்ளாத இடத்தில் வழிதவறிச் செல்ல வாய்ப்புண்டு. ஆகவே ஆரோக்கியமான பாலியல் பற்றிய அறிவு சிறுவர்களுக்கு வழங்கப்படுதல் அவசியம். தெளிவான அறிவு திறம்பட வழங்கப்படுமிடத்து அது சமுதாயத்தை முன்னேற்றமடையச் செய்யும். ஆகவே இதற்கான முன்னெடுப்புகள் சிறுபராயத்திலேயே எடுக்கப்படுதல் அவசியம். ■

பாரதி கென்னடி

stock.xchng

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விலக்கப்படாத விலங்காக

எம்மைப் பற்றிய
இருப்புக்களும்
அடையாளங்களும்
வெளிப்படுத்தல்களும்
விவஸ்தையற்ற விவரணங்களாக
தோன்றுகின்றன போலும்?

விருப்பின் பேரில் மட்டுமே
நாம்
அவசியமாகின்றோம்.
தலை சாய்க்கவும்
தாகம் தீர்க்கவும் மட்டுமே
நாமும்
எமது உடலும்
இருக்க வேண்டுமென
கோடிட்டுக் காட்டுகிறீர்கள்.


உங்கள்
விருப்பங்களே எங்கள் விருப்பங்களாகவும்,
எங்கள் விருப்பங்கள்
உங்களுக்கு வெறுப்புகளாகவும்
நாளுக்கு நாள்
மாற்றமடைகின்றன.

வகுக்கப்படாத சட்டங்களும்
மிகைப்படுத்தப்பட்ட
ஐதீகங்களும்
எம் மீது சுமத்தப்படுகின்றபோது
எங்களுக்கான
சுயம்
வலுவிழந்து போகிறது.

போலி முகாரியை
முகத்தில் பூசிக் கொண்டு
எம் முதுகின் மீதான
உங்களின் மூர்க்கத்தின்
கனம்
முத்திரை பதிக்கின்றது.

ஒவ்வொரு இரவும்
சத்தமின்றி
செத்துக் கொண்டிருப்பதும்,
எமது உடலை உருக்கி
நீங்கள்
இன்பம் காணுவதும்
இன்னொரு புறம்...

பொய்யாகிப் போன
வாழ்க்கை வட்டத்திலே
பொசுங்கியவர்களாக
நாங்களும்
பொசுங்கிப் போன - எமது
வாழ்க்கையிலிருந்து
குளிர் காய்பவர்களாக
நீங்களும்



அமுதா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கzசல் தில்வால் ', இந்தியாவின் ஹிமாச்சல மாநிலத்தில், சித்பாரி பிரதேசத்தில், இமய மலைத்தொடரை கண்குளிர காணும் தூரத்திலுள்ள ரக்கார் என்றழைக்கப்படும் ரம்மியமான சிறு கிராமத்திலுள்ள பயிற்சி நிலையத்தில், நான் அவரைச் சந்தித்தேன். அப்பெண் இந்தியாவின் பஞ்ஜாப் மற்றும் ஹரியானா மாநிலங்களின் தலைநகரான சண்டிகாரிலிருந்து வந்திருந்தார். தனது 25 வயதில் பாலுறுப்பு மாற்றியமைக்கப்பட்டதன் பின் ஏற்பட்ட அனுபவங்களை எங்களுடன் பகிர்ந்துகொண்டார். புன்னகை பூத்த அவரின் முகத்தில் அன்பும் கருணையும் அடைக்கலம் கொண்டுள்ளதை காணமுடிந்தது.

இலங்கைச் சமூகத்தில் இன்னும் ஆழமாக கவனம் ஈர்க்கப்படாத எனினும் நேரடியாகவே பாரபட்ச கவனிப்புக்கு இலக்காகும், அதேபோன்று பிறப்பின் பின் பால் வேறுபாட்டிற்கு உள்ளாக்கப்படும் (Trans - Gender and Trans - Sexuality) மாறுபாடுடைய பாலுறுப்புடன் வாழும் ஆண் மற்றும் பெண்ணை மனித நேயக் கண்கொண்டு அவதானித்து அவர்களுடைய உரிமைகளை வென்றெடுக்க அணி திரள வேண்டுமென்ற தயவான வேண்டுகோளுடன் கzசலின் உணர்வுபூர்வமிக்க கதையை உங்கள் முன் சமர்ப்பிக்கின்றோம்.

அப்பெண் எங்களுடன் பரிமாறிக் கொண்டவற்றை வலுவூட்டவேண்டுமென்ற நோக்குடன் இந்தியாவில் பிரசுரிக்கப்படும் The week சஞ்சிகையில் 2008 மார்ச் இதழுக்கு அவர் எழுதிய "நானே அவள்" "See I am she" கட்டுரையில் அடங்கும் விடயங்களும் உள்வாங்கப்பட்டுள்ளன என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

"அறுவை மருத்துவர் ஒருவரின் கத்தி, விடுதலைக்காக என்னைத் தீண்டும் வரை நான் கால் நூற்றாண்டு காலமாக ஆணொருவரின் உடலினுள் சிறைப்பட்டிருந்தேன்."



# நானே அவள்

இனி, இளமைத் தோற்றமும் அழகும் நிறைந்த கzசல் தில்வால் கூறிய கதையைப் பார்ப்போம். நாம் இக்கதைக்கு உயிரூட்டுவதற்கான காரணம் யாதெனில் சிறுபான்மை இனக்குழுமமொன்றின் உரிமைகள் தொடர்பாக அவர்களை விழிப்பூட்டுவதற்கு தில்வாலிடம் காணப்படும் எதிர்பார்ப்பை உச்சப்படுத்துவதாகும்.

"அறுவை மருத்துவர் ஒருவரின் கத்தி, விடுதலைக்காக என்னைத் தீண்டும் வரை நான் கால் நூற்றாண்டு காலமாக ஆணொருவரின் உடலினுள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறைப்பட்டிருந்தேன்". "அன்று நான் சன்டிகார் குன்ராஜ் ', ஆனால் இன்று கசசல் தில்வால்". என் கதையை உங்களுக்கு கட்டாயமாகச் சொல்ல வேண்டும். இது என்னுடைய பால் மாற்றம் பற்றிய கதை. எனது விடுதலையின் கதை ', நான் ஏன் என் கதையை சொல்லவேண்டும் என்றால் என்னைப் போன்று அவரவர் விரும்பாத உடலினுள் சிறைப்பட்டுத் தவிக்கும் ஆயிரக்கணக்கான ஆண்களும் பெண்களும் இப்பிரபஞ்சத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். கொச்சைப்படுத்தி விடுவார்களோ என்ற அச்சம், அச்ச உணர்வு கிளம்புதல் சரியானதுதானா என்பதில் மனவுறுதியின்மை, தன்னைச் சூழ உள்ளவர்கள் இதைத் தவறான கண்கொண்டு பார்ப்பதற்கான சாத்தியம் இருப்பதால் அவர்கள் தங்களின் உள்ளுணர்வலைகளை மறைத்து விடுகின்றனர். ஆதலால் நான் மக்களை அறிவூட்ட ஆவல் கொண்டிருக்கிறேன். எனக்காக நான் தெரிவு செய்யாத ஒரு பாத்திரத்தினுள் 25 ஆண்டுகளாக எவ்வாறு அடக்கம் கொண்டிருந்தேன் என்பதை வெளிக்கொண்டுவர வேண்டியுள்ளது.

எனது குடும்பத்தில் நான் மூன்றாவதாகப் பிறந்த ஆண் குழந்தை. வளர்ந்து வரும் போது நான் என்னுடைய குணவியல்புகளிலும் நடத்தைகளிலும் மாறுதலைக் கண்டேன். என்னுள்ளே பெண் பிள்ளையொன்றின் குணவியல்புகளும் நடத்தைகளும் இருப்பதைக் கண்டு நிலைதடுமாறிப் போனேன். பாடசாலை நாடகமொன்றில் பெண் பாத்திரமேற்று நடித்தமை பள்ளிப்பருவ நினைவுகளில் ஒன்று. நாடக ஒத்திகைகளில் ஆர்வத்துடன் நடித்த நடிகரும் நான்தான். அரங்கேற்றத்திற்காக அழகான பாவடையணிந்து தயாரான நான் என் அப்பாவிடம் "என்னுடைய நடிப்பு நன்றாக அமைந்தது என்றால் நான் மிகச்சிறந்த துணை நடிகை ஆவேன்" என்று கூறினேன். அதைக் கேட்ட அப்பா "சிறந்த நடிகர்" என்று திருத்தினார். அதற்கு உடன்படாத நான் அதில் குறை தேடினேன். எனினும் காரணமும் கருத்தும் அவருக்கு சார்பாயிற்று ', எஞ்சியது தடுமாற்றம் மட்டும்தான். நடத்தைகளாலும் குணாம்சத்தாலும் மனதாலும் எதிரான பாலுறுப்பில் ஆர்வம் கொண்டிருக்கும் ஒரு பிள்ளை ஆயுள் முழுவதுமாக தனது அடையாளத்தை வெளிப்படுத்த முடியாது சிறைப்பட்ட நிலையில் தனது சமகாலத்தவர்களின் நகைத்தல் மற்றும் நிந்தனைகளிலிருந்து விடுபட வழிதேடுகிறது. மனதை வருத்திக்கொண்டு பரிகாரம் கிடைக்காத நிலையை தினமும் எதிர்கொள்ள நேரிட்டது.

நான் எனது பதின்மூன்றாவது வயதில் முகம் பார்க்கும் கண்ணாடியுடனான பற்றுதலை முறித்துக் கொண்டேன். பாடசாலைச் சீருடைக்குத் தலைப்பாகை கட்டாயமாக்கப்பட்டது. தாடியும் மீசையும் முளைக்கலாயிற்று. இந்த அணிகலன்கள் எனது தாயாருடையதாக இருந்தால் என்ற எண்ண அலைகள் உருண்டோடின... கூந்தல் தலைப்பாகைக்கு வெளியில் இருக்கும் போதுதான் அழகு. விளையாட்டில் விருப்பம், ஆனால் அது கிரிக்கெட்டாக இல்லை. ஆசிரியை அல்லது அதுபோன்ற வேறொரு பெண் பாத்திரமேற்று விளையாடுவதில், நண்பர்கள் நண்பிகளை விட நான் சிறு பிள்ளையாக இருந்த போது எனது அம்மாவின் உடையை அணிந்தவாறு அயலவர்களின் வீடுகளுக்குச் செல்வேன். அப்போது சிலர் "நீர் பெண் பிள்ளை போலவே இருக்கிறீரே" என்றார்கள். அளவு கடந்த மகிழ்ச்சி கொண்டேன். என்னுடைய சிறுபிள்ளை விளையாட்டுக்களை அப்பா அவரது கமராவில் படமெடுத்திருந்தார். அதைப் பார்த்து எல்லோரும் மகிழ்ச்சி கொண்டது மட்டுமல்லாது தொலைபேசியிலும் பெண் பிள்ளைபோல கதைத்த சந்தர்ப்பங்களும் உண்டு. என்னுடைய தாய் தந்தையர் என்னைத் தண்டிக்கவில்லை.

பல சந்தர்ப்பங்களில் என்னுள் பெண் பிள்ளையொன்றின் குணவியல்புகள் உள்ளதென்பதை வெளிக்கொணரும் நிர்ப்பந்தம் ஏற்பட்டது. எனினும் எனக்கு அது பற்றிய பூரண விளக்கம் இருக்கவில்லை. இவ்வாறு வெளிப்படுத்தல் குறையென்பதையும் உணர்ந்தேன். அது பள்ளத்தில் பாய்ந்தோடும் தண்ணீரைப் போன்றது. இருந்தபோதும் என்னுடைய உள்ளுணர்வுகளை வெளியுலகிற்கு எடுத்துச் சொல்ல வாய்ப்புக் கிடைத்தமை குறித்து மகிழ்ச்சியாக இருந்தது. இது மகிழ்ச்சிக்குரிய விடயம் என்பதை எவரும் எனக்குச் சொல்லவில்லை. அதேநேரம் எவராலும் இதை உள்வாங்கவோ விளங்கிக்கொள்ளவோ முடியவில்லை.

வயது ஏறிய போதிலும் எனது உண்மையான தன்மையை அனுபவிக்கும் வாய்ப்பை நான் இழந்திருந்தேன். பால்நிலை பற்றி சமுதாயத்தில் காணப்படும் தோற்றத்தை மாற்றியமைப்பதோ அல்லது அதற்கு சவால் விடுக்கக்கூடிய சந்தர்ப்பங்களை உருவாக்குவதோ கடினமான விடயம். மரபு ரீதியான சமூகமானது அங்கீகாரத்திற்கு அப்பாற்பட்ட விடயங்களை நிந்திக்கும் வகையில்தான் நோக்குகிறது. சமுகத்தின் தோற்றத்திற்கு அப்பாற்பட்ட சிந்தனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டவர்கள், நடத்தையுடையவர்கள் பற்றி சமுதாயம் தீவிர கண்டனப் போக்கைக் கொண்டுள்ளது. இங்கு சமுகத்தைக் குறை கூறுவதில் பயனில்லை. ஏனென்றால், சமுகம் தனக்கென ஏற்படுத்திக் கொடுத்துள்ள மரபுகள் மற்றும் பெறுமானங்களின் மேலிருந்த வண்ணமே நடைபோடுகிறது. எனினும் சமுகம் மாற்றம் காணமுடியும். தனது கருத்தியல்கள் மற்றும் உளப்பாங்கை மாற்றிக்கொள்ள முடியும். எனவே சமுகத்தை மாற்றத்திற்கு உட்படுத்துவதே முக்கியமானது.

பூப்புப் பருவமென்பது அனைவரது வாழ்விலும் முக்கியமான ஒரு கட்டமாகும். தனது பாலியல்பை உணர முடியாத அதேபோன்று விடை கிடைக்காத கேள்விகள் எழுவதுமான இப்பருவத்திலே அந்நிலையிலிருந்து மீள வேண்டுமென்பதற்காக ஆண் பொப் இசைக் கலைஞர் ஒருவரின் உணர்வலைகளைத் தட்டியெழுப்பக் கூடிய சங்கீத ஒலிநாடாக்களை நான் இரசிக்கப் பழகிய விதம் நினைவுக்கு வருகிறது.

நான் இளைஞன் ஆனேன். பல இரவுகளை நித்திரையின்றிக் கழித்தேன். என்னுள் முதல் முறையாக ஒரு சிந்தனை ஊற்றெடுத்தது. அது நிலையானது எனத் தெரிந்தது. "நான் மாறுபட்டவன் இந்த மாற்றம் எப்போதும் என்னுள் இருக்கும்" என்பதே அதுவாகும்.

இதுபோன்ற மன உளைச்சல்கள் தடுமாற்றங்களிடையே ; உயர் தரப்பரீட்சையும் நெருங்கியது. அதை எதிர்கொள்ளும் சக்தி என்னிடம் இருக்கவில்லை. இங்கு நான் திறமையற்றவனென்று கூற வரவில்லை. பாடசாலையில் திறமையான மாணவராக விளங்கியதால் பெரும்பாலான ஆசிரியர்கள் என்னில் மிகுந்த எதிர்பார்ப்புடன் இருந்தார்கள். எனினும் நான் மனதளவில் பரீட்சைக்குத் தயாராகவில்லை. ஆனொருவரின் உடலினுள் சிறைப்பட்டுப் பெண்ணின் கற்பனைகள், ஆசைகளுடன் வாழ்ந்த நான், அவற்றையே விரும்பிய நான் தொடர்ந்தும் நிலை தடுமாறினேன்.



**கடவுள் எனக்கு அநீதி இழைத்துவிட்டாரென்ற எண்ணம் கொண்டிருந்த நான் அநீதி இழைக்கப்படவில்லை என்பதையும் நான் சாதாரண ஒரு மனிதப்பிறவி அல்ல என்பதையும் உணர்ந்தேன்.**

இதனுடைய பிரதிபலனாக பரீட்சைக்கு முந்திய நாளில் வீட்டைவிட்டு வெளியேறினேன். போக்கிடமும் நோக்கமும் தெரியாத நான் உடைகளை மாத்திரம் எடுத்துச் சென்றேன். என்னை அரவணைத்து ஆதரித்த தாய் தந்தையருக்கு தவறிழைத்துவிட்டேன் என்று என் மனம் கவலையில் அலை பாய்ந்தது. இருந்தாலும் நான் முன்வைத்த காலைப் பின் நகர்த்தவில்லை. போகுமிடம் தெரியாது ஒரு குறிக்கோளின்றி இருந்த நான் புகை வண்டியிலேறி என் பயணத்தைத் தொடர்ந்தேன். அப்போது ஒரு ஆண் பிள்ளையாக இருந்தாலும் தனியே ஓரிரவில் அதுவும் புகைவண்டியில் செல்லும்போது அச்சத்தையும் அபாயத்தையும் உணர்ந்தேன். பயணத்தை முறித்துக்கொண்டு நான் புகையிரத நிலையத்திலிருந்து எனது அப்பாவுக்கு தொலைபேசி அழைப்பு விடுத்தேன். நான் இருக்குமிடத்தைச் சொன்னேன். அப்பாவின் வேண்டுதலுக்கமைய அவரது நண்பர் ஒருவர் என்னைத் தேடி வந்தார். அவர் என்னிடம் ஒன்றுமே கேட்கவில்லை. வீட்டிலிருந்து ஏன் வந்தாய்? என்று கூடக் கேட்கவில்லை. அன்றிரவை அவருடைய வீட்டில் கழித்தேன். அவர்களின் விருந்தோம்பல் மகிழ்ச்சியைத் தந்தது. மறுநாள் அப்பா வந்தார். என்னை வீட்டுக்குக் கூட்டிச் சென்ற போதும் அதற்குப் பின்னரும் வீட்டிலிருந்து நான் வெளியேறிச் சென்றது பற்றி எதையும் யாரும் கேட்கவில்லை. வீட்டுக்குச் சென்றதும் எல்லோரும் என்னை அன்போடு வரவேற்றார்கள். அளவு கடந்த அன்பைக் காட்டத்தொடங்கியது மாத்திரமன்றி என்னுடைய உணர்வுகளையும் நியாயமான விதத்தில் அணுகவும் முயற்சி செய்தார்கள். என் குடும்பத்தவர்களிடமிருந்தும் நண்பர்களிடமிருந்தும் கிடைத்த அன்பு என்னை மிகவும் ஊக்கப்படுத்தியது. ஆரம்பத்தில் எனது பெற்றோருக்கு ஓர் ஆணிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணுக்குரிய குணவியல்புகள் எவ்வாறு உருவாகின்றன என்பதை உணர முடியாமல் இருந்தது. இருந்தும் அவர்கள் முயற்சியைக் கைவிடவில்லை. என் சிந்தனைப் போக்கை மாற்றுமாறு கூறினார்கள். இது எனது சிந்தனையுடன் சம்பந்தப்பட்ட பிரச்சினை இல்லையென்ற காரணத்தால் அவர்கள் மேற்படி கூறிய சந்தர்ப்பங்களில் எனக்கு அழுகையைத் தவிர வேறொன்றும் வரவில்லை. இது எனது தோற்றம் பற்றியது. நானாகவே தெரிவு செய்த ஒன்றல்ல. "அப்பா இது எனது பிறப்புடன் வந்தது" என்று கூறி மனமுருகி அழுதேன். என்னைப் புரிந்துகொண்ட என் குடும்பத்தவர்களுக்கு மரியாதை செய்கிறேன். படு பாதாளத்தில் விழவிருந்த என்னை அக்காவும் அண்ணாவும் காப்பாற்றினார்கள்.

எது எப்படி நடந்தாலும் பரீட்சைக்கு நல்ல முறையில் தோற்றினேன். பிரபலமான பொறியியல்துறைப் பல்கலைக்கழகமொன்றுக்குத் தெரிவானேன். நான்கு வருட விடுதி வாழ்க்கை. பல்கலைக்கழக சமூகத்தினரிடம் இருந்து எழுந்த என்னைப் பற்றிய பரிகாசப் பேச்சுக்களையும் பொறுத்துக் கொள்ள நேரிட்டது. "வனப்புடைய சதை" "நடையெண்டா பொம்புள நடதான்" "அடிக்கடி பாத்ரூம் போவதும் உடுப்பு மாத்துறதும்..." இவை நான் நித்தமும் கேட்டு மனமுடைந்துபோன கதைகள். முதலாவது ஆண்டு கசப்பான ஓராண்டாக இருந்தாலும் அந்த நான்கு ஆண்டுகள் என் வாழ்வில் அழகான நாட்களாகவே இருந்தன. இவ்வாறு வித்தியாசமான மாணவர்களிலும் சில உயர்ந்த மனிதர்களைக் கண்டேன். அவர்கள் எனது நண்பர்களானார்கள். என்னை மற்றையவர்கள் நகைத்தபோதெல்லாம் என் நண்பர்கள் அதையெதிர்த்து சண்டை சச்சரவுகளில் ஈடுபட்ட நாட்களும் உண்டு. இவ்வாறு பல்கலைக்கழக வாழ்க்கை சுதந்திரத்தையும், பாடவிடயத்துக்கு அப்பால் ஆர்வம் கொண்டிருந்த விடயங்கள் பற்றி அறியவும் ஆராயவும் களம் அமைத்துத் தந்தது. விவாத மேடைகள், பாட்டு நிகழ்ச்சிகள், பல்கலைக்கழக நாடகத்தயாரிப்பு போன்றவற்றில் பங்கேற்றுள்ளேன். இரவு வேளைகளில் பொழுதுபோக்கு நிமித்தம் அனுமதியின்றி நண்பர்களுடன் திரையரங்குகளுக்கு மற்றும் சுற்றுலாக்களுக்கும் சென்றுள்ளேன்.

பல்கலைக்கழகக் கல்வி முடிந்த மறுகணமே எனக்கு மாபெரும் மென்பொருள் கம்பனியொன்றில் வேலை கிடைத்தது. கண்ணெதிரே கணனி, ஆய்வு கூடத்துக்கென ஓர் அறை, கம்பனி பஸ், பொழுதுபோக்கு அறை என எனக்கு இவை தவிர வேறு உலகம் இல்லாதுபோனது. இருபதாயிரம் கம்பனி ஊழியர்களில் மிகச்சிறந்த முதல் பத்துப் பேரில் நானும் உள்ளடக்கப்பட்டேன். என்னைப் பற்றி எள்ளி நகையாடுவர்களிடமிருந்து விடுபட வாய்ப்புக் கிடைத்த காரணத்தால் நான் எட்டு மணித்தியாலத்திற்கும் மேல் வேலைசெய்வதை எதிர்க்கவில்லை.

வாழ்வில் மீண்டும் தடுமாற்றம் ஏற்பட்டது. புதிய நண்பர்களை இணைத்துக் கொள்ளும் எதிர்பார்ப்பு என்னை விட்டு அகன்றது. எனக்கும் அவ்விடத்தினின்று விலக வேண்டியிருந்தது. தனிமையைத் தேடி, அதனுடைய வேதனையை அனுபவித்த நாட்கள் பல. இதுபோன்ற சந்தர்ப்பங்களில் இணையத்துடன் இணைந்து என்னைப் போன்றவர்கள் இருப்பதை அறிந்து என் மனம் ஆறுதல் கொண்டது. அவர்கள் தங்களின் உரிமைக்காக குரல் கொடுப்பதையும் அறிய முடிந்தது. அவ்வாறு சந்தித்துக் கொண்ட நண்பர்களில் இருவர் மிகவும் நெருங்கிய நண்பர்களானார்கள். இருந்தாலும் அவர்கள் ஆரம்பம் முதலே ஒரு வித்தியாசமான ஆணை என்னிடம் எதிர்பார்த்தார்கள். இறுதியில் அவர்கள் என்னைப் புரிந்து கொண்டார்கள். இது இயற்கைக்கு மாறானதல்ல என்பதையும் மனித நேயத் தேவையென்பதையும் உணர்ந்தார்கள்.

மூன்று காரணங்களால் நான் இந்தத் தொழிலுக்கு விடைகொடுத்தேன். அதில் முதலாவது காரணம் என்னுடைய உடை அதாவது', எனது உத்தியோகபூர்வ சீருடையாக காற்சட்டை, சட்டை மற்றும் கழுத்துப்பட்டி என்பன. இரண்டாவது எனது தொழிலில் உயிரோட்டம் அற்ற இயல்பு', மூன்றாவது எனக்குப் பொருத்தமான இன்னுமொரு இடத்தைத் தெரிவு செய்வதில் என்னுள் காணப்பட்ட ஆர்வம் காரணமாக இருந்தது.


பின்னர் நான் எனது கனவு நகரமான மும்பையைச் சென்றடைந்தேன். அங்கு திரைப்படத் தயாரிப்பு தொடர்பான ஓராண்டு டிப்ளோமா பாடநெறியைக் கற்று நான் திருப்தி அடைந்தது மட்டுமல்லாது எனக்குப் பொருத்தமான தொழில் அதுதான் என்பதையும் உணர்ந்தேன். திரைப்படத்துறை என்னுடைய துயர அலைகளைப் போக்கும் மருந்தானது. கல்வியாண்டின் முடிவில் விவரணத் திரைப்படமொன்றைத் தயாரிப்பதற்கான இறுதிச் சுற்றுக்குரிய விடயத்துறைகளை தெரிவு செய்யும் நேரம் வந்தது. இது ஆறு பேரைக்கொண்ட ஒரு குழுவுக்கான குழுச்செயற்பாடாகவே எங்களுக்கு வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறுபட்ட பாலியல்பு (Transsexulity) என்பதை, எங்கள் குழுவின் தொனிப்பொருளாக நான் முன்மொழிந்தேன். என்னைப் பற்றி நன்கு அறிந்த நண்பர்கள் இருவர் கைகளை உயர்த்தி ஆதரவளித்தனர். அதைத் தொடர்ந்து எஞ்சிய மூவரும் அதை ஆமோதித்தார்கள்.

திரைப்படத்துக்காக நாங்கள் தெரிவு செய்த தலைப்பு "To be or Not to be" என்பதாகும். அது பொருத்தமானதென்பதை உணர்ந்த நான் பின்னர் அதை மாற்ற வேண்டுமென எண்ணினேன். மறுநாள் காலையில் என் மனம் "To be..... Me" என அந்த தலைப்பை மாற்றம் செய்யுமாறு தூண்டியது. இந்தப்படம் மூலம் சமுதாயத்திற்கு வெளிக்கொண்டு



கரசல் அறுவைச் சிகிச்சைக்கு முன் 'குன்ராஜ்' ஆக இருந்த போது

வரப்படும் விடயங்கள் பற்றி நான் திட்டமிடவில்லை. தகவல்கள் திரட்டப்படும்போது என் குழுவில் இடம்பெற்ற மற்றவர்களும் இதே நிலையில் இருப்பதைக் கண்டேன். எனது நெடுநாள் ஆவல், பிறரால் நிறைவேற்றப்படுமென்ற ஓர் எதிர்பார்ப்பு என்னுள்ளே உருவானது. பின் நானே அதை எதிர்கொள்ள நேரிட்டது. " நான் □நானானேன்"

கமரா முன் நிற்க தீர்மானித்த அந்த நாள் வியப்பானதாகவும் ஜனரஞ்சகமானதாகவும் இருந்தது. எனது கதையை ஒத்த கதைகளைக் கூறுபவர்களையும், என்னைப்போன்று வாழ்க்கையில் துன்பத்தை அனுபவிப்பவர்களையும் எங்களால் கண்டுபிடிக்க முடிந்தது. பிறருக்கு செவிமடுக்கவும் எங்கள் கதையை வெளிக்கொண்டுவரவும் முடிந்தது. கடவுள் எனக்கு அநீதி இழைத்துவிட்டாரென்ற எண்ணம் கொண்டிருந்த நான் அநீதி இழைக்கப்படவில்லை என்பதையும் நான் சாதாரண ஒரு மனிதப்பிறவி அல்ல என்பதையும் உணர்ந்தேன். நான் கடவுளின் விருப்பத்துடன் ஒன்றித்துவிட்டேன். "To be ..... Me" அந்தவருடத்தின் மிகச்சிறந்த விவரணத் திரைப்படமானது. என்னைப்போல் இது போன்ற பிரச்சினைகளுக்கு ஆட்பட்டுக்கிடக்கும் ஆயிரக்கணக்கான பெண்கள் மற்றும் ஆண்களின் உணர்வுகளை உலகின் கவனத்திற்குக் கொண்டு வந்தேன்.

பல வருடங்களாக நான் SRS (Sex Reassignment Surgery) எனப்படும் பாலுறுப்பு மாற்று அறுவைச்சிகிச்சை பற்றிய தகவல்களைத் தேடிக்கொண்டிருந்தேன். திரைப்படத்திற்கு ஏற்புடையதான எனது ஆய்வுகள் எனது நிலை சரியென்பதையும் அது உரிமை என்பதையும் உறுதிப்படுத்தியது.

அந்தத் திரைப்பட இறுவெட்டுடன் வீட்டுக்கு வந்தேன். மாறுதல் தேவைதானென்பதை அது மூலம் எடுத்துக் காட்டினேன். இதைப் பார்த்த அப்பா என்னிடம் ஒரேயொரு கேள்வி கேட்டார். "நீர் எப்போ போகப்போகிறீர்?" அது என்னைத் திடப்படுத்தியது.

ஒன்றரை ஆண்டுகளுக்கு முன் நான் எனது பாலுறுப்பு மாற்றுச் செயற்பாட்டை ஆரம்பித்தேன். அதற்கு மேலும் ஒருவருட காலம் தேவைப்பட்டது. இந்த மாற்றுக்காலம் சமூக, உடல் மற்றும் உள ரீதியில் துன்பம் நிறைந்த காலம். அனுபவம் மிக்க திரைப்பட இயக்குனர் ஒருவர் அவருடைய உதவியாளராக என்னைத் தெரிவு செய்தமை எனக்கு அதிஷ்டகரமாக அமைந்தது. அவருடைய உதவியாட்கள் கடவுள் எனக்கருளிய அரிய பொக்கிசங்கள். அவர்கள் என் நிலையைப் புரிந்து கொள்வதில் உயரிய முயற்சி மேற்கொண்டதோடு, எனது மாற்றுக் காலத்தில் பல வழிகளிலும் உதவினார்கள். நிந்தனைகள், நகைத்தல்களுக்குப் பதிலான அன்பும் கருணையும் பரிவும் பாசமும் என்னைச் சூழ்ந்தது. இறுதியான 20 மாதங்களில் என்னுடைய அகத்தோற்றம் ஓர் உறுதியான படிநிலையை அடைவதை உணர்ந்தேன். மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. நான் கேட்க வேண்டும் என்று நெடு நாட்களாக ஆவல்கொண்டிருந்த வார்த்தைகள் என் காதை எட்டியது. கூலி வாகன ஓட்டுனர் ஒருவர் "மேடம் கஹான் ஜானா ஹாய்..?" (அம்மணி எங்கே போக வேண்டும்?) என்றார். அந்த இனிய சொற்கள் இன்னிசை மெட்டுக்களாக என் காதில் விழுந்தன.

2007 ஒக்டோபர் 19 ஆம் திகதி பக்கொக் நகரின் வைத்தியசாலையொன்றில் வஜினோப்லாட்ரி (Vaginoplasty) அறுவைச் சிகிச்சை மூலம் எனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண் குறி அகற்றப்பட்டு பெண்ணுறுப்புப் பொருத்தப்பட்டது. செட்டவுட் என்ற வைத்தியர் இந்த அறுவைச் சிகிச்சையை மேற்கொண்டார். வேண்டுதலுக்கமைய உணர்வுகளாலும் உள்ளத்தாலும் பெண்ணாக வாழ்ந்த எனக்கு நான் விரும்பும் புறத்தோற்றம் கிடைத்தது. நாளொன்றுக்கு நான்கு மாத்திரைகள் எடுக்க வேண்டும். தவிர ஆயுள் காலம் வரை ஹோர்மோன்களுக்கான சிகிச்சை பெற வேண்டியுள்ளது. அதேபோல் முகத்தோற்றத்தை மாற்றியமைப்பதற்கு இலத்திரனியல் சிகிச்சை பெற வேண்டும். இதற்கு ஓராண்டு காலம் தேவை', இந்த அறுவை சிகிச்சைக்கு செலவான தொகை இந்திய ரூபாவில் சுமார் ஐந்தரை இலட்சம் இத்தொகையில் வைத்தியர் செட்டவுட் அவரின் கட்டணமும் அடங்கும்.

இதுபோன்ற உறுப்பு மாற்று அறுவைச்சிகிச்சைகளுக்கு (SRS) தாய்லாந்து பிரபலம் பெற்றுள்ளது. அங்கு தங்கியிருந்த மூன்று வாரகாலத்தினுள் இதே அறுவைச் சிகிச்சையை செய்து கொள்ள பல நாடுகளிலில் இருந்தும் மாறுபட்ட வயதெல்லைகளைச் சேர்ந்தவர்கள் வந்திருந்ததைக் கண்டேன். செட்டவுட் மாதமொன்றுக்கு சுமார் இருபது Vaginoplasty அறுவைச் சிகிச்சைகளை மேற்கொள்கிறார். நடுத்தர வயதுள்ள ஒரு பெண் அவருடைய கணவரை இதே அறுவைச் சிகிச்சைக்கு அழைத்து வந்திருந்ததைப் பார்த்த நான் ஒரு கணம் நடுநடுங்கிப்போனேன்.

கணவர் அல்லது மனைவி மாறுபட்ட பாலியல்பைக் கொண்டுள்ள, தன் துணைவர் அல்லது துணைவியுடன் மிக நெருங்கியிருப்பார்களென்ற செய்தியை நான் இணையத்தில் வாசித்தது உண்டு. இந்த அனுபவம் தூய்மையான அன்பின் அனுபவமல்லவா?

அறுவை மருத்துவரின் மருத்துவச் சான்றிதழில் நான் "செழுமையற்ற பெண்" எனக் கூறப்பட்டிருந்தது. அந்த இரண்டு சொற்களும் மிகவும் வலுவானவை, குறிப்பாக முதலாவது சொல் மிகவும் தீவிரமானது. இருந்தபோதும் என்னைப் பொறுத்தவரையில் இரண்டாவது சொல்தான் தீவிரமானது. தாய்மையென்பது உண்மையில் பிறப்புக் காரணி மட்டுமல்ல. அதே போல எதிர்ப்பாலுறுப்புக்கு இசைவு கொண்ட மனநிலை மெய்யாகவே ஆண் அல்லது பெண்ணின் பௌதீகத் தோற்றத்தை வெளிப்படுத்தும் காரணியுமல்ல. உளவியல் நிலையுமல்ல. பால் அடையாளத்தை உறுதிசெய்ய வேண்டுமானால் மருத்துவ ரீதியான பரிகாரங்கள் தேவையென்பது உண்மைதான்.



எனக்கு பல தேவைகளை ஈடேற்றிக்கொள்ள வேண்டியுள்ளது', எனது வாழ்வைக் கட்டியெழுப்ப எனக்கென்று ஒரு அடையாளம் தேவை. அது தவிர ஆடையணிகள், பாதணி, காதணி, அழகுசாதனப் பொருட்கள் அவசரத்தேவையாக உள்ளன. நான் சமீபகாலமாக காப்பாற்றி வந்த பிறர் காப்பாற்ற முனையாத ஒன்று என்னிடம் உள்ளது. அதுதான் என் வாழ்க்கை.

இந்த அனைத்து நடவடிக்கைகளிலும் எனது குடும்பத்தினரின் பங்கு அளப்பரியது. அவர்களின் பங்களிப்பை உலகத்தின் எந்தவொரு நபரோடும் ஒப்பிட முடியாது. இதுபோன்ற பெற்றோரைச் சகோதரர்களை இவ்வுலகத்தில் தேடிக் கண்டுபிடிப்பது மிக அரிது என நான் நம்புகிறேன்.

சிகிச்சை நிறைவு பெற்றதும் திரும்பி வீடு செல்வதில் எனக்குள் சிறு தயக்கம் இருந்தது. ஓர் ஆணாக வீட்டைவிட்டு வெளியேறிய நான் ஒரு பெண்ணாக வீடு செல்வது எப்படி என்ற கேள்வி மனதைத் தொட்டது.

அயலவர்களின் கண்களில் படாமல் வீடுவந்து சேர்ந்தேன். வீட்டினுள்ளே சில நாட்களைக் கழித்த நான் மீண்டும் மும்பைக்குப் போகத் தயாரானேன். நான் எனது பயணத்தை யாரும் காணாதவாறு விடியலில் ஆரம்பித்தேன். நான் அங்கு இரு வாரங்களுக்குத் தங்கியிருக்க எண்ணினேன். இதனிடையே அம்மா தொலைபேசி மூலம் "எல்லாம் சரியாகி விட்டது வீட்டுக்கு வாருங்கோ" என்று கூறினார். உங்களால் நம்ப முடியுமா? நான் வீட்டில் இல்லாதபோது எனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாவும் அப்பாவும் வீடு வீடாகச் சென்று அயலவர்களிடமும் உறவினர்களிடமும் எனது விருப்பம் மற்றும் அறுவைச் சிகிச்சை பற்றி எடுத்துச் சொல்லி அறிவூட்டியிருந்தார்கள்.

இது என்னால் நம்பமுடியாத ஒன்று. சமுதாயத்தில் ஒருபடி உயர்ந்த நிலையிலுள்ள எனது பெற்றோர் எனக்காகச் செய்யும் காத்திரமான அர்ப்பணிப்பை எடுத்துச் சொல்ல வார்த்தையில்லை. இவர்கள் போன்றவர்களை உலகத்தின் எந்த மூலையிலும் காணமுடியாது. அவர்கள் எப்போதும் என்னுடைய விருப்பத்திற்கும் சந்தோசத்திற்கும் தடைபோடவில்லை. உளத் தடுமாற்றத்திலிருந்து என்னை மீட்டார்கள். இந்த விடயத்தில் என்னைப் போல அதிர்ஷ்டமுடையவர் எவரும் இருக்கமுடியாதென்பதை நானறிவேன். எனவே அவர்களின் வாழ்க்கையை சீராக்கிக்கொள்ள அவர்களுக்கு உதவ வேண்டும்.

எனவே பால் அடையாளம், உணர்வுகள் மற்றும் ஆசைகளுக்கு அமைய வாழ நினைக்கும் மனநிம்மதியற்ற பொருளாதார ரீதியிலும் சமூக ரீதியிலும் பின்தங்கியுள்ள அநேகமான மாற்றுப் பாலியல்பு கொண்டவர்கள் இந்தியாவில் வாழ்ந்து வருகின்றார்கள். அவர்கள் "ஹிஜ்ரா" என்றழைக்கப்படுகிறார்கள். இவர்களில் சிலர் வீதியோரங்களிலும் மற்றும் சிலர் பாலியல் தொழிலாளர்களாகவும் தங்கள் வாழ்வை அமைத்துக் கொண்டுள்ளார்கள். காரணம், கல்வி தொழில் உள்ளிட்ட சமுதாய வரப்பிரசாதங்களை நெருங்குவதற்கு அவர்களுக்குள்ள தடைகளாகும். இவர்களும் மனிதர்கள்தான். இருந்தாலும் சமுதாயம் இவர்களை மனிதநேயக் கண்கொண்டு பார்க்கத் தவறியுள்ளதால் பல இன்னல்களையும் துன்புறுத்தல்களையும் அனுபவித்துக் கொண்டு இருக்கிறார்கள். இந்தியாவிலும் உங்கள் நாட்டிலும் ஏன் உலகம் முழுவதிலும் இவ்வாறு மாற்று பாலியல்புப் பருவத்துடன் (Trans Sexual Trans Gender) வாழ வேண்டியுள்ளதால் நிர்ப்பந்திக்கப்பட்ட ஆண்களும் பெண்களும் இருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும்.

"என் கதையைக் கேட்ட நீங்கள், என்னைத் தனிமைப்படுத்திவிடமாட்டீர்கள் என நம்புகிறேன். என்னைப்போன்ற மற்றையவர்களையும் தனிமைப்படுத்தாதிருக்க நாம் அணி திரள்வோம். இதுவே நான் உங்கள் முன் வைக்கும் வேண்டுகோள்".

செயலமர்வில் பங்குபற்றிய பலதரப்பட்ட வயதெல்லைகள், தொழில்களைப் பிரதிநிதித்துவம் செய்த சுமார் பதினொரு ஆசிய நாடுகளைச் சேர்ந்த பெண் ஆர்வலர்கள் அனைவரின் கண்களையும் ஈரமாக்கிய கசல் இந்த விடயம் சம்பந்தமாக எம்மில் விழிப்பை ஏற்படுத்தினார்.

இதுவரை காலமும் இது எமக்குரிய பிரச்சினை அல்லவென ஓரம்கட்டி அல்லது இது ஒரு சிலரின் பிரச்சினை மட்டுமே எனக் கருதி அதுபற்றி கரிசனை கொள்ளத் தேவையில்லை எனக் கொண்டு எமக்கு இடையீடு செய்ய இவற்றைவிட பாரதூரமான எத்தனையோ பல பிரச்சினைகள் உண்டு என மறந்துபோன அல்லது மரபு ரீதியான கருத்தியல்களில் கொண்டிருந்த பற்றுக் காரணமாக கவனம் ஈர்க்கப்படாத மாறுபட்ட பாலியல்பு மற்றும் அவர்கள் எதிர்நோக்கும் உள ரீதியான நெருக்கடிகள் பற்றியும் அவர்களுடைய மனித உரிமைகள் பற்றியும் நாங்கள் ஆழமாக சிந்திக்க ஆரம்பித்தோம். அறியாமையாலும் மூட நம்பிக்கைகளாலும் முடங்கியிருந்த எமது உள்ளங்களுக்கு கசல் ஒளியூட்டியுள்ளார்.

தன் இனிமையான குரலில் கசல் பாடிய கீதத்தைக் கேட்டுக்கொண்டே ஆதவன் இமயமலைத் தொடர்களுக்கிடையே அஸ்தமனமாகி மீண்டும் தன் சுடர்களை பரப்பிக்கொண்டு உதயமானதுபோல நாமும் கசல் பற்றிய அன்பு கலந்த நினைவுகளுடனும் மாறுபட்ட பாலியல்பைக் கொண்டவர்களின் உரிமைகளை வென்றெடுக்கும் மனவுறுதியுடனும் நாடு திரும்பினோம். தூரத்தில் அவரின் பாடல் கேட்பதுபோல் என்னுடைய எதிர்பார்ப்புகள் அவ்வப்போது உயிரூட்டப்படுகிறது.

சமூகத்தில் நிந்தனைக்கும், நகைத்தலுக்கும் மற்றும் ஓரங்கட்டப்பட்டுமுள்ள சிறுபான்மைக் குழுமமாக வாழும் மாறுபட்ட பாலியல்பைக் கொண்டவர்களின், பாலியல் ரீதியான உரிமைகள் உள்ளிட்ட உரிமைகளை மனித உரிமைகள் சட்டகத்தில் எவ்வாறு உள்வாங்க முடியும்? அதன்பால் ஆர்வலர்களாக மாறுவது எப்படி? இந்த மரபு ரீதியான ஆண் வழிச்சமூகத்தினுள் அது உண்மையிலே சவாலான ஒரு விடயம் என்பதை விளங்க அரும்பத விளக்கச்சொற்கள் தேவையில்லை. எனினும் இந்தச் சவால்களை வெற்றிகொண்டு இரக்கத்திற்காக அல்லாது கௌரவத்திற்குப் பாத்திரமாகும் ஓர் குழுமமாக மாறுபட்ட பாலியல்பைக் கொண்டவர்கள் அவர்களது அடையாளத்தை விரும்பியபடி உறுதிசெய்து கொண்டு வாழக்கூடிய மனிதநேயம் பேணப்படும் ஒரு சமுதாயத்தை நாம் எவ்வாறு கட்டியெழுப்ப முடியும்? இதுதான் நான் முன்வைக்கும் வினா. ■

**சுமிக்கா பேரேரா**

*புகைப்படம் - சஞ்ஜய் அஹல்வத் The week சஞ்சிகை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்று பொழுதுகளாலான பச்சைக் கண்ணாடிக்குள் நான்

பச்சைக் கண்ணாடி வெளிக்குள் உள் நுளைந்தேன்
கண்ணாடிக்குள் உலாவினேன்
நெருப்புப் பொறியென சில குமிழிகள் சிதறின
மெல்லிய வளையங்களாய் நீர் தளும்பின

கண்ணாடிக்குள் அலையலையாக வீசியது காற்று
கண்திறந்தேன்
அபூர்வமான மெழுகுக் கடல்
ஓர் காலைப்பொழுதென தெரிகின்றது
விளையாடத் தொடங்கிவிட்டேன் புரியாதவற்றையெல்லாம்
அவை தீர்ந்தபாடில்லை"
பார்த்திருக்க மெழுகுக் கடல் கரைந்தோடிற்று

வம்மிப் பூக்கள் இறைந்துகிடந்த கண்ணாடியுள்
தொட்டாச் சுருங்கிகள் முட்களை நீட்டி சுள்ளென குத்தின
பகல்ப்பொழுது
முற்றிய வசைமொழியாய் அறைகின்றது

பகலின் கதவினுள் நுளைகிறேன்
வெம்மையான சிறு நிழலில்
பசிதேங்கிய உடலை சுருக்கி மடங்கிக் கிடக்கிறேன்
தனிமை ஓணான்
ஒளித்தாரைகளைப் பிடித்துத் தாவிக் கொண்டிருந்தது

"வானம்" அந்த அப்பாவி முகத்துடன்
வெயிலை உரச
வாக்குறுதிகளின் அர்த்தமற்ற நடிப்பு
தளர்ந்த நிலைக்கு திரும்புகின்றது

மூடாத ஜன்னல்வழி கேட்டுக்கொண்டிருக்கிறது
மர்மங்களின் சிதில வெடிப்புக்கள்

பின்னர்
காத்திருக்கத் தொடங்குகிறேன்
இரவு மகாராணியின் விருந்து மேசையை எதிர்கொள்ள

stock.xchng

மகாராணி முன் அரசவம்சத்தின் பல்லாண்டுச் செருக்குகளோடு
நான் அமர்ந்திருப்பதை
உள்ளூர வியந்தவள் ரசிப்பதை நானும் ரசித்து
போதையேறுவதற்கு இரவாகிய கறுப்பு திராட்சையை ருசிப்தற்கு
*அவ்வாவின் கனியை பிழிந்த சொட்டுக்களை
நட்சத்திரக் கிண்ணத்திலிருந்து ஊற்றிப் பருகுவதற்கு
நீண்ட மேசையின் அதி விசேஷங்களை நேர்கொள்வதற்கு

எல்லாவிதமான அயர்ச்சிகளையும் மறந்து
நான் நிர்வாணமாகும் போது
மகாராணி புன்னகைப்பாள்

கரும்பச்சைக் கண்ணாடிக்குள் கேட்டுக் கொண்டிருக்கும்
காமத்தின் வேட்கை மிகுந்த சங்கீதம்

உன் உடல் மாபெரும் இசை
மற்றும் எல்லையற்ற பச்சைவெளி என்பாள் என்னருகில் மகாராணி


அனார்

* அவ்வா இஸ்லாமிய மரபில் முதல் பெண்ணாகக் கருதப்பட்டவள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்காவுக்கு பறவைபோல சிரிப்பு



உயரத்தில் அவ்வளவு உயரத்தில்
அக்காவை வைத்திருந்தோம் இன்னொரு தாயாக

அவளது கரங்கள்
எப்போதும் வற்றாது கிளை பிரிந்தோடும் நீரோடை
அதன் கரையின் குளிர்மையில்
தங்கைகளும் தம்பிகளுமாக விளையாடிக் கொண்டிருந்தோம்

பொறுப்பு வாய்ந்த முடிவுகளை
அவளிடமிருந்துதான் நாங்கள் பெற்றுக்கொள்கிறோம்

சமமான நம்பிக்கை
சமமான அன்பு
எப்போதும் வண்ணங்கள் வெளிப்படும் ஆகாயம் அவளாகினாள்

மென்மையாக ஊறுகின்ற குளிர்காலத்தில்
செடிகளைப் பிடுங்கி நடுவதும்
தென்னோலை உரசல்களைப்போன்று
பாடலிசைப்பதுமாக அலைவாள்

அன்பூறும் நேரத்தில்
பொங்கும் அன்போடு அவள் கரம்பிடித்துச் சுற்றுவேன் சுழற்றுவேன்
அப்போது அக்காவின் சிரிப்பு பறவையைப்போல் பறந்து செல்லும்

நான் இன்னும் அவள் சிரிப்பதற்காய்
கிறு கிறுத்து ஆடும் பொன்வண்டு

பின்பொரு நாள்
ஈயக் கரைசல் துளிகள் அவள் கண்களில் கசிந்ததைப் பார்த்தேன்
நானோ புதிர்கள் புரியாத குட்டிப் பெண்

தூண்டில்போட அழைத்து வந்தோம் அக்காவை
பாசி படிந்த குளக்கரையில் கால்களை விட்டு
நீரை ஆர்வமின்றி அளைபவளிடம் கேட்டேன்
இந்த குளித்திப் பூச்சிகள் வரிசையாக எங்கே செல்கின்றன
"கனவுகள் முடியும் இடத்திற்கு என்றாள்"

கலைந்து ஒழுங்கில்லாமல் கிடந்த அவளது
நீண்ட கூந்தலை பின்னி முடித்தபொழுது
அக்கா என் மடியிலே நித்திரையாகியிருந்தாள்

அதன் பிறகு வேறொருபோதும்
பறவைகள் சிறகடித்துச் செல்லும்
சிரிப்பை அக்கா சிரிக்கவேயில்லை

stock.xchng

**அனார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை



# கைலாசம்

பேய்த்தொடர் ஒன்றை டி.வி.யில் பார்க்கத் தொடங்கியதுமே கைலாசம் கிடுகிடுவென ஆட ஆரம்பித்தது. 'டிகுடிகுதக், டிகுடிகுதக்' என்று சத்தம் வேறு கூடவே. சலித்துக் கொண்டே எழுந்து ரப்பர் செருப்பை அணிந்து கொண்டு கைலாசத்தைத் தொட்டாள். தடவித் தந்தாள். அடங்குவதாக இல்லை கைலாசம். பேய்த் தொடரில் சவப்பெட்டியின் மூடி திறந்து பேய் எழுந்து உட்கார்ந்து கொண்டு விழித்தது. ஆண் பேய். பெரிய கிறிஸ்டாபர் லீ என்று நினைப்பு நடிகனுக்கு. மொட்டைத் தலையும் மஞ்சள் ஒளிவிட்ட கண்களுமாய் பேய் முழி முழித்தான். கைலாசம் விடாமல் ஆடியது. இரு பக்கமும் கைகளைப் போட்டு அணைத்துக் கொண்டாள். "கைலாசம், கைலாசம்" என்றாள் மென்குரலில். சன்னதம் வந்தது போல் மீண்டும் ஆடியது. கன்னத்தை வைத்தாள் அதன் மேல். "அடங்கு கைலாசம், போதுமே" என்றாள். 'தக்தக்தக்'கென்று ஒலியைக் குறைத்துக் கொண்டே வந்து ஓய்ந்தது. செல்லமாக ஓர் அடி வைத்துவிட்டு மீண்டும் பேய்த் தொடர் பார்க்க அமர்ந்தாள். அழகற்ற ஆண் பேய் உலவிக்கொண்டிருந்தது அங்கும் இங்கும், பெண்களின் ரத்தத்தை உறிஞ்ச.

அலட்சியமாகப் பார்த்தாள் தொடரை. கொஞ்சம் இளவயதுப் பேயாக இருக்கக் கூடாதா? வழுக்கைத் தலையும் தொந்தியும் தொப்பையுமாய் இது என்ன பேய்? பெண் பேயாக இருந்தால் மட்டும் அழகாய் , இளம் வயதாய், மெல்லிய வெள்ளைப் புடவையுடன் உள்ளாடை தெரிய, கொலுசு குலுங்க நடந்து பாட்டு வேறு பாடும் பெண் பேய்.

கைலாசத்திடமிருந்து ஓசையில்லை. கைலாசம் அவளுடைய குளிர் பதனப் பெட்டி. ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எண்பத்தைந்தில் வாங்கியது. ஆரம்ப காலத்தில் ஒரு தொல்லையும் இல்லை. அப்போது அதற்குப் பெயரில்லை. கடந்த பத்து வருடங்களாக உறைபனிப் பெட்டியில் இமாலயமே வந்து நிற்பது போல் பனி உறைய ஆரம்பித்தது. அந்தப் பக்கம் எல்லாம் யாத்திரை போனதில்லை அவள். மும்பாயில் இடிந்து விழுவது போல் நிற்கும் ஒரு கட்டிடத்தின் மூன்றாம் மாடியில், இமயமலைப் பக்கத்து யாத்திரை ஸ்தலங்களை எல்லாம் நினைவு படுத்தும் படி பனி உறைந்தது குளிர் பதனப் பெட்டியில். சில சமயம் நெட்டுக் குத்தாய் நடுவில் நிற்கும் இறுக உறைந்த ஓர் ஐஸ் கட்டி. சிவலிங்கம் போல் எத்தனை முறை மின்சாரப் பொத்தானை அமுக்கி அணைத்தாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருகாது லிங்கம். சில சமயம் பெயர்த்தெடுக்க வேண்டி வரும். பெயர்த்தெடுத்துக் கழுவும் தொட்டியில் போட்ட பின்பு கூட அது உருக நேரம் பிடிக்கும். உருக மறுக்கும் லிங்கம். அதன் பிறகுதான் 'கைலாசம்' என்ற நாமகரணம்.

வீட்டில் உள்ள அனைத்துப் பொருட்களுக்கும் பெயர் உண்டு. தனஞ்செயன் தந்த முள்ளுச் செடிக்குப் பெயர் தனுஷ். சிறு சிறு தட்டை இலைகளாய்ப் பரவும் செடிக்குப் பெயர் மேகா. தான் மரம் என்று நினைத்துக் கொண்டு வெடவெடவென்று உயரத் தொடங்கி காலை எழுந்ததும் கண்ணில் படும் செடியின் பெயர் உஷா. கோணலும் மாளலுமாய் வளர முற்பட்டுக் கொண்டிருக்கம் செடியின் பெயர் வக்கிரன். சேயன் கேலி செய்தான் ஒரு நாள். "அது என்ன முள்ளுச் செடிகளுக்கும் கோணல் செடிகளுக்கும் மட்டும் ஆண் பெயர்?"

பெயரிடுவது அவ்வளவு தற்செயலான செயல் அல்ல என்று தோன்றியது. குளிர் பதனப் பெட்டி கைலாசத்துக்கும் இன்னொரு கைலாசத்துக்கும் தொடர்புண்டோ ஒருவேளை? பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி செய்துகொண்டிருந்த போது மாணவர்கள் விடுதி இரு பாகங்களாக இருந்தது. வார்டன் வீட்டை ஒட்டியிருந்த அறைகள் பெண்களுடையது. எதிர்ப்புறம் ஆண்கள். இடையே சாப்பாட்டுக் ஹால். டீ.வி வைத்த பொது ஹால், புல்வெளி. ஆராய்ச்சி செய்யும் சோர்வைப் போக்கிக் கொள்ளத்தான் அவளும் தோழிகளும் ஆண்களுக்கு நாமகரணம் செய்யும் வேலையை ஆரம்பித்தனர். ஆரம்பத்தில் 'ஒட்டடைக் கொம்பு', 'தீப்பெட்டி' என்று நேரிடை நாமகரணங்களாகவே அவை இருந்தன. போகப்போக அவை சிக்கலான உட்பொருள் உடைய நாமகரணங்களாக மாறின. பல்லாயிரம் அர்த்தங்கள் உள்ள நாமகரணப் படலத்தை ஆரம்பித்து வைத்தது பேராசிரியர் குலாட்டிதான். புதிதாகத் திருமணம் செய்துகொண்டவர். குன்வந்த் கவுர்தான் அந்தச் செய்தியைக் கொண்டு வந்தாள். பேராசிரியரின் மனைவி திருப்தியாக இல்லையாம். எதுவும் நடக்கும் முன்பே பேராசிரியர் அவசரமாக முடிந்து போய்விடுகிறாராம். பேராசிரியர் சென்று பார்த்த டாக்டர் குன்வந்தின் சித்தப்பாவின் தூரத்து உறவாம். அன்றிரவு பேராசிரியருக்கு வைத்த நாமகரணம் 'கொட்டும் அருவி'.

தீபிகாவின் காதலன் சிகந்தர் ஒன்றாம் மாடியில் பெண்கள் விடுதியை நோக்கிய அறையில் இருந்தான். அங்கிருந்து அவன் இரண்டாம் மாடியில் இருந்த தீபிகாவுக்கு சமிக்ஞைகள் அனுப்புவது வழக்கம். பெண்கள் விடுதியின் சன்னல்கள் பெரும்பாலும் திரைமூடப்பட்டோ, சன்னல் கதவுகள் மூடப்பட்டோதான் இருக்கும். ஒரு நாள் விடிகாலை சுதா ஜன்னல் கதவைப் படபடவென்று தட்டினாள். இவள் திறந்ததும் "ஜன்னலைத் திற சீக்கிரம்" என்று பரபரத்தாள். இவள் திறக்கும் முன் அவளே திறந்து "பாரு" என்றாள். கீழே முதலாம் மாடியில் சிகந்தரின் ஜன்னல்க் கதவு திறந்து கிடந்தது. கட்டிலில் சிகந்தர் நிர்வாணமாகக் கிடந்தான். போர்வை காலடியில் கிடந்தது. அவன் நீண்ட குறி ஒரு பக்கம் மடங்கி விழுந்திருந்தது. அவள் பார்க்கும் முதல் ஆண்குறி. சுன்னத்து செய்த குறி. சுதாவுக்கும் அது முதல் முறையாம். சுதா ஓடிப்போய் தன் பைனாகுலரை எடுத்து வந்தாள். இருவரும் வெகு அக்கறையுடன் அந்தக் குறியைப் பார்த்தனர். அதை மட்டும் பெரிதாக்கிப் பார்த்தபோது, அவன் உடலிலிருந்து விலகிய ஒன்றாய் ஒரு குட்டிப் பாம்பாய் அது பட்டது. சாதுப் பாம்பு. அவன் உடல் அசைவுகளுக்கு ஏற்ப அங்கும் இங்கும் மடங்கி விழுந்த பாம்பு.

விரைவில் ஒவ்வொருவராய், தீபிகாவைத் தவிர, நின்று பார்த்து விட்டுப் போயினர்.தான் ஒரு தரிசனப்

---

**ஏரியன் அடியே கிடந்த**
**உன்னுடலை**
**எரித்தாகிவிட்டது.**
**அதன் சாம்பலை**
**ஆற்று நீரில்**
**கரைத்தாகி விட்டது.**
**உன் சாம்பல் கரைக்கப்பட்ட**
**அந்த ஆற்று நீர் வறண்ட**
**பிரதேசத்தில் பாயட்டும்.**
**அதில் பசுமைப் புல்லாய்**
**முளைக்கட்டும். பசித்த**
**இளம் ஆடோ மாடோ**
**அதைப் புசிக்கட்டும்.**
**அதன் உடலில் பாலூறட்டும்.**
**ஏதாவது மகவின் வாயில்**
**அந்தப்பால் இனிக்கட்டும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பொருளாய்க் கிடக்கின்றோம் என்று தெரியாமல் நல்ல உறக்கத்தில் கிடந்தான் சிகந்தர். சிகந்தருக்கு 'பாம்பு' என்று பெயரிட்டனர். சுதா நன்றாகப் பாடுவாள்.சிகந்தர் எங்காவது அருகில் தென்பட்டால் "நாதர் முடி மேலிரும்கும் நாகப்பாம்பே □"என்று முனக ஆரம்பித்து விடுவாள். "நல்ல பாட்டு சுதா. ஒரு நாள் நீ முழுப்பாட்டையும் எனக்குப் பாடிக்காட்ட வேண்டும்"என்பான் சிகந்தர். "கட்டாயம் கட்டாயம்" என்பாள்.

இப்படி நாமகரணப் படலத்தில் இருந்தபோது வைத்த பெயர் தான் கைலாசம். கைலாசத்தின் இயற்பெயர் சிவஞானம். அவனுடைய கால்சராய்கள் அவனுடைய குடும்பத்தையற்காரர் தைத்ததாம். இவனுடைய சிறுவயதிலிருந்து அவர் தான் உடைகள் தைப்பாராம். கால்சராயை வெட்டும் முறையை அவர் மாற்ற மறுத்ததாலோ என்னவோ அவன் சாய்ந்து உட்காரும் போதோ, கால்நீட்டி உட்காரும் போதோ, அவன் தொடையிடுக்கில் கால்சராய் துணி கூம்பி நிற்கும். 'கைலாஷ் பர்பத்' என்று குன்வந்த்கவுர் கைலாச பர்வதத்தின் ஹிந்திப் பெயரை அவனுக்கு இட்டாள். இவளும் சுதாவும் 'கைலாசம்' என்று அதைக் குறுக்கினர்.

நாமகரணப் படலம் வெகுநாட்கள் நீடித்தது. பிறகு அந்த உத்வேகம் வந்த வேகத்திலேயே மறைந்து போனது. அவர்கள் வைத்த பெயர்கள் அவர்களின் பாலுணர்வின் வெளிப்பாடுதான் என்று விவாதிப்பார்கள். உடல் அப்போது ஒரு பிரம்மாண்டம்.

அதன் ஒவ்வொரு துளையும், ஒவ்வொரு மேடும், ஒவ்வொரு இடுக்கும், ஒவ்வொரு நெளிவும் ஒரு விடுபடும் ரகசியம். உடலே உலகாய் விஸ்வரூபம் எடுத்த காலம் அது. அதன் ஒருசிறு இழைதான் கைலாசம்.

அவர்கள் எல்லோரையும் விடச் சற்றுப் பெரியவன் கைலாசம். கல்லூரியில் விரிவுரையாளராக ஐந்தாண்டு வேலை பார்த்த பின் ஆராய்ச்சி செய்ய வந்தவன். கலகலப்பானவன் இல்லை. சட்டென்று சிரிக்க மாட்டான். சற்று இறுகிய முகம். ஒட்ட வெட்டிய முடி. மழிக்கப்பட்ட முகம். கறுப்புச் சட்டமிட்ட கண்ணாடி. இவர்கள் முதிர்ச்சி இல்லாமல் இருக்கின்றார்கள் என்று அவன் கவனிப்பு. எதற்கெடுத்தாலும் 'பக்' என்று சிரிக்கும் அவர்களைப் பார்த்து சில சமயம் "பி சீரியஸ்" என்று அதட்டுவான். அவனைச் சுற்றி இவர்கள் வட்டமிட்டதற்குக் காரணம் அவன் வீட்டிலிருந்து தொடர்ந்து வந்தபடியிருந்த நெய், பருப்புப்பொடி, ஊறுகாய், முறுக்கு, பணியாரங்கள், பழங்கள் இவற்றின் மேலிருந்த ஆசையால்தான். அவனுக்கும் அது தெரியும் என்றே நினைத்தனர்.

ஒருநாள் அவன் ஊரிலிருந்து வந்திருந்த மலைப்பழத்தைப் பொது அறையில் உட்கார்ந்தபடி இவள் சுவைத்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்த போது கைலாசம் அங்கு வந்தான். பொது அறையில் அப்போது வேறு யாரும் இல்லை. அவன் கையில் இலையில் கட்டிய மல்லிகைப் பூ மணத்தது.

சட்டென்று அவள் அருகில் அமர்ந்து மல்லிகைப் பூவைத் தந்தான். "பூவே நீ வெக்கறதில்லையே? வெச்சிக்க" என்றான். சற்று ஆச்சரியமடைந்தாள். "எதுக்கு இதெல்லாம்?" என்றாள். "உனக்கு நல்ல நீள முடி. மத்தவங்க மாதிரி நீ வெட்டிக்கல. அதுல பூவெச்சா அழகா இருக்கும்" என்றான். இப்படிப் பேசுபவன் இல்லை அவன்.

கொஞ்சம் அதிர்ந்து போனாள். பூவை மறுக்கவில்லை. பூவை அலட்சியமாக தலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செருகிக்கொண்ட போது " மெல்ல மெல்ல வலிக்காம" என்றான்.

பல நாட்கள் மனப்பாடம் செய்து ஒப்பிப்பவன் போல் அவன் பேச ஆரம்பித்தான். " கமலம், உன்னை எனக்குப் பிடிச்சிருக்கு. உன்னை நெருங்கி தொடணும்னுட்டு இருக்குது. பொம்பளைனா என்னாட்டுனு எனக்குத் தெரியாது. உன்னை என்னோட அப்படியே சேர்த்துக்கணம்னுட்டுத் தோணுது. ராத்திரி பகலெல்லாம் உடம்பு பகபகன்னுட்டு எரியுது. என்னைக் கட்டிக்கச் சம்மதமா? என்றான்.

"என்ன இது சிவம்?" என்றாள் முற்றிலும் அதிர்ந்த படி.

" ஏன், நான் கேட்டது தப்பா? நீ என்னோட நடந்த வரபோது உன் கை என்மேல இடிக்குது. உன் மார்பு சில சமயம் உரசுது. அது அப்படியே தீ மாதிரி தகிக்குது கமலம். பூ மாதிரி மெத்துன்னுட்டு அது பட்டாலும் அது தீ கமலம்." என்று அரற்றிய படி அவளை முத்தமிட முயன்றான். "சிவம், ப்ளீஸ். இது நல்லா இல்ல. எனக்கு இது பிடிக்கல." என்றாள் அவனைத் தள்ளிய படி.

அவன் உடல் நடுங்கிய படி இருந்தது. கண்கள் நிறைந்துவிட்டன. "மன்னிச்சிக்க" என்றான். அறையைவிட்டு வெளியேறினான். அதன் பின் அவன் சற்று விலகியே இருந்தான். கள ஆராய்ச்சிக்காக லண்டன் போகும் முன் ஊருக்குப் போய் வந்தான். திருமணம் புரிந்து கொண்டு வந்தான். மனைவி டாக்டராம். அவன் லண்டன் செல்லும் முன் மனைவி வந்தாள். விருந்தினர் விடுதியில் இடம் இல்லாததால் தாழ்வாரத்தின் முனையில்லிருந்த இவளுடைய பெரிய அறையில் அவள் தங்கலாமா என்று வார்டன் கேட்டபோது இவள் மறுக்கவில்லை. அவர்கள் இருவரும் ஏதாவது ஹோட்டலில் அறையெடுத்துத் தங்கியிருக்கலாமே என்று தோன்றியது.

டாக்ரர் தேன்மொழி கலகலப்பாகப் பழகினாள். ஓர் ஆஸ்பத்திரியில் பெரிய பதவியில் இருந்ததால் கம்பீரமும் கமையும் மிடுக்கும் அவளிடம் இருந்தது.

ஒருநாள் இரவு இவளும் சுதாவும் பேசிய படி படுத்திருந்த போது தேன்மொழி உள்ளே வந்து புடைவையைக் களைந்து இரவு உடையை அணியலானாள். "டாக்டர், சாப்பாடு எங்கே சாப்பிட்டீங்க?" என்றாள் சுதா. " கனாட் ப்ளேஸ்ல ஒரு ஹோட்டல்ல" என்று அசட்டையாகப் பதில் வந்தது. "நிரூலாஸறி?" "மெற்றாஸ் கபே. மீல்ஸ். இன்றைய ஸ்பெஷல் ஜவ்வரிசி பாயாசம்" என்று கூறிய படி படுக்கையில் அமர்ந்தாள்.

சுதா இவளைப் பார்த்தாள். எழுந்து போக முற்பட்டாள். "உட்காரேன்" என்று அவள் கைகளைப் பற்றி அவளை உட்கார வைத்தாள் தேன்மொழி. " நீங்க சாப்பிட்டீங்களா?" என்று கேட்டாள். இருவரையும் பார்த்துச் சிரித்தாள். பேச்சுத் தொடங்கியது. தேன்மொழி சிவத்தின் தூரத்து உறவு. நன்கு படித்தவன், அவள் தொழிலை மதிப்பவன் கணவனாக வரவேண்டும் என்று காத்திருந்ததால் திருமணம் தள்ளிப் போயிற்று. குடும்ப நண்பர் ஒருவர் தான் சிவம் பற்றிக் கூறினார். சிவத்தின் அப்பாதான் திருமணத்தைப் பேசி முடித்தது. அவனுக்கு அம்மா இல்லை. அத்தைதான் அவனை வளர்த்தாள். உடன் பிறந்தவரும் இல்லை. அவன் மெத்தப் படித்தவன் என்பது தேன்மொழிக்கு மிகவும் பிடித்த விஷயமாக இருந்தது. புகைப்படத்தில்தான் பார்த்தாள். திருமணத்தின் போதுதான் நேரில் பார்த்தது. "சிவம் எப்படிப் பட்டவர்?" என்று கேட்டாள். " நீங்கதானே கட்டியிருக்கீங்க? உங்களுக்குத் தெரியாதா?" என்றாள் சுதா. "இல்ல சுதா. அவர் யாருன்னே தெரியல்ல. அவர் நல்ல படிதான் நடந்துக்கறாரு. ஒரு கோபமோ தாபமோ இல்ல. ஆனா அவர் என்ன தொடல இன்னும். நடக்கறப்போ கூட என்மேல அவர் கை படல. தோளுல கைபோட்டு அணைக்கல. இன்னும் கலியாணம் கட்டாத உங்ககிட்ட சொல்றேன் இதையெல்லாம். தப்பா நினைக்காதீங்க. உடம்பு பத்தின மோகம், வெறி, ஆவேசம் எதுவுமே இல்லாம வெறும் பொம்மையா இருக்காரு. நல்ல மனுஷன்தான். கடிஞ்சு ஒரு வார்த்தை பேசல. ஹோட்டல்ல இருக்கலாமேன்னுட்டு எவ்வளவோ சொன்னேன் கேக்கல. இப்படி உங்க ரூம்ல உங்களுக்குத் தொல்லையா□□.ஏதோவொரு காலகட்டத்தில உறைஞ்சு போயிட்டாருன்னு படுது. எப்ப இளகப் போறாரோ யாருக்குத் தெரியும்□□□..? தேன்மொழி தலை குனிந்தபடி தன் இரு கைகளையும் பிசைந்தபடி அமர்ந்திருந்தாள்.

பெண்ணுடலின் ரகசியங்கள் என்ன? அவள் அல்குல் எப்படி அமைகிறது? அதன் மேலுள்ள ஐது மயிர் தொடும்போது பட்டுப்போல் இருக்குமா அல்லது கம்பளிபோல் முரடாய் இருக்குமா? அது படமெடுக்கும் பாம்பின் தலைபோல் இருப்பதாகக் கூறியிருக்கிறது ஒரு பழங்கவிதையில். கமலத்துடையது எப்படி இருக்கும்?

மோகம் என்பது கூட ஒரு போதையா? 'கிறுகிறுக்குதடீ' என்று சொல்லிவிட்டு 'மொந்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழைய கள்ளு போலே' என்றாரே பாரதி? மொந்தை பழைய கள்ளுக்கு இங்கே எங்கே போவது? வாட்ச்மேனிடம் பேசி இங்கே தயாராகும் சரக்கைக் குடித்தேன். அந்தக் கிறுகிறுப்பு வேறு. உடலை ஆட்டுவிப்பது அது. நான் உணர்வது வேறு. ஒரு முறை கமலம் குனிந்து எட்டி எதையோ எடுக்க முனைந்த போது அவள் முலை என்மேல் பட்டது. ஜிவ்வென்று ஓர் உணர்வு. மிகவும் லேசாகிப் பறப்பது போல் அதே சமயம் உலகத்தின் அத்தனை கனமும் என் குறியின் மேல் கவிந்து விட்டது போல் தோன்றியது. ஒரு பக்கம் கனம் கூட இன்னொரு பக்கம் கனமின்மை. தத்தளிப்பு, கிறுகிறுப்பு, மூச்சு முட்டியது.

இதுதானா மோகம்? இச்சையின் இலக்கணம் தெரிய. மோகமானேன்.

கமலம் என்மேல் இரும்புக் குண்டு போல் உருள வேண்டும். என்னை அழுத்த வேண்டும். நான் அவள் மேல் பூப்பந்து போல் புரளவேண்டும். நோகாமல் நசுக்காமல்.

அவளை நான் இறுக்கும்போது அவள் முலைகள் நசுங்கவேண்டும் என் மார்பில். முலைக்காம்புகள் விடைத்து நிற்க வேண்டும். அவளுள் நான் உறைந்துபோய் விட வேண்டும்.

இத்தனை மோகத்திலும் அவள் உடல்வெறும் உறுப்புகள் கொண்ட ஒன்றாக மட்டுமே படவில்லை. கிழித்துக் கொண்டு ஓடும் ஆறாக, பறவைகளுக்கு உறைவிடமாகும் ஏரியாக, கொந்தளிக்கும் கடலாக உருப்பெற்றவாறு இருக்கிறது அவள் உடல் என் கற்பனையில்... அதில் நான் மூழ்க வேண்டும்.

பொது அறையில் காலணிகளைக் கழற்றிவிட்டு அமர்ந்திருந்தாள் ஒரு மாலை. கால்களை மடித்து சோபா மேல் வைத்து முகத்தை முட்டியின் மேல் கவித்து கண்களை மூடியிருந்தாள். பச்சைப் புடவையில் அழகான சிறு குன்று மாதிரி இருந்தாள். கரும் அருவியாய் முதுகெல்லாம் ஓடியது முடி. அப்போதுதான் துளிர்த்த பசும் இலைகளாய்ப் பாதங்கள்.

பெண்ணின் அங்கங்களை திராட்சை விழிகள், ஆப்பிள் கன்னங்கள், கன இதழ்கள் என்று உட்கொள்ளவேண்டிய ஒன்றாகவே பார்க்கிறார்கள். என்னை கற்களும் முட்களும் உள்ள கரடுமுரடான நிலமாகவே உணர்கிறேன். கமலம் என்னை உழ வேண்டும். விதை நிலமாக மாற்ற வேண்டும். கமலம் ஒரு சதுப்பு நிலம். எங்கே கால் வைத்தால் இழுக்கும் என்று தெரியாத மர்ம நிலம். அதில் நான் கால் பதிக்க வேண்டும். அதன் சேற்றைப் பூசிக்கொள்ள வேண்டும். அதன் குமிழ்களில் அமிழ வேண்டும். அதைச் செழிப்பாக்க வேண்டும்.

கமலம் என்னை ஆட்கொள்ள வேண்டும்.

அவள் உடலின் நுழைவாயிலை என் குறி தொடுமா? அந்தத் தொடல் எப்படி இருக்கும்? பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு பலகோடி நூறாயிரம் ஆண்டு காத்திருந்து விட்டுப் பெய்த மழையின் முதல் துளி பட்டதும் ஏற்படும் சிலிர்ப்பு அதில் இருக்குமா? அல்லது அது தீயைத் தீண்டும் இன்பமா?

பகல் பொழுதில்தான் தொலைபேசி ஒலித்தது. எதிர் முனையில் ஒரு பெண் குரல்.

"கமலம் இருக்காங்களா?"

"நான் கமலம்தான் பேசறேன்"

"நான் டாக்டர் தேன்மொழி

கமலம். ஞாபகம் இருக்குதா?"

"சிவத்தோட மனைவிதானே?"

"ஆமாம். பரவாயில்லையே

நெனப்பு இருக்குதே?"

"எப்படி இவ்வளவுநாள் கழிச்சு?

என் நம்பர் எப்படி கிடைச்சிச்சு?"

"வந்து சொல்றேன். நானும் என் கணவரும் குழந்தைகளும் உங்க பில்டிங் கேட்டுலதான் நிக்கறோம். இப்ப மேல வரலாமா?"

"வாங்க தேன்மொழி. என்ன இப்பிடி கேக்கறீங்க?"

வாயில் மணி ஒலித்தது. நான்கு பேர்கள் உள்ளே வந்தனர். தேன்மொழியுடன் இருந்த நபர் சிவம் இல்லை.

"கமலம் இது என் கணவர் டாக்டர் குமாரசாமி. இது என் பையன் அருண். அமெரிக்கால டாக்டரா இருக்கான். இது என் பொண்ணு அருள்மொழி. இவளும் டாக்டர் தான். சொந்த ஹாஸ்பிடல் கட்டத் திட்டம் போட்டிருக்கா. இப்ப பெங்களூர்ல வேலை" என்று அறிமுகம் செய்தாள் தேன்மொழி.

அனைவரும் உட்கார்ந்து கொண்டு தேநீர் பருகியபடி பேச ஆரம்பித்தனர். சிறிது நேரத்துக்குப் பின் தேன்மொழி மெல்லக் கூறலானாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கமலம் நானும் சிவமும் ஒரு வருஷத்துக்குள்ளயே பிரிஞ்சிட்டோம். எந்தச் சண்டையும் இல்ல. அவர் ஒரு வெறும் ஜடமா இருந்தார். அவரே என்னைப் பிரியச் சொல்லிட்டாரு. நான் மேல் படிப்புக்காக லண்டன் போனபோதுதான குமாரசாமியச் சந்திச்சேன். சிவத்தோட நான் ஒரேடியா முறிக்கல. இவங்கள்லாம் அவரப் பெரியப்பான்னுதான் கூப்பிடுவாங்க. அவர் அப்பா போன பிறகு நாங்கதான் அவர் குடும்பம். குமாரசாமியும் அவரும் நல்ல நண்பர்களா இருந்தாங்க. இங்க கோயம்புத்தூர்லதான் புரொபசரா இருந்தாரு. அவர் ஆராய்ச்சிக் கட்டுரை எல்லாம் எழுதிட்டே அப்பிடியே இருந்துட்டாரு. இன்னொரு கல்யாணமே கட்டல. லீவு நாள்ல எங்க கிட்ட வருவாரு. இருப்பாரு. இப்பிடியே போயிட்டுது காலம்....."

அவள் பேச்சு ஒரு நீண்ட முன்னுரை என்று தோன்றியது அவளுக்கு. சிவத்தைக் கடந்த காலத்தில் இருத்திப் பேசியது போல்பட்டது.

தேன்மொழி தொடர்ந்தாள்.

"அருண்மொழிக்கு சொந்த ஹாஸ்பிடல் கட்டுறதுக்கு ஏற்பாடு செய்ய பெங்களூரு வந்தவருதான். காலையில நடக்கப் போனவருவரலை. நல்ல பனிக்காலம். குளிர் தாங்க மாட்டாரு அவரு. கிளம்பற போதே இவ "வேண்டாம் பெரியப்பா. இன்னிக்கு குளிர் அதிகம்" ன்னு சொல்லியிருக்கா. கேக்கல. மப்பளரை தலையில சுத்திட்டு போயிருக்காரு. அப்புறமா ஸறிங்க்கி டான்க் ஏரியில உடல் கிடைச்சுது. ஏன், என்னனுட்டு புரியல. ரிடயர் ஆனதுனால கொஞ்சம் ஏங்கிப் போயிட்டாரா என்னன்னே தெரியல. அவரோட வீட்டைக் காலி பண்ணினபோது ஒரு நோட்டுப் புத்தகம் கிடச்சுது. அது மேல இதுவரை நீங்க இருந்த முகவரி. போன் நம்பர் எல்லாம் இருந்தது. கடைசியா இந்த முகவரி, போன் நம்பர் எல்லாம் எழுதி இருந்தது. அந்த நோட்டுப் புத்தகத்தை அப்பிடியே பிரிக்காம எடுத்திட்டு வந்தேன். அவரு உங்களோட எப்பவாவது பேசினாரா?"

"இல்லையே பல சிநேகிதங்களோட இப்பவும் தொடர்பு இருக்கு. சுதா கூட போன வாரம் போன்ல பேசினா. இவரோட தொடர்பு விட்டுப் போச்சுது".

மௌனம் நிலவியது.

தேன்மொழி தன் கைப்பையிலிருந்து ஒரு நோட்டுப் புத்தகத்தை எடுத்தாள். பிளாஸ்டிக் தாளில் பொதிந்திருந்த நோட்டுப் புத்தகம்.

கமலத்தை நோக்கி நோட்டுப் புத்தகத்தினை நீட்டினாள். "இதை நீங்க வெச்சுக்குங்க. உங்க பேரு இருக்குது மேல. அவருக்கு எப்பிடியாவது சாந்தி உண்டாகணும். நீங்க தப்பா நினைக்காதீங்க. அவருடைய புத்தகம் எல்லாம் காலேஜ் லைப்ரரிக்குக் குடுத்திட்டோம். வேற அதிகம் எதுவும் இல்ல. அத்தனை சொத்தையும் என் பிள்ளைகளுக்கு எழுதி வெச்சிருக்காரு. ஒரு சன்னியாசி மாதிரி இருந்தாரு. இப்ப போயிட்டாரு. என்னன்னு சொல்ல? இதுல உங்கபேரு இருக்கறதால....."

கைநீட்டி நோட்டுப் புத்தகத்தை வாங்கிக் கொண்டாள்.

பிளாஸ்டிக் தாள். சிறிது நேரம் அமர்ந்து பேசிவிட்டுச் சென்றனர்.

மேசைமேல் பிளாஸ்டிக் தாளினால் சுற்றப்பட்ட நோட்டுப் புத்தகம் கிடந்தது.

பிளாஸ்டிக் தாளை மெல்ல அகற்றினாள். இயந்திரங்களால் தயாரிக்கப்படாத தாள் அட்டை ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தி நாலு, எழுபத்தைந்து என்று தேதி போட்டு சில குறிப்புகள் இருந்தன. மற்ற பக்கங்கள் வெறுமையாக இருந்தன.

ஏரியினடியே ஓர் உடல், சேதிகள் எதுவும் சொல்லாத உடல். அத்தனை ரகசியங்களையும் தன்னுள் உறையவைத்த உடல்.

குளிர் பதனப் பெட்டி அருகே இருந்த முக்காலியில் அமர்ந்து அதன் மேல் சாய்ந்து கொண்டாள்.

கைலாசம், உனக்குள்ளே இவ்வளவு தாபம் இருந்தது என்பதை நான் உணரவில்லை. அப்போது என் உடலே எனக்கு ஒரு விடுபடுத்த வேண்டிய மர்மமாக, புதிராகத்தான் இருந்தது. என் உடலை நான் சமாளித்துக் கொண்டிருந்தேன் என்றுதான் சொல்ல வேண்டும். உடல் எனும் பிரம்மாண்டத்தை நான் எதிர்கொண்டது பிறகுதான். அதன் மேடு பள்ளங்களை, குழிகளை, செதில்களை, மடல்களை, இதழ்களை அறிந்து கொண்டது மெல்ல மெல்லத்தான். ஊடலில் முங்கி, மூச்சுமுட்டி எழுந்தது உடனடியாக நேரவில்லை. மெல்லத் தொடங்கி இடியுடன் கூடிய பெருமழையாவது போல் அது நேர்ந்தது. மென்மையாக ஒலிக்கத் தொடங்கி பிறகு வேகமும் தாளமுமாக எச்சத்தை எட்டும் பாடல் போல் அது எழும்பியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ என்னை அணுகியபோது நான் அங்கில்லை. வேறு எத்தனையோ கவலைகளில் மூழ்கி இருந்தேன். ஆராய்ச்சி பற்றிய கவலைகள், எதிர்காலம் பற்றிய கவலைகள், ஆண்கள் பற்றிய ஆர்வமும், குறுகுறுப்பும் இல்லாமல் இல்லை. அது அவ்வப்போது ஓடும் மேகங்கள் போல் வந்து போய்க் கொண்டிருந்தது. ஆழமாக உள்ளிறங்கவில்லை.

அல்குல் பற்றி எழுதியிருக்கிறாய், என் அல்குல் எனக்கே புரிபடாத ஒன்றாகத்தான் இருந்தது. அதன் ஐதுமயிர் பற்றியோ, இதழ்கள் பற்றியோ எந்தத் தியானமும் இல்லை. மாதவிடாயின் போது சிலசமயம் குருதி படர்ந்து இருக்கும் ஐதுமயிரைச் சுத்தப்படுத்தியது கூட அலட்சியத்தோடு தான். ஏதோ ஒரு பாவத்தைச் சுமர்ப்பதுபோல் உடலைச் சுமந்தோம் என்னைப் போன்றவர்கள். உடல் ஒரு குரிசு. கற்றுக் கொடுக்கப்பட்டது அதுதான் படுகுழியில் வீழ்த்திவிடும் உடல். ஊடலை மிதிக்க வேண்டும். நசுக்க வேண்டும். அடக்க வேண்டும்.

எங்கள் வீட்டில் தங்கம் என்றொரு பெண் வேலை செய்து கொண்டிருந்தாள். சமையல் வேலை. அப்பாவின் காரியாலயத்திலிருந்து இரண்டு பியூன்கள் வீட்டு வேலைக்கு வந்து போவார்கள். ராமன் நாயர் மற்றும் வெங்கடப்பா. துணி துவைக்கும் போது தங்கம் மரத்தடியே நின்று கொண்டிருந்த ராமன் நாயரைப் பார்த்ததாகவும் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்தபடி நின்றதாகவும் வீட்டு வேலை செய்யும் நரசம்மா புகார் செய்ய அவர்களைக் "கையும் களவுமாகப் பிடித்ததாக" அம்மா கூறினாள். ராமன் நாயர் அதன் பின் வரவில்லை. தங்கமும் வேலையை விட்டு நீக்கப்பட்டாள்.

**இத்தனை மோகத்திலும்**
**அவள் உடல்வெறும்**
**உறுப்புகள் கொண்ட ஒன்றாக**
**மட்டுமே படவில்லை.**
**கிழித்துக் கொண்டு ஓடும்**
**ஆறாக, பறவைகளுக்கு**
**உறைவிடமாகும் ஏரியாக,**
**கொந்தளிக்கும் கடலாக**
**உருப்பெற்றவாறு இருக்கிறது**
**அவள் உடல் என்**
**கற்பனையில்...**
**அதில் நான் மூழ்க வேண்டும்.**

அம்மாவிடம் கேட்டபோது இல்லாவிட்டால் ஏதாவது விபரீதம் நேர்ந்துவிடும் என்றாள். சில மாதங்களுக்குப் பிறகு தங்கத்தை ஒரு பாட்டுக் கச்சேரியில் சந்திக்க நேர்ந்த போது "தங்கம் ராமன் நாயரைப் பார்த்தா என்ன விபரீதம் நடக்கும்?" என்று கேட்டேன்.

"யார் சொன்னாங்க?" என்றாள்.

அம்மாதான்."

"ஒரு விபரீதமும் நடக்கல. சும்மா அவனைப் பார்த்தேன். அவ்வளவுதான்." என்று விட்டுச் சிரித்தாள். தலையைத் தடவித்தந்தாள்.

விபரீதம் என்பது என் உடலில் இருக்கிறது என்ற கவலை மட்டும் நீங்கவில்லை. என் உடல் எனும் உண்மை வெளிப்படத் தொடங்கியது நான் வீட்டை விட்டு வெளியே வந்த பிறகுதான்.

என் உடலை என்னைத் தரிசிக்கப் பயில்வித்தது ட்ரினடாடிலிருந்து வந்திருந்த நரைன்சிங் தான். கலைஞன். அவனுடன் இருந்தபோது ஓர் இயற்கைக் காட்சியாகப் பரிமளித்தது என்னுடல். அதன் மேடுகள் மலையாகவும், அதன் ஆழங்கள் பள்ளத்தாக்குகளாகவும், அதன் அந்தரங்கங்கள் சலசலக்கும் நீரோடையாகவும் மாறின. அவன் உடலும் அதே இயற்கைக் காட்சியின் வேறு ரூபங்களாகப் பட்டது. கோடியாகவும், மண்ணாகவும் அவன் உடலும் வளைந்து குழைந்தது. உழப்படாத நிலமாய் முறுக்கிக் கொண்டது. இறுகிக் கொண்டது. புதைகுழியாய் இழுத்தது.

அதுதான் காதல் என்று நினைத்தேன். அவன் ஓர் அமெரிக்கப் பெண்ணுடன் போக ஆரம்பித்த போது வலித்தது. பிறகு வேறு வேலைகளில் மூழ்கிப் போனேன். இரண்டொரு ஆண்டுகளுக்குப்பின் அவனைச் சந்தித்தபோது சோர்ந்திருந்தான். அமெரிக்கப் பெண் அவனுடன் இல்லை. மிகவும் தனிமையில் இருப்பதாகக் கூறினான். அவன் வீட்டுக்கு அன்று நானும் இன்னும் சிலரும் போனோம். அன்றிரவு அவன் என்னை நெருங்கிய போது நான் அனுமதித்தேன். காலையில் மற்றவர்கள் உறங்கிய படி இருக்க நான் கிளம்பிவிட்டேன். நரைன் பேருந்து நிறுத்தம் வரை வந்தான்.

"மறுபடியும் எப்போ?" என்றான். "எப்போதும் இல்லை நரைன். நேற்று உன்னைப் பார்த்து பரிதாபப் பட்டேன். அதனால்தான் இணங்கினேன்....." என்றேன்.

தீ மிதித்தது போல் திடுக்கிட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பரிதாபப்பட்டாயா?"

"வேறு என்ன காரணம் இருக்க முடியும் நரைன்"

"நீ மாறிவிட்டாய்" என்றான்.

பேருந்து வந்தது. ஏறிக்கொண்டேன். ஜன்னல் வழியாகப் பார்த்து கை அசைத்தேன். "வாழ்க்கை ஒரு நல்ல ஆசிரியர்" என்றேன்.

என் உடலைக் கொடுத்து மீட்டுக் கொள்ள முடிந்தது என்னால் அதை என்னுடையதாக்கிக் கொள்ள முடிந்தது.

எந்த மிகையும் எந்த மட்டுப்படுத்தலும் இல்லாமல் உடலை அதன் அத்தனை குறைகளோடும் நிறைகளோடும் ஏற்க முடிந்தது தனஞ்செயனுடன்தான். அவன் என் உடலைப் பறக்கவிட்டான். மீண்டும் என்னிடமே ஒப்படைத்தான். நான் அவன் உடலை அறியாத பிரதேசங்களுக்கு இட்டுச் சென்றதாகவும், திரும்பி வர வழி அமைத்துத் தந்ததாகவும் கூறினான். ஆணுடல் பற்றி இருந்த அவன் கர்வத்தை நான் சமனப்படுத்தினேன் என்றான். விறைத்த குறிதான் ஆணுடலின் உண்மை என்றான். கலவி செய்யாதபோது படுத்தபடி இருக்கும் அவன் குறி எவ்வளவு அழகு என்ற போது உடலுக்குத்தான் எத்தனை அர்த்தங்கள் என்று வியந்தான்.

அவனை மணந்துகொண்டு இருபத்தைந்து ஆண்டுகளாகி விட்டன. இன்னும் காதல் புரிவது எளிது. காதல் அப்படியல்ல. பெண்- ஆண் உறவு மிகவும் சிக்கலானது. அதில்தான் எத்தனை நெருக்கம், எத்தனை விலகல்? எத்தனை மர்மம், எத்தனை வெளிப்படை? எத்தனை வன்முறை, எத்தனை மென்மை? எத்தனை இறுக்கம், எத்தனை குழைவு? எத்தனை ஆதாரம் எத்தனை ஆவேசம், காதலிக்கும் நபரையே விஷம் வைத்துக் கொல்லலாம் என்று ஆத்திரம் வருகிறது. துணிகிறது. பந்தம் போல் கட்டிப் போடுகிறது. கூடுபோல் ஆசுவாசம் தருகிறது. தகிக்கிறது குளிர்விக்கிறது.

என் உடலை ஒரு பிரதியாகப் பார்க்கும்போது அது ஒரு நிலைத்த பிரதியாக இல்லை, கைலாசம். அது மாறியபடி இருக்கிறது. அதன் தோற்றமும் அர்த்தங்களும் மாறியபடி உள்ளன. என் முலைகள் தளர்ந்து சற்றே கீழிறங்கி உள்ளன. என் தொடைகளில் பச்சை நரம்போடுகிறது. கால்களிலும் கைகளிலும் கூட என் அல்குல் ஒரு பழுத்த இலை போல் இப்போ இருக்கிறது. நரைத்து இருக்கிறது. ஈரமில்லாமல் உலர்ந்து இருக்கிறது.

செயனின் உடலிலும் பல மாற்றங்கள். முறுக்கிக் கட்டியது போல் இருந்த அவன் உடல் இப்போது சில சமயம் நனைத்து வைக்கப்பட்ட துணிபோல் இருக்கிறது. குளித்து விட்டு அவன் வரும்போது ஈரம் உலராத அவன் குறி நத்தைபோல் சுருங்கி உள்ளது. அவன் முடி முற்றிலும் நரைத்துவிட்டது. என்னுடையதும், அவன் முதுகில் முலைகள் பட சாய்ந்துகொண்டு பின் கழுத்தில் இன்னமும் முத்தம் தருகிறேன். சிலிர்ப்பதாகக் கூறுகிறான். அவன் என்னை வருடும்போது இதமாக இருக்கிறது. குறுகுறுக்கிறது.

இப்படியாக உடல் பல தடங்களில் ஓடியபடி.

நீ ஏன் தொடர்பே கொள்ளவில்லை. கைலாசம்? தேன்மொழியைத் தோழியாக்கிக் கொண்டது போல் என்னையும் தோழியாக நினைத்திருக்கக் கூடாதா? வேறு ஒரு காலகட்டத்தில் நீ கேட்டிருந்தால் நான் இணங்கியிருப்பேனா என்று தெரியவில்லை. ஆனால் உன்னை நான் ஒதுக்கியிருக்க மாட்டேனென நினைக்கிறேன்.

ஏரியன் அடியே கிடந்த உன்னுடலை எரித்தாகிவிட்டது. அதன் சாம்பலை ஆற்று நீரில் கரைத்தாகி விட்டது. உன் சாம்பல் கரைக்கப்பட்ட அந்த ஆற்று நீர் வறண்ட பிரதேசத்தில் பாயட்டும். அதில் பசுமைப் புல்லாய் முளைக்கட்டும். பசித்த இளம் ஆடோ மாடோ அதைப் புசிக்கட்டும். அதன் உடலில் பாலூறட்டும். ஏதாவது மகவின் வாயில் அந்தப்பால் இனிக்கட்டும்.

மேலும் அந்த ஆற்றுநீர் வெள்ளமாய்ப் பெருகி எங்கும் கரைபுரண்டோடட்டும் மண்ணிலும், கல்லிலும், சகதியிலும் பாய்ந்தோடி காய்ந்ததை எல்லாம் உயிர்ப்பிக்கட்டும். துளி விதையாகி அது செடியாகி பழங்கள் தொங்கும் மரமாகட்டும். அதன் கிளைகள் வானை நோக்கட்டும்.

வாயில்மணி ஒலித்தது. கமலம் எண்ணங்களிலிருந்து மீண்டபோது உறைபனிப் பெட்டி உருகி பெரு ஆற்றிலிருந்து பிரிந்து வந்த சின்னஞ்சிறு கிளையாறுபோல காலடியே ஓடிக்கொண்டிருந்தது. ■

**அம்பை**

நன்றி - உயிர்நிழல் ஒக்டோபர் - டிசம்பர் 2006



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பௌத்த பிக்குணிகளின் பார்வையில்...



கி.மு. ஆறாம் நூற்றாண்டில் புத்தர் காலத்தில் பாலி மொழியில் பௌத்த பிக்குணிகளால் இயற்றப்பட்ட பாடல்கள் தேரிகாதை என்ற தலைப்பில் பின்னாளில் தொகுக்கப்பட்டன.

உலக வாழ்வைத் துறப்பதன் மூலம் இறையையும் ஆன்ம விடுதலையையும் அடையலாம் என பௌத்தம், இந்து சமயம் ஆகியவை கூறுகின்றன. உலக வாழ்வு என்பது குடும்பம், திருமணம் ஆகிய நிறுவனங்களிலிருந்து வெளியேறுதல், உறவின் பற்றுகளை விடுத்தல், உடலின் இச்சைகளைத் துறத்தல் ஆகியவையாகும். இத்தகைய துறவு வழியில் பெண்கள் ஆண்களுக்கு தடைக்கற்களாக உள்ளார்கள் என அவை கூறுகின்றன. பெண்கள் மிதமிஞ்சிய பாலியல் இயல்பை மட்டுமே கொண்டவர்கள் என்ற பார்வையால்தான் "பெண்ணாகி வந்த மாயப்பிசாசாகவும்" "கண்ணால் வெருட்டி, முலையால் மயக்குபவர்களாகவும்" பெண்கள் கருதப்பட்டனர்.

ஆனால் பௌத்த சமயத்தில் பெண்களும் வாழ்க்கை பற்றிய வினாக்களை எழுப்பி "விடுதலை" அடைய முயற்சிகள் மேற்கொண்டபோது அவர்களும் உடல் பற்றிய கருத்துகளை முன்வைத்தனர். உடலின் இளமையும், புலன் இன்பமும் காலப் போக்கில் அற்றுப் போவதும் உள அமைதி அடைய வேண்டியதன் அவசியம் குறித்தும் பாடினர். பௌத்த தேரிக்களின் பாடல்கள் இவற்றைக் காட்டுகின்றன.

காமக்குழி, நரகத்தின் இருப்பிடம் என்ற வழக்கமான ஆண்நிலை நின்ற பார்வையில் நின்று விலகி, உடலின் இயல்பான வனப்பையும், வளர்ச்சியையும் முதிர்வையும் சிதைவையும், அங்கீகரித்து அதனை கடப்பது பற்றிய உணர்வையும் அறிவையும் பௌத்த பெண் துறவிகள் சிலர் தமது பாடல்களில் முன் வைத்துள்ளனர். இங்கு தமது பாலியல்பைக் கடப்பது பற்றிய புரிதலை அவர்கள் வெளிப்படுத்துகிறார்கள். உதாரணத்திற்காக விமலா, நந்துத்தாரா ஆகிய தேரிக்களின் பாடல்கள் இங்கு உள்ளன. விமலா கணிகையாக வாழ்ந்து பின்னர் பௌத்தத்தைத் தழுவி சங்கத்தில் சேர்ந்தவர். நந்துத்தாரா கல்விப் புலமை பெற்று இந்தியாவெங்கும் பயணம் செய்து உரையாற்றியவர் எனவும் அறிகிறோம். ■

**சித்ரா**

என் பருவ எழிலின் பூரிப்பில்
எப்படிக் கர்வம் கொண்டிருந்தேன் முன்பு
இளமைத் துடிப்பின் மிகையால்
என் மாசுமறுவற்ற தேகம்
புகழ், வெற்றிச் செருக்கால்
நிறைந்து வழிந்தேன்
உண்மையைச் செவிமடுக்காது அறியாதிருந்தேன்.

மின்னுடல் எழுதி, தழுவும் ஆடை அணிந்து
வாலிபரிடம் நயவுரை பகர்ந்து நின்றேன்
பரத்தையர் வாசலில்
தேர்ந்த வேடனாய் விழிப்பாய் வலை வீசினேன்.

வெட்கமேதுமின்றி உடலைக் காட்டிச்
செல்வத்தைப் பறைசாற்றித்
தீமைகள் நயந்தேன்
பலர் நன்னயம் விழுங்கினேன்.


இன்று -
மழித்த தலையும் துவராடையும் தரித்து
உணவுக்காய் தினம் சுற்றி வருகிறேன்.
ஆடவி மரக் கிளைகள் நிழற்பரப்பில்
இரண்டாம் பிறப்பை வெல்ல அமர்கிறேன்.
வாதங்கள் அற்றுப்போய்
மகிழ்வும் ஓய்வும் நிறைகிறது.

கடவுளரைப் பிணித்து மாந்தரைப் பிளக்கும்
மருள் நெறிகள் வெட்டுண்டன.
உள்ளத்தில் போதையூட்டிய ஆசைகள் தீர்ந்தன
நிறைவான அமைதியோடு நிப்பாணம் உணர்ந்தேன்.

**விமலா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அக்னி, சந்திரன், சூரியன் இத்யாதி தேவர்களைப்
போற்றி வழிபட்டேன் ஒரு காலம்
ஆற்றங் கரைகளில் ஒன்று கூடிப்
புனித நீராடல் செய்தேன் அன்று.

பாதிமுடி மழித்தேன் கட்டாந்தரையில் படுத்தேன்.
இரவில் மட்டும் உண்டு விரதம் காத்தேன்
எத்தனையோ நியமங்கள் கைக்கொண்டேன்.

முத்து மணி அலங்காரங்களில் திளைத்தேன்
ஒப்பனைக் கலையில் களித்திருந்தேன்
புலன் வேட்கை மிக,
நறுமணக்குளியல் நற்சாந்து பூசல்
உடற்தசை உருவல் செய்து
இவ்வுடலம் பேணினேன்.

பிறகே நெறி கண்டடைந்தேன்
வீட்டை விடுத்து வீடற்ற வாழ்வுள் சென்றேன்.
உடலத்தின் உண்மை உணர்ந்தமையால்
புலனின்ப வேட்கை மீளவும் திரும்பாது என்றும்.

நீண்ட பிறவி வரிசை துண்டானது
பிறப்பிற்கான ஆசையும் தவிப்பும் தகர்ந்தது.
கை கால் பிணித்த கட்டுத் தளர்ந்தது
வென்றடைந்தேன் அமைதி
என் உள்ளகம் கோலோச்சும் அமைதி.

**நந்துத்தாரா**

மொழிபெயர்ப்பு - ஆங்கிலத்தில் இருந்து தமிழுக்கு- அ.மங்கை தேரிகாதை, 2008.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலியல்தொழிலில் ஈடுபட்டுள்ள பெண்களின் அறிக்கை ஒன்று

பாலியல்தொழில் என்பது ஏனையவற்றைப் போன்றதொரு வாழ்க்கை முறையே. மற்றைய தொழில்களைப் போல இதுவும் உயிர் வாழ்வதற்கான ஒரு யுக்தியே ஆகும். பொதுவான பார்வையிற் கூறுவது போல இது ஆண்களின் இலாபத்திற்காக உருவாக்கப்பட்ட தென்பதைவிட அதன் மூலம் வாழ்கின்ற பெண்களுக்கான வாழ்வாதாரம் ஆகும். பாலியல்தொழிலில் ஈடுபடும் பெண்கள் கூறும் போது, நாங்கள் இத்தொழிலின் மூலமே பணம் சம்பாதிக்கின்றோம். "நாங்கள் தான் எமது குடும்பத்திற்கான பிரதான உழைப்பாளிகள் என்கின்றனர்."

பாலியல்தொழில் ஒரு வாழ்க்கைத் தொழில் (பாரம்பரியத் தொழில்) என்று சொல்வதை நாங்கள் எதிர்க்கிறோம். வாழ்க்கைத் தொழிலுக்கும் தொழிலுக்குமிடையே ஒரு தனித்தன்மையை ஏற்படுத்துகிறோம். உதாரணத்திற்கு, நாங்கள் பாலியல் தொழிலினால் பணம் சம்பாதிக்கிறோம் எனில் அத்தொழில் குறுகிய கால அளவையுடையது. இத்தொழிலின் தன்மையும் நேர அளவுக்குக் கட்டுப்பட்டது. வாழ்க்கைத் தொழில் அல்லது குலத்தொழில் என்னும்போது வாழ்க்கைக்காலம் முழுவதற்குமானது என்ற வகைப்பாட்டுக்குள் தள்ளப்படுகிறது.எமது வாழ்க்கை காலத்தில் குறுகிய, குறிப்பிட்ட பருவத்தில் கால எல்லைக்குட்பட்டு தொழிலைச் செய்யும் பெண்களே நாங்கள். பாலியல் தொழிலைச் செய்யாத காலத்தில் நாம் வேறுவகையான வருமானமீட்டும் தொழில்களில் ஈடுபடுகிறோம் என்பதைத் தயவு செய்து நினைவிற் கொள்ளுங்கள்.



பெண்களுக்குரியனவாக தொடர்ந்து கூறப்பட்டு வருகின்ற, பெண்கள் இணைக்கப்பட்டுள்ள எல்லாத் தொழில்களும் காலங்காலமாக கூறப்பட்டுள்ள பெண்ணியல்புக்கான பெறுமானங்களையே கொண்டுள்ளன. சகிப்புத்தன்மை, அனுதாபம், கனிவு, துன்பத்தைத்தாங்கும் தன்மை, புரிந்து கொள்ளுதல், பொறுமை என இன்னும் பல குணங்களையே மனைவி, தட்டெழுத்தாளர், தாதியர், ஆசிரியர், அலுவலக உதவியாளர், வரவேற்பாளர் ஆகியோரும் பாலியல் தொழிலில் ஈடுபட்டுள்ளோரும் உரிய மூலதனமாகக் கொள்கின்றனர். ஒரு பெண்குழந்தை இவ்வாறான தொழில்களில் தான் ஈடுபடக்கூடும் என ஏற்றுக்கொள்ள வைக்கின்ற

(Veshya Ananya Mukti Parishad and Sangram- SANGRAM என்பது Sampada Grameen Mahila Sanstha என்பதன் சுருக்கமாகும். இது மஹாராஷ்டிராவிலுள்ள சங்கிலி என்னுமிடத்தில் பாலியல் தொழிலாளருடன் 1992இலிருந்து வேலைசெய்த அரசசார்பற்ற நிறுவனமாகும். 1996இல் இந்த நிகழ்ச்சித்திட்டம் இன்னும் அகலிக்கப்பட்டு **அநீதிக்கெதிரான பெண் பாலியல் தொழிலாளரின் கூட்டு** - Veshya Ananya Mukti Parishad ஆகியது. இது அவர்களால் வெளியிடப்பட்ட அறிக்கை.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகமயமாக்கலே பெண்கள் பணிப்படையில் பாரபட்சத்தை நிலைக்கச் செய்கின்ற பிரதான காரணம் என நம்புகின்றோம். பாலியல் தொழிலில் ஈடுபட்டுள்ள பெண்களின் நிலைக்கும் இதற்கும் வேறுபாடில்லை என நம்புகிறோம்.

ஆண் முதன்மைத் தந்தைவழி அமைப்புக்குள் வாழும் அதிகமான பெண்களை விடவும் நாங்கள் வலுவூட்டப்பட்டவர்கள் என நம்புகிறோம். உதாரணமாக குடும்ப அமைப்புக்குள் (அது மிகவும் அடக்குமுறையானது என்பது எமக்குத் தெரியும்) நாங்கள் தான் குடும்பத்தின் சகல தேவைகளையும் நிறைவேற்றுபவர்களாகவும் வீட்டின் தலைவியராகவும் உள்ளோம். எமது குடும்பத்தின் ஆண்களுடன் நேர்மையுடனும் சமமாகவும் எந்த விடயங்களையும் பகிர்ந்து கொள்ளுகிறோம். இரட்டை வாழ்க்கைக்குள் மூடிமறைய வேண்டிய தேவை அங்கு இல்லை. பொருளாதாரத்தில் ஆண்களிடமிருந்து சுதந்திரமாக இருக்கின்றதாகிய உண்மையை கௌரவத்துடனும் பெருமையுடனும் அனுபவிக்கின்றோம்.

சமூகத்தில் பாலியல் தொழிலாளர்மனை உரிமையாளர்களும், தாதாக்களும் , பொலிசாரும் ஒழுக்கத்தைக் காப்பதாக தம்மைத்தாமே நியமித்துக் கொண்டவர்களும் எம்மைத் துன்புறுத்துகின்றனர். எமது சுதந்திரத்திற்குத் தடை விதிக்கின்றனர். எமது ஆன்மாவைக் கொல்ல எப்போதும் முயல்கின்றனர். கட்டுப்படுத்தும் அதிகார அமைப்புகள் பாலியல் தொழிலை குற்றவியலுக்குரியதாக்குவதில் தமக்கானதொரு அடிப்படை நோக்கை கொண்டுள்ளன. நாம் அவதூறுகளாகாத வகையில் பணம் சம்பாதிப்பதற்கும் பாலியல் தொழிலை தொடர்ந்து தெரிவு செய்வதற்கும் பாதுகாப்பாக வாழ்வதற்கும் பாலியல் தொழிலைக் குற்றவியலுக்குரியதாக ஆக்க வேண்டாமென கட்டாயமாக வலியுறுத்துகிறோம். இவ்வியாபாரத்தை மேலும் குற்றவியலுக்குரியதாக்க உதவுகின்ற, பாலியல் தொழிலை அடக்கு முறைக்குள்ளாக்குகின்ற எல்லாச் சட்டங்களையும் இல்லாதொழிக்க வேண்டுமென கட்டாயமாகக் கோருகின்றோம்.

பாலியல் தொழிலினால் பணம் சம்பாதித்தல் என்பது எமது உடலின் ஒருபகுதியை விற்றுப் பணம் சம்பாதித்தலாகும். அது மூளையை விற்று அல்லது உடலாற் செய்யப்படும் தொழில்களை விற்றுச் செய்யப்படும் தொழில்களிலில் இருந்து எவ்வகையிலும் வேறுபட்டதல்ல. ஏனைய மரபுசார்ந்த வேலைகளிலும் பார்க்க எமது வேலையின் பங்களிப்பைக் குறைத்து மதிப்பிடும் சமூகத்தை நாங்கள் எதிர்க்கிறோம். எமது வருமானத்தினதும் வலிமையினதும் மூலவளமாக இருக்கின்ற எங்கள் பாலியல் அல்லது பெண் தன்மையின் ஒரு கூறினை உபயோகிப்பதன் மூலம் அதிகாரக் கட்டமைப்புகளுக்கு எதிராக நாங்கள் சவாலிடுவதாகவும் அவற்றை வேரறுப்பதாகவும் நம்புகிறோம். திருமண பந்தத்தில் இணைகின்ற ஆண் பெண்ணுக்கான வரதட்சினைகள் கொடுப்பதற்காக அன்பளிப்புகள் பெறுகின்ற விளம்பரங்கள் செய்து கொள்கின்ற பாலியல் ஒப்பந்தங்கள் போன்ற ஏனைய வடிவங்களுக்கு அங்கீகாரமளித்து, பாலியல் தொழிலை இழிவானதெனக் கருதுகின்ற எல்லா மதிப்பீட்டு முறைகளையும் எல்லாச் சட்டங்களையும் எதிர்க்கின்றோம்.

பொதுமக்களில் ஒரு பகுதியினராக நாளாந்த வாழ்க்கையில் வன்முறையை அனுபவிக்கின்ற நாம் எமது வாழ்க்கை முறையில் கட்டுப்பாட்டையும் ஒழுங்கையும் விதிக்கின்ற சமூகத்தில் அதிகரிக்கின்ற வன்முறையால் மிகவும் தண்டிக்கப்பட்டவர்களாக உள்ளோம். பாலியல் தொழிலில் ஈடுபட்டுள்ள பெண்கள் என்ற முறையில் கண்டன நோக்குடன் எம்மீது வன்முறையைத் திணிக்கின்ற சமூகத்தை எதிர்க்கிறோம்.

பெண்ணின் பாலியல் என்பது தாய்மை உள்ளவளாக இருத்தல், பணிவுள்ளவளாயிருத்தல் போன்ற ஏனைய திறன்களைப்போல பெண்ணில் உள்ளார்ந்த தன்மையாகவிருப்பது எனநாம் நம்புகிறோம். பால் (sex) என்பது ஒரு புனிதமான இடத்தைக் கொண்டிருக்கிறது என்றோ பிள்ளை பெறுவது தவிர வேறு நோக்கங்களுக்காக இனச்சேர்க்கையைப் பயன்படுத்தும் பெண்கள் இந்த இடத்தை துஷ்பிரயோகம் செய்கின்றார்களென்றோ நாம் நம்பவில்லை. அல்லது இனச்சேர்க்கையில் ஈடுபடுவதன் மூலம் பணம் சம்பாதிப்பவர்களை ஒழுக்கமற்றவர்களென்றோ கெட்டவர்களென்றோ நாம் நம்பவில்லை.

சிறுவர் பாலியல் தொழிலானது சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம், தொந்தரவுகொடுத்தல், சிறுவரைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலில் ஈடுபடுத்துதல் என்பவற்றுடன் தொடர்புடையது. அது பெண்களுக்கெதிரான வன்முறைகள், கொலை, கடத்தல், பாலியல் வல்லுறவு ஆகிய குற்றங்கள் இந்த சமூகத்தில் காணப்படுகின்றன என நாங்கள் நம்புகிறோம். ஏழைகள், பலவீனமானவர்கள், விளிம்புநிலைப்பட்ட சமூகத்தவர்களைப்போல எமது வாழ்க்கையையும் இலக்குகளையும் நிறைவு செய்ய முடியாதவர்களாகவுள்ளோம். மூன்றாம் உலகநாடுகளின் பெண்களின் அதே அனுபவங்களை நாம் அனுபவிக்கிறோம்.

பாலியல் தொழில் நிறுவனத்தில் ஒரு படிமுறையான சமூக மயமாக்கம் இருப்பதன் காரணமாக விருப்பமற்று பாலியல் தொழிலுக்குள் ஈடுபடும் நிலை ஏற்படும்போது அத்தொழிலின் விருப்பமற்ற இயல்பு விரைவாக மாறி அங்கு விலகிச்செல்வது தேவையில்லாதபடி அது ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இது ஒரு பலவந்தமான படிமுறையல்ல. முதலாளித்துவ ஆண்முதன்மைச் சமூகத்தில் வெறுப்புடன் வாழ்வதிலும் அச்சமூகத்துக்கு வெளியே சுதந்திரமாக வாழ்க்கையை அனுபவித்திருக்கும் எங்களுக்கு பாரபட்சமான மதிப்பீட்டு முறைகளையுடைய இரட்டைத்தன்மையான வாழ்க்கையை உள்ளீடாகக்கொண்ட வாழ்க்கை முறைக்குள் நாம் கால் வைப்போமெனச் சிந்திப்பது எங்களால் முடியாததாகும்.

எங்களை ஒழுக்கங்கெட்டவர்களாக சட்டரீதியற்றவர்களாக எண்ணும் சமூகத்தின் ஒழுக்கக் கோவைகளை, சட்டங்களை, மேலாண்மையை நாங்கள் கடுமையாக எதிர்க்கிறோம். எங்களின் தாராண்மை உரிமையை அலட்சியப்படுத்துகின்ற, பாதுகாப்பை அலட்சியப்படுத்துகின்ற, சரியான நீதி நிர்வாகத்தை அலட்சியப்படுத்துகின்ற, எமது வாழ்க்கையை மதிக்க மறுக்கின்ற, சுதந்திரமான வெளிப்பாட்டை மறுக்கின்ற, இணைப்பை மறுக்கின்ற, சமூகத்தின் பிரதான சக்திகளை கடுமையாக எதிர்க்கின்றோம். பெண்களையும் அவர்களின் பாலியலையும், வர்த்தக மயப்படுத்தலையும் அவர்களைப் பொருளாகக் கருதுதலையும் கடுமையாக மேற்கொண்டுள்ள சமூகத்தைக் கடுமையாக எதிர்க்கிறோம். எமது உடலைக்கொண்டு அதிக பணம் சம்பாதிக்கின்ற பழிபாவத்துக்கு அஞ்சாத தனிநபர்களும், அரசாங்கங்களும் சர்வதேச சந்தையில் எமது பாலியலை விற்கின்ற நிலமையை எதிர்க்கின்றோம். நாம் ஈடுபட்டிருக்கின்ற எங்களது வேலையினைக் கட்டுப்படுத்தலானது எமது சமூகத்தின் பரம்பரை அங்கத்தினரிடமிருந்து குற்றமிழைக்கின்றவர்களின் சபைகளின் கைகளுக்கு மாறியுள்ளது. நாங்கள் விற்பனைக்குரியவர்களல்ல. இன்றைய உலகத்தில் துர் அதிஷ்ட வசமாக சில சமயங்களில் நமது சமூகத்துள்ளும், வேறு அடிப்படை நோக்கங்களுக்காக பொருளாதாரப்பண்டமாக நம்மை ஒறுப்பவர்களாக ஆக்கப்பட்டுள்ளோம்.

உலகமயமாக்கலும் பொருளாதார தாராண்மைவாதமும் மேலும் எமது சமூகங்களை உடைப்பதுடன், நகரக் கைத்தொழில் நிலையங்கள் பாலியல் தொழிலுக்காக எமது உடலையும் எமது இளம்பெண்களின் உடலையும் விற்பதை ஏற்றுக் கொள்ளுமாறு வற்புறுத்துகின்றன. வேலைக்காக அலைதல் என்பது எமக்குப் புதிதல்ல. பிரச்சினை என்னவென்றால் அடிமை முறையான செயற்பாடுகளுக்கும் , பலவந்தப்படுத்தப்பட்ட உழைப்புக்கும், கடன் தளைக்கும் உட்படுத்துகின்ற குற்றமிழைக்கும் வர்த்தகமாக எம்மை இருத்தலாகும். மேலும் எமக்கான வேலையைத் தேடும்போது குற்றமிழைக்கும் தாதாக்களின் சபைகளின் பொறிகளில் நாம் இருப்பதைக் காண்கிறோம்.

நாங்கள் பாலியல்தொழிலில் ஈடுபட்டுள்ள பெண்களினை இழிவுபடுத்துதலை இல்லாது ஒழிப்பதற்கு ஒரு சிவில் சமூகத்தின் பிரஜைகளாக, தொழிலாளருக்குரிய கௌரவத்தைப் பெறுவதற்காக நாம் கட்டாயமாக ஐக்கியப்பட வேண்டியது அவசியமானதாகும். சமூகத்தின் ஏனைய பிரிவுகளுடன் நட்புறவை கட்டாயமாக ஏற்படுத்திக் கொள்வதுடன் எல்லாப் பெண்களின் உரிமைகளையும் தமது நல நோக்கங்களுக்காக அழிக்கின்றவர்களுக்கு எதிராக நாம் போராட்டத்தில் இறங்குவது கட்டாயமானதாகும். ■

---

மொழி பெயர்ப்பு
**அம்மன்கிளி முருகதாஸ்**

Issues in contemporary Indian feminism-SEXUALITIES. Edited by Nivethitha Menon, series editor Rajeswary Sunder Rajan, KALI FOR WOMEN, 2007



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# தமிழ் நாட்டில் கூத்தாண்டவர் கோயிலில் அரவாணிகளின் சடங்குகள்



தமிழ்நாட்டில் பாண்டிச்சேரி நகருக்கு சற்றுத் தொலைவில் கூத்தாண்டவர் கோயில் உள்ளது. ஆண்டு தோறும் சித்திரை மாதம் பௌர்ணமியை ஒட்டி நடக்கும் திருவிழாவில் இந் தியாவின் பலபாகங்களில் இருந்தும் தமிழ்நாட்டின் பல பாகங்களில் இருந்தும் பல நூற்றுக்கணக்கான அரவாணிகள் கலந்து கொள்கின்றனர். இங்கு வழிபடும் பொழுது கூத்தாண்டவர்க்கு அரவாணிகள் அனைவரும் தாலிகட்டி அந்தத் தாலியை அறுத்து நிகழ்த்துகின்ற ஒருவகைச் சடங்கு இடம்பெறும். இது தொடர்பான புராணக்கதை ஒன்று பின்வருமாறு

ஒரு அரக்கனை அழிப்பதற்காக விஷ்ணு பெண் ணாக மாறுகிறார். அப்பெண்ணுருவில் மயங்கிய அரக்கன் தன்னைத் திருமணம் செய்யும் படியும் தான் எத்தகைய தவறும் செய்யமாட்டேன் எனவும் கூறுகிறான். விஷ்ணுவும் அவனைத் திருமணம் செய்கிறார். பெண்ணாக மாறிய விஷ்ணுவுடன் அரக்கன் உறவுகொண்டால் கொன்றுவிடுவான் என அஞ்சிய தேவர்கள் விஷ்ணுவை எச்சரிக்கின்றனர். இதனை அறிந்த விஷ்ணு அரக்கனை முத்தமிடும் பொழுது நஞ்சை ஊட்டிவிடுகிறார்.
இதன் விளைவாக அரக்கன் இறந்து விடுகிறான். இதன்பின் விஷ்ணு ஆணாக மாறுகிறார். திருமணம் செய்த அதே நாளில் கணவனை இழந்ததால் கணவன் இறப்புடன் தொடர்புடைய சடங்குகளுக்கு விஷ்ணுவும் உட்படுகிறார். விஷ்ணு ஒரே நாளில் வெவ்வேறு பாலாக மாறி, தாலிகட்டி அறுத்ததால் அரவாணிகளும் அன்றே தாலிகட்டி அன்றே அறுத் துக் கொள்கின்றனர். இந்தச் சடங்கின் குறியீடு பல அர்த்தங்கள் கொண்டது. கூத்தாண்டவர் கோயில் சடங்கன்று எடுக்கப்பட்ட சில படங்கள் இங்கே...





**சித்ரா**

படங்கள் - சித்தார்த்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடை வெளி

தெரிந்து கொள்ள முடியாத
முடிவை
எதிர் நோக்கியதாக உள்ளது
இடைவெளி...

நழுவவிடப்பட்ட
நியாயங்களும்
உண்மையின் வலியும்
அவ்வப்போது...

காலத்தின் பிரதிபலிப்பு
சில நொடிகள்...
கண்களின் பார்வையிலே
பட்டுத் தெறிக்கின்ற
மாற்றத்தின் நியதி...

மீண்டெழுந்த
எண்ணக் கூட்டின்
இறக்கைகள்
சிதைக்கப்பட்டபோது
நினைவுகளின்
ஈரப் பிசுபிசுப்பு...
மரணித்து விட்ட
உணர்வுகளை
உயிர்ப்பிக்க முற்படுகின்றமை
வரையிலான
ஆச்சரியங்களினதும்
தொடர்ச்சியாக
வழமை போல்
மீண்டும்
இடைவெளி...

அருணா

stock.xchng

■ ■ ■




பொது இடங்களில் தமது
ஆணுறுப்பை மற்றையவர்களுக்குக்
காட்டும்
**'சிப்பர்மான்'**

OptionsNo. 40



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை மாணவர்களுக்கு பாலியல் கல்வி கற்பிக்கப்பட வேண்டியதன் அவசியம்...

பாடசாலை மாணவர்களுக்கு பாலியல் கல்வி கற்பிக்கப்பட வேண்டிய அவசியமும் தேவையும் பற்றி பலராலும் கருத்துகள் முன் வைக்கப்படுகின்றன, முன் வைக்கப்பட்டுள்ளன. பாலியல் கல்வி என்று குறிப்பிடும் போது அது மனித இனப்பெருக்க முறையினை மாத்திரம் கூறுகின்ற, ஏற்றுக் கொள்கின்ற விடயம் மாத்திரமல்ல. அவற்றோடு சேர்த்து கருத்தரிப்பு, கருத்தடுப்பு, உளபாலியல்பு மற்றும் பாலியல் கருத்துகளுடன் தொடர்புடைய பால் ரீதியிலான பாலியல் வேறுபாடுகள், உணர்வுகள் போன்றவற்றையும் பாலியல் கல்வி என்பதுடன் உள்ளடக்க வேண்டும். இன்றைய கால கட்டத்தில் காணப்படுகின்ற பொழுது போக்கு சாதனங்களின் பாவனையாலும் தவறான பாலியல் தூண்டல்களினாலும் இளஞ் சமூகத்தினரின் மத்தியில் பாலியல் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன. இவ்வாறான சூழலில் ஆரோக்கியமான உள வளர்ச்சி மற்றும் பாலியல் நடவடிக்கைகளின் யதார்த்தங்களைக் கண்டறிவதற்க்கு மாணவர்களுக்கு சுகாதாரக் கல்வியின் ஊடாக பாலியல் கல்வியினைக் கற்பிக்க வேண்டிய அவசியம் உண்டு. இச்செயற்பாடானது நடைமுறைப்படுத்தப்படும் போது பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் முறையற்ற பாலியல் உறவினால் ஏற்படுகின்ற பாலியல் நோய்கள் பற்றிய விழிப்புணர்வையும் ஏற்படுத்தும். பாலியல் கல்வி பற்றியும் அது பாடசாலைகளில் கற்பிக்கப்படுகின்ற நிலைமை பற்றியும் இலங்கை குடும்பக் கட்டுப்பாட்டு சங்கத்தின் மருத்துவ பணிப்பாளராக கடமை புரியும் வைத்தியர் சிறியாணி பஸ்நாயக்கா அவர்கள் கருத்து கூறும் போது "தற்பொழுது பாலியல் கல்வியானது கல்விப் பொதுத்தராதர சாதாரணதர மற்றும் உயர்தர மாணவர்களுக்கு அதாவது பதினாறு வயதிற்கு அல்லது அதற்கு மேற்பட்ட மாணவர்களுக்கு கற்பிக்கப்படுகின்றது. எனினும் பத்து, பதினொரு வயதுடைய மாணவர்களுக்கும் இப்பாடநெறியைக் கொண்டு செல்லும் முகமாக அனுமதியைப்பெற நான் பல முயற்சிகளை எடுத்து வருகின்றேன்".

பாடசாலைகளில் இக்கல்வி முறையினால் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றியும் எதிர் கொண்ட சவால்கள் பற்றியும் அவர் கூறும் போது ஆரம்பத்தில் "பாலியல் கல்வி" என்ற பதம் பாவிக்கப்படவில்லை. அதுவோர் ஏற்றுக் கொள்ளப்படாத, அருவெருப்பான சொல்லாக பலரால் பார்க்கப்பட்டது. கல்வி கற்ற சமூகத்தினரே அச்சொல்லைப் பாவிப்பதற்கு வெட்கப்பட்டனர். பாடசாலைகளில் இக்கல்வியை "இனப்பெருக்க சுகாதாரக் கல்வி" என அழைப்பது அங்கீகரிக்கப்பட்ட விடயமாகக் காணப்பட்டது. அத்தோடு ஆரம்பத்தில் இனப்பெருக்கத் தொகுதி பற்றி பாடநெறியுடன் பாலியல் கல்வி காணப்பட்ட போதும் ஆசிரியர்கள் அதனைக் கற்பிக்க ஆர்வம் காட்டவில்லை. இதன் பின்னர் பாடசாலைகளில் இனப்பெருக்க சுகாதாரக் கல்வியைக் கற்பிக்க குடும்ப கட்டுப்பாட்டு சங்கம் அனுமதியைப் பெற வேண்டியிருந்தது. அதன் பின்னர் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் அதிபர் ஆகியோரிடம் உரையாடல்கள் நிகழ்த்தியதோடு மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஊட்ட வேண்டியதன் அவசியமும் உணரப்பட்டது. இதன் பின்னர் தற்போது பார்க்கும் போது பாடசாலைகளில் அதிபர், ஆசிரியர், மாணவர்கள், பெற்றோர்கள் போன்றோரிடமிருந்து கிடைக்கும் விமர்சனத்தை நோக்குகையில் அவர்களது அங்கீகாரம் மற்றும் ஆர்வமானது பாலியல் கல்வியைத் தீண்டப்படாத ஓர் விடயமாக அவர்கள் கருதவில்லை எனத் தெரிகின்றது. கிராமிய மற்றும் நகரப் புறங்கள் இரண்டிலுமே இது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என்றே கருதுகின்றேன்". (சொல், இரண்டாம் காலாண்டு, 2007)

பாடசாலை மாணவர்களுக்கு பாலியல் கல்வி கற்பிக்கப்பட வேண்டிய விடயம் தொடர்பாக பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பெற்றோரிடமும் தொழில் புரியும் சிலரிடமும் வினாவிய போது அவர்கள் கூறிய கருத்துகள் இங்கு தொகுக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பி. ராதா**
முதலாம் வருடம், விஞ்ஞான பீடம்.

**பா**லியல் கல்வியின் தேவையானது இன்றைய இளம் தலைமுறையினருக்கு இன்றியமையாத ஒன்றாக உள்ளது. தொலைக்காட்சி, சினிமா, இன்ரநெற் தற்காலத்தில் பெருகியுள்ள பொழுதுபோக்கு கலாசாரத்தின் அடிப்படையில் பாலியல் பற்றிய பல்வேறு தரப்பட்ட அபிப்பிராயங்கங்கள் இளம் தலைமுறையினரிடையே விதைக்கப்பட்டுள்ளன. பாலியல் கல்வி என்பதன் அர்த்தத்தை தவறான பார்வையில் விளக்கம் கொள்ளுமளவிற்கு இவை காரணமாக அமைந்துள்ளன. பல்கிப் பெருகி வரும் பொழுது போக்கு சாதனங்களின் முன்னால் இளம் தலைமுறையினர் பல மணி நேரங்களை செலவிடுகின்றனர். இதனால் தவறான வழி நடத்தல்கள் தோன்றுகின்றன. ஆகவே பாலியல் பற்றிய கல்வி இவர்களுக்கு இருப்பின் அவற்றிலிருந்து தம்மை பாதுகாத்துக் கொள்ள முடியும். ஒவ்வொரு பிள்ளையும் தம்மில் ஏற்படும் மாற்றங்களைப் பற்றி தெரிந்து வைத்திருத்தல் அவசியமான தொன்றாகும்.ஆகவே துணைப் பாலியல்புகள் இவர்களின் உடலில் தோன்றும் வயதான 13-15 வயதில் பாலியல் கல்வியைப் புகட்டுதல் சிறந்ததாகும். பிள்ளை ஒன்றின் உடலில் தோன்றும் துணைப் பாலியல்புகள் அவர்களுக்குப் பயத்தையும் கவலையையும் உருவாக்குவதன் மூலம் உள ரீதியான மாற்றமும் இவர்களின் நடவடிக்கைகளில் மாற்றத்தை ஏற்படுத்த ஏதுவாகின்றன.

ஆகவே இவர்களில் உருவாகும் எதிர்ப்பாலிடைக் கவர்ச்சி கல்வி நடவடிக்கைகளில் பாதிப்பை ஏற்படுத்துவதுடன் பிள்ளையின் நடத்தைக்கும் பங்கத்தை ஏற்படுத்த காரணமாகின்றது. இவர்கள் பாலியல் கல்வியை பெற்றிருப்பதனால் தமது உடல் உள மாற்றங்களுக்கான காரணங்களை உணர்வதுடன் அவை தம்முடைய கல்வி, ஒழுக்கம், பண்பாடு என்பவற்றை சீர்குலைக்காத வகையில் சமூகத்தில் செயற்பட உதவும்.

**ஏ.எஸ்.எம்.சதீக்**
ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை, மஹரகம.

**பா**லியல் கல்வியை பாடசாலை மட்டங்களில் கற்பிப்பது பிழையானதா சரியானதா என்ற பல்வேறு கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. பாலியல் என்பது பல்வேறு மட்டத்தினரிடையேயும் ஓர் வெட்கமான செயலாக காணப்படுகின்றது. என்னைப் பொறுத்தமட்டில் இப்பாலியல் கல்வியானது பாடசாலை மட்டத்தில் வயதுக்கு வந்த பிள்ளைகளின் மத்தியில், பெண் மாணவிகள் என்றால் பெண் ஆசிரியரும், ஆண் மாணவர்கள் என்றால் ஆண் ஆசிரியரும், மாணவர்களின் நடத்தைக் கோலங்களை அவதானித்து, அதற்கு உகந்தாற் போலும், அப்பாலியல் கல்வியினை அவர்களை ஓர் பிழையான வழிக்கு இட்டுச் செல்லாமால் அவர்களின் கல்வித் துறையை முன்னேற்றுகின்ற நோக்கோடு ஓர் செயற்பாடாகவும் அமையச் செய்தல் வேண்டும் .

பாலியல் கல்வியை கற்பிக்கின்ற ஆசிரியர்கள் கூட சில பயிற்சி பட்டறைகளில் பின்வருமாறு கூறுகிறார்கள். "பாலியல் சம்பந்தமான விடயங்களைப் படிப்பிக்கின்ற போது பெரும் சங்கடமாக இருக்கின்றது" என்று கூறுகிறார்கள். அவர்கள் அதற்கு பல்வேறு காரணங்களை முன் வைக்கின்றனர்.

- அந்தப் பிரதேச கலாசாரம் .
- அப்பிரதேசத்தில் பாலியல் கல்வியை கற்பிக்கின்ற ஆசிரியரை மோசமான கண்ணோட்டத்தில் பார்க்கின்றமை.
- அதனை கற்பிக்கின்ற ஆசிரியரின் நடத்தை சரியில்லை என்று குற்றஞ் சாட்டப்படுகின்றமை.
- பிள்ளைகளுக்கு ஆசிரியர் மோசமான கருத்துகளைக் கற்பிக்கின்றார் என பெற்றோர்களால் கருத்து கூறப்படுகின்றமை.
- சில பிரதேசங்களில் பாலியல் கல்வியை கற்பித்த ஆசிரியர்கள் தாக்கப்பட்டதோடு விடயம் பொலிஸ் நிலையம் வரை சென்றுள்ளது.

இவற்றைப் பார்க்கின்ற போது அந்தப் பிரதேசத்தில் காணப்படுகின்ற சமூக சூழலமைவும் கலாசாரமும் சில மூட நம்பிக்கைகளும் காரணமாக இருக்கின்றமை தெரிய வருகின்றது. இதற்கு முதலிலே அப்பிரதேசத்தில் உள்ள பெற்றோர்களுக்கு விழிப்புணர்வை ஊட்ட வேண்டியது அவசியம். பாடசாலை மாணவர்களிடையே பாலியல் தொடர்பாக பல்வேறு சந்தேகங்கள் காணப்படுகின்றன. சில பெண் பிள்ளைகளை எடுத்துக் கொண்டால் அவர்கள் வயதுக்கு வந்து விட்டால் அவர்களின் மாதாந்த உடல் ரீதியான செயற்பாட்டை அருவெருப்புடனும் பயத்துடனும் பார்க்கின்ற நிலைமை காணப்படுகின்றது. அதனைப் போன்றே ஆண் மாணவர்களும் அவர்களின முதலாவது ஸ்கலிதத்தைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட வேறு வகையில் சிந்திக்கின்ற மனோ பக்குவத்தில் இருப்பதை அவதானிக்க முடிகின்றது. இவ்வேளையிலே பாடசாலை மாணவர்களிடையே இப்பாலியல் கல்வியின் தேவையை உணரக் கூடியதாக இருக்கின்றது. அத்துடன் அவர்களின் மனங்களில் பாலியல் தொடர்பான பல்வேறு சந்தேகங்கள் எழுகின்றன. அவ்வாறான சந்தேகங்களை அவர்களின் வீடுகளில் கேட்பதற்கு முடியாத சூழ்நிலை பெரும்பாலான இடங்களில் காணப்படுகின்றன. அவ்வாறு இன்றிக் கேட்டுவிட்டால் "பிள்ளைக்கு கல்யாணம் தேவைப்படுகின்றது விரைவாக மாப்பிள்ளை பாருங்களேன்" என்றோ அல்லது அப்பிள்ளையை மிக மோசமான வார்த்தைகளால் திட்டுவது அல்லது அடிப்பது போன்ற செயற்பாடுகளை செய்கின்றனர் .

மற்றும் பாடசாலைகளில் காணப்படுகின்ற விடுதிகளில் மாணவர்களை வயது வித்தியாசமின்றி ஒரே மண்டபத்தில் தங்க வைக்கின்ற போது பல்வேறு பாலியல் ரீதியான இம்சைகள் ஏற்பட வாய்ப்புண்டு. இவ்வாறான இடங்களில் வயதுக்கு வந்த மாணவர்களிடையே கட்டாயமாக பாலியல் கல்வி புகட்டப்படுவதோடு அவற்றால் ஏற்படுகின்ற விளைவுகள் பற்றியும், தவறான உறவால் உடலுக்கு ஏற்படுகின்ற தீங்குகள் என்பன பற்றியும், பாலியல் ரீதியான அதீத செயற்பாடு காணப்படுகின்ற மாணவர்களுக்கு விசேட உள ஆற்றுப்படுத்தலை அதற்கான ஆசிரியர்களால் மேற்கொள்ளப்படுவதும் அவசியமானதாகும். இவ்விடயத்தில் மாணவர்கள் மாத்திரமல்லாது சில ஆசிரியர்கள் கூட உடல் பருமனான மாணவர்களைக் கண்ணுற்றால் அந்த மாணவனை பாலியல் ரீதியான சேட்டைகளுக்கு அழைத்துள்ளதை அறிய முடிகிறது. எனவே மாணவர்களை மாத்திரம் நான் இங்கு குறை கூறவில்லை. சில ஆசிரியர்களின் நடத்தைகளும் மாணவர்களை பாலியல் ரீதியாக திசை திருப்புவதை அவதானிக்க முடிகின்றது. பாலியல் கல்வியில் உள்ள குறைபாடு என்னவெனில் அதனை கற்பிக்கின்ற ஆசிரியர்கள் சில வேளைகளில் மனதளவில் பக்குவமடையாதவராக இருக்கின்றார்கள். அத்தோடு பாலியல் கல்வியை கற்பிக்கின்ற ஆசிரியர் பாலியலை அருவெருப்பான விடயமாக நினைக்கலாம். இவ்வாறான பல்வேறு காரணங்களும், பெற்றோர்கள் விழிப்படையாமையுமே பாலியல் கல்வியை சமூகத்தில் பிழையாக விளங்கிக் கொள்வதற்கான காரணம் என நான் கருதுகின்றேன்.

வயதுக்கு வந்த மாணவர்களிடையே காதல் என்ற விடயம் உருவாகுவது உடல் உள தேவை. ஆனால் பாலியல் கல்வியை கற்பிக்கின்ற ஆசிரியர்கள் தகாத பாலியலினால் ஏற்படுகின்ற விளைவுகளை மிகவும் சரியான முறையில் கற்பிப்பார்களேயானால் பாலியல் தொடர்பான பிரச்சினைகளை குறைக்கலாம். மனிதனை கட்டுப்படுத்துகின்ற விடயங்களில் ஒன்று கல்வி , இரண்டாவது அவன் பின்பற்றுகின்ற மதம். எனவே பாலியல் கல்வியானது பாடசாலைகளில் பதின்மூன்று வயது மாணவர்கள் முதல் கற்பிக்கப்பட வேண்டும் . அதனை கற்பிக்கின்ற ஆசிரியர் ஓர் உடல் உள மனப்பாங்குளில் ஓரளவாவது சராசரி வளர்ச்சியடைந்தவராக காணப்படுவது சாலச் சிறந்ததாகும்.

**எஸ்.தாரனி**
*(ஏ.எல் விஞ்ஞானப் பிரிவு)*

**ரீ**ன் ஏஜ் (Teen age) பருவம் பெற்றோர் பிடியில் இருந்து நண்பர் குழாத்துனுள் தம்மை ஈர்த்துக் கொள்ளத் துடிக்கும் பருவம். தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை என்ற நிலை மாறி நண்பர்கள் சொல்லே வேதம் என்று ஆர்ப்பரிக்கும் பருவம். புதிய புதிய விடயங்களுள் தம்மை ஈடுபடுத்த முயலும் பருவம். சுய முடிவுகள் பயனளிக்காத பருவம். இப்பருவத்தில் மனம் பல விடயங்களுக்காகப் பறந்து கொண்டிருக்கும். புதிய புதிய எண்ணோட்டங்களில் மனம் கண்ணோட்டம் செலுத்தும். இத்தகைய அலை பாயும் பருவத்தில் ஆர்வத் தூண்டலால் நாம் திசை மாறிச் செல்ல வாய்ப்பிருக்கிறது. அதிலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ள பாலியற் கல்வி பாடசாலைகளில் கற்பிப்பது அவசியமாகும்.

இன்றைய நவீன கால கட்டத்தில் பாலியல் தொடர்பான பல நோய்கள் பரவுவதை நாம் அறிவோம். இவ்வாறான அபாயகரமான சூழலில் இருந்து எம்மைக் காத்துக் கொள்வதற்கு பாலியல் தொடர்பான விளக்கம் தேவையாகின்றது. இதனை பாடசாலைகளில் கற்பிப்பதால் மாணவர்கள் அவை தொடர்பான விளக்கங்களை தெரிந்து கொள்ள முடியும். எயிட்ஸ் முதலான பாலியல் நோய்களில் இருந்து எம்மை பாதுகாத்துக் கொள்ள Sex பற்றிய விழிப்புணர்வு அவசியமாகும். ஆகவே இவை போன்ற விடயங்களை கருதி பாலியற் கல்வி பாடசாலை மாணவர்கிடையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசியம் கற்பிக்கப்பட வேண்டும் என்பது எனது கருத்தாகும்.

நாகரீக முன்னேற்றத்தால் ஆண்-பெண் இடையிலான நட்புறவு சகஜமாக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் எதிர்பாராமல் இடம்பெறக் கூடிய அசம்பாவிதங்களில் இருந்து எம்மை காத்துக் கொள்வதற்கு sex பற்றிய கற்கை எமக்கு அவசியமானதாகும். மற்றும் பெண்களைப் பொறுத்தவரையில் இந்த விடயங்களில் முன்னெச்சரிக்கை தேவை என்று நான் கருதுகின்றேன். மாணவர்களாகிய எமக்கு இக்கற்கை மூலமே சில பிரச்சினைகள் நிவர்த்தி செய்யப்பட முடியும் என நான் நினைக்கின்றேன்.

**ந. ராஜன்**
ஆசிரியர் தெமட்டகொட.

**பா**டசாலைகளில் பாலியல் கல்வியானது விஞ்ஞானம், சுகாதாரம் ஆகிய பாடங்களினூடாக கற்பிக்கப்படுகிறது. ஆனால் பாடசாலைகளில் இக்கல்வி தொடர்பான விடயங்களை கற்பிக்கப்படுகின்ற போது அல்லது கற்ப்பிக்க முனைகின்ற போது பல பிரச்சினைகளை மாணவர்கள் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. ஏனெனில் இப்பாடநெறி தொடர்பான ஆசிரியர்கள் போதியளவு விளக்கத்தை மாணவர்களுக்கு கொடுப்பதில்லை. வெட்கப்படுகின்ற விடயங்களாக பாலியல் கல்வியை கருதி அவர்கள் பல விடயங்களை வெளிப்படையாக கூறுவதில்லை. சில இடங்களில் பெண் ஆசிரியர்கள் இனப்பெருக்க சுகாதாரம் தொடர்பான தகவல்களை மாணவர்களுக்கு விளக்க முற்படுவதில்லை. தேவையற்ற விடயங்களாகவே அவற்றை நினைத்து தவிர்த்து விடுகின்றனர். அவ்வாறன்றி கற்பிக்கின்ற போது பார்த்தால் போதியளவு புத்தகங்கள் பயன்படுத்துவதில்லை. தற்போது **இனப்பெருக்க சுகாதார வழிகாட்டி** மற்றும் **யௌவனப் பருவம்** போன்ற புத்தகங்கள் அறிமுகமாகியுள்ளது. இவை பாடசாலை நூல் நிலையங்களில் வைக்கப்பட்டுள்ளன. அத்தோடு சில பாடசாலைகளில் ஓரப்படுத்தப்பட்டு பயன்படுத்தப்படுவதில்லை. பாலியல் கல்வி தொடர்பான விடயங்கள் இனப்பெருக்க சுகாதார அமைச்சினால் வெளியிடப்படுகின்றன. எனினும் அவை பாடசாலை வரையில் கொண்டு செல்லப்படுவது குறைவாகவே உள்ளது.

Guide and Counsiling ஊடாக இவை தொடர்பான விடயங்கள், கை நூல்கள் வெளிக் கொண்டு வரப்பட வேண்டும். பாலியல் கல்வி தொடர்பான விழிப்புணர்வு இது வரை பாடசாலைகளில் வெற்றி அளிக்கவில்லை. Sex என்பது இதுவரை காலாசாரத்தினூடாக ஓரங்கட்டப்பட்டுள்ளது. சரியான முறையில் அதற்கான வழி முறையில் அறிவுறுத்தல் கொடுக்கப்பட வேண்டும். பாலியல் கல்வி தொடர்பான விடயங்கள் அதிகமாக கொள்கை அளவிலும், எழுத்தளவிலும் மட்டுமே காணப்படுகின்றன. நடை முறையில் பின்பற்றப்படுவதில்லை. இப்பகுதியைக் கற்பிக்கின்ற ஆசிரியர்கள் விழிப்புணர்வு மற்றும் பயிற்சியுடன் இல்லாத போது கற்பித்தல் என்பது தோல்வியடையும் சந்தர்ப்பங்களே அதிகமாக உள்ளன. Guide and Counsiling மிகச் சரியாக செயற்படும் போது மட்டுமே பாலியல் கல்வியின் கற்பித்தல் வெற்றியளிக்கும்.

**Mrs. எஸ். அனுஜா** (பீ.எஸ்.சீ.விவசாய
வவுனியா

**இ**ன்றைய நவநாகரிக உலகில் மாணவர்களின் கல்வி என்பது மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். ஏனெனில் ஒவ்வொரு மனிதனும் சுயமாகவும் தனித்துவமாகவும் தனது ஆற்றலை வெளிப்படுத்தி அதன் மூலம் தொழில் வாய்ப்புகளைப் பெற்று நாட்டின் வளர்ச்சிக்கு உதவுவதோடு தன்னையும் மேம்படுத்திக் கொண்டு செல்கின்றான். இவை எல்லாவற்றிற்கும் மாணவர்களின் பாடசாலைக் கல்வியே அத்திவாரமாகின்றது. இவ்வாறு கல்வி கற்கின்ற ஆண் - பெண் இருபாலருக்கும் பாலியல் கல்வி கற்பிக்கப்பட வேண்டியது அவசியமாகும். ஏனெனில் இன்றைய நவீன யுகத்தில் ஆண் - பெண் இருவரும் பல சவால்களை சந்தித்துக் கொண்டு வாழ்வில் முன்னேறிக் கொண்டிருக்கின்றனர். இவ்வாறான வேளைகளில் நாகரிகம் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக பல ஆபத்துகளையும் எதிர் கொள்ள வேண்டியுள்ளது. இளம் பெண்கள் பாலியல் ரீதியில் துன்புறுத்தப்படுவதோடு ஏமாற்றப்படுகின்றனர். அத்தோடு ஆண் - பெண் இருபாலாரும் தமது கட்டிளம் பருவத்தை அடையும் போது தமது உடலில் ஏற்படுகின்ற மாற்றத்தைப் புரிந்து கொண்டு அதற்கு இசைந்தவாறு உள ரீதியாகவும் தம்மை புரிந்து கொள்ளவும் பிறரைப் புரிந்து கொள்ளவும் முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை மட்டுமன்றி பெண்கள் மற்றும் சிறுமிகள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள வன்முறைகளில் பாலியல் துன்புறுத்தல்கள் அதிகளவில் இடம் பெறுகின்றன. குடும்பங்களில் தமது உறவினர்களாலேயே இவர்கள் பெருமளவில் பாலியல் துன்புறுத்தல்களுக்கு ஆளாகின்றனர். மாமா, சித்தப்பா, பெரியப்பா மட்டுமன்றி தந்தையே மகளை வல்லுறவுக்கு ஆளாக்கும் சந்தர்ப்பங்களை அடிக்கடி பத்திரிகைகள் வாயிலாக அறிகின்றோம். பல சிறுவர், சிறுமிகளுக்கு தாம் பாலியல் ரீதியில் துஷ்பிரயோகப்படுத்தப்படுவதை விளங்கிக் கொள்ள முடிவதில்லை. அவ்வாறான சூழலில் இருந்து தப்பித்துக் கொள்ளவும் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளவும் பாலியல் கல்வி கற்பிக்கப்பட வேண்டியது அவசியமாகின்றது.

எனினும் பாலியல் கல்வி தொடர்பான விளக்கத்தின் காரணமாக இளைஞர், யுவதிகள் தாம் இவ்வாறான பாலியலுறவில் ஈடுபடுவதோடு அவ்வாறான நடத்தைகளில் இருந்து தப்பித்துக் கொள்ளும் வாய்ப்புகளை தெரிந்து கொள்ளவும் முடிகிறது. கருத்தடைச் சாதனங்களை உபயோகித்தல் போன்றவற்றின் விளக்கம் தெரிந்திருக்கும் காரணத்தால் அவர்கள் தவறிளைக்கக் கூடிய சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன. ஆகவே விழிப்புணர்வுடன் கூடிய கற்பித்தல் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகின்றது.

**இ.கிரிஜா**
கணனி பிரயோக உதவியாளர், மட்டக்களப்பு.

**பா**லியல் கல்வியானது இன்றைய காலகட்டத்தில் முக்கியமாக மாணவர்கள் எல்லோரும் அறிந்திருக்க வேண்டிய ஒரு கல்வி ஆகும். சமூகத்தில் ஆண் பெண் பிள்ளைகளிடையேயான சுமூகமான உறவை, சிறந்த மனப்பாங்கை ஏற்படுத்த இக்கல்வி உதவும். பருவமடையும் செயற்பாடுகள் பற்றியும் உடலியல் வளர்ச்சி மாற்றங்கள் பற்றியும் அறிய முடிவதால் அதனை பற்றிய விழிப்புணர்வு காணப்படும். Homon செயற்பாட்டால் ஏற்படும் மாற்றங்கள், மாதவிடாய் சக்கரம், கருக்கட்டல் பற்றிய அறிவுரைகள் போன்றவற்றை சம வயதுப் பிள்ளைகள் புரிந்து கொள்ளவும், இயற்கையின் வெளிப்பாடுகளை உள்வாங்கிக் கொள்ளவும் முடியும்.

சிறுவர் துஷ்பிரயோகம் பாலியல் வல்லுறவுகளில் இருந்து பாதுகாப்பு பெறவும் மற்றும் தாங்களும் சமூகத்தில் சிறந்த ஓர் நற்பிரஜையாக வாழ்கையை மேற்கொள்ளவும் பாலியல் கல்வி தொடர்பான விழிப்பூட்டல் அவசியம் தேவையானது. கட்டிளம் பருவத்தில் பெரியவர்களின் அறிவுரைகளை கடைப் பிடிப்பதற்கு போதிய அறிவுரைகளை வழங்குவது அவசியம். எதிர்கால சந்ததியின் வாழ்கை எதிர்பார்ப்பு நிறைந்ததாக ஆற்றல், திறன் மிக்கதாக தங்களால் இயலும் என்ற நம்பிக்கையை எற்படுத்த இவ்வாறான கற்கைகள் அவசியமாகின்றன. மற்றும் சமுகத்தில் ஏனைய ஆண்களுடன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்ற நடைமுறையை விளங்கிக் கொள்வதோடு தம்மை வழி நடத்திச் செல்கின்ற பக்குவம் மாணவர்களுக்கு ஏற்படும் என நம்புகின்றேன். ■

நேர்காணல்

**லக்ஷ்மி**

**அன்பான வாசக நெஞ்சங்களே உங்கள் ஆக்கங்களை எமக்கு அனுப்பி வையுங்கள்.**

**எமது முகவரி :**
பெண்கள் தொடர்பு ஊடகங்களுக்கான கூட்டமைப்பு,
174, அல்விஸ் அவனியூ, காசல் வீதி,
கொழும்பு - 08, இலங்கை.

தொலைபேசி - 00 94 115632045, 5635900
தொலைநகல் - 00 94 112690201
மின்அஞ்சல் - womedia@sltnet.lk அல்லது options@sltnet.lk





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்ந்த யௌவனமும் இளமையின் பிரகாசமும்

**பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் பாலியல் கல்வியினை அறிமுகம் செய்யும் நோக்கோடு அறிமுகப்படுத்தப்பட்ட இரு நூல்கள்.**

இன்றைய காலகட்டத்தில் கல்வி நிறுவனங்களில் பாலியல் கல்வி கற்பித்தல் பற்றிய பல்வேறு விவாதங்கள் இலங்கையின் கல்வி நிறுவனங்களிலும் ஊடகங்களிலும் இடம்பெற்று வருகின்றன. இது தொடர்பான விவாதங்கள் ஒரு புறம் இருக்க பாலியல்சார்ந்த கல்வி முறைக்கு உதவி செய்கின்ற சிறு முயற்சிகளாக சில நூல்கள் வெளிவருகின்றமை குறிப்பிடத்-தக்கது. அந்த வகையிலே பல்கலைக்கழகமட்டம், பாடசாலைமட்டம் என்ற நிலையில் இரு சிறு நூல்கள் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். பாடசாலை மட்டத்தில் "மலர்ந்த யௌவனம்" என்ற நூலும், பல்கலைக்கழக மட்டத்தில் "இளமையின் பிரகாசம்" என்ற நூலும் வெளிவந்துள்ளன.



யௌவனர் சுகாதார நடாத்துக் குழு, குடும்ப சுகாதார பணியகம் என்பன முன் வந்து பாடசாலைகளில் பயன்படுத்துவதற்காக வெளியிடப்பட்ட 'மலர்ந்த யௌவனம்' எனும் நூல் மிகவும் பாராட்டப்பட வேண்டியதும், ஊக்குவிக்கப்படக் கூடியதுமான ஒன்றாகும். இதனைப் பதிப்பு செய்த பேராசிரியர் நந்ததாஸ கோதாகொட, பேராசிரியர் தியனாத் சமரசிங்ஹ போன்றோர் மிகவும் குறிப்பிடத்தக்கவர்கள். அவ்வாறே 'இளமையின் பிரகாசம்' எனும் நூலானது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ளது. இளைஞர்கள் மத்தியில் பால்நிலைக் கல்வியின் முக்கியத்தினை உணர்ந்த வர்ண ரணதுங்கா, டாக்டர்.காந்தி ஆரியரத்தின ஆகியோரால் உருவாக்கப்பட்ட இந்நூலை தமிழில் டாக்டர். ம. யோகவினாயகன், டாக்டர். க. கணேஸ்வரராஜா போன்றோர் மொழிபெயர்த்து வழங்கியுள்ளனர்.

## மலர்ந்த யௌவனம்

'மலர்ந்த யௌவனம்' எனும் இந்நூல், சுகாதாரப் பணியகத்தை சேர்ந்த வைத்தியர் தீப்தி பெரேரா, குடும்ப சுகாதாரப் பணியகத்தைச் சேர்ந்த வைத்தியர் சுவினிதா தஸநாயக்க, தேசிய கல்வி நிறுவகத்தைச் சேர்ந்த மித்தா வீரக்கொடி போன்றோர்களால் எழுதப்பட்டுள்ளது. இந்நூல் எமது நாட்டின் சனத்தொகையில் 1/3 பகுதியினரும், எதிர்கால சந்ததியினருமான யௌவனப் பருவத்தினரைப் பற்றியதாகும். யௌவனப் பருவத்தினரின் வயதெல்லையை அடிப்படையாகக் கொண்டு அவர்களது உடலில் ஏற்படும் மாற்றங்கள், பெண், ஆண் என்ற ரீதியில் அவர்களது உடற்சுரப்பிகளில் ஏற்படும் மாற்றங்கள், அதன் காரணமாக இனப்பெருக்கத் தொகுதிகளில் ஏற்படும் மாற்றங்கள், அது தொடர்பான பாலுறுப்புக்கள், அதன் முக்கியத்துவம், சுத்தம், பாதுகாப்பு போன்றவை பற்றிய விரிவான, தெளிவான விளக்கங்கள் என்பன இதில் அடங்குகின்றன. இவை தவிர யௌவனப் பருவத்தில் அவர்கள் மனதில் உருவாகும் பல்வேறுபட்ட எண்ணங்கள், தாழ்வுச் சிக்கல்கள், பொதுவான குணாம்சங்கள், தவறான வழியில் இட்டுச் செல்லும் ஆசைகள் என்பன போன்ற விடயங்களை சிறப்பாக எடுத்துக் கூறுகின்றது.




இந்நூலை வாசிப்பதில் இருந்து யௌவனப் பருவத்தினர் தங்களைப் பற்றி தாங்களே அறித்து கொள்ளக் கூடியதாக உள்ளது. யௌவனப் பருவத்தினர் தங்களைப் பற்றிப் புரியாமல் உள்ள பல விடயங்களை இந்நூலை வாசிப்பதன் மூலம் எளிதான முறையில் அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. யௌவனப் பருவத்தில் பெண், ஆண் பிள்ளைகளுக்கிடையே ஏற்படும் உடலியல் சார்ந்த மாற்றங்களையும், அவை தொடர்பாக அவர்கள் கொண்டுள்ள தவறான அபிப்பிராயங்களையும் தெளிவான முறையில் வெளிப்படுத்துவதாக இந்நூல் உள்ளது. அது மட்டுமன்றி பெண்களைத் தவறாகப் புரிந்து கொண்டு அவர்களை பல்வேறு வகைகளிலும் கொடுமைப் படுத்தும் ஆண் சமூகத்திற்கு அறிவைப் புகட்டும் ஒரு நூலாகவும் அமைந்துள்ளது இந்நூல். யௌவனப் பருவத்தில் ஏற்படும் பால் உணர்வுகளை எவ்வாறு கட்டுப்படுத்தலாம், அவ்வாறான பாலியல் சார்ந்த நடத்தைகளால் ஏற்படும் பாதிப்புக்கள், அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பான தொல்லைகள், சிக்கல்கள் என்பனவற்றில் இருந்து விடுதலை பெற மேற்கொள்ள வேண்டிய சகல விதமான விடயங்கள், யௌவனப் பருவத்தில் இடம்பெறும் நிகழ்வுகளையும் தெட்டத் தெளிவாக யௌவனப் பருவத்தினருக்கு மட்டுமன்றி ஏனைய முதியவர்களுக்கும் எடுத்துக்கூறும் ஒரு அற்புத நூலாக 'மலர்ந்த யௌவனம்' விளங்குகிறது.

இந்நூல் யௌவனப் பருவத்தினரை எதிர்காலத்தில் சிறந்த பிரஜையாக உருவாக்கி விடுவதோடு நாட்டைக் கட்டியெழுப்பக் கூடிய ஒரு சமூகத்தையும் உருவாக்க முனைந்துள்ளது என்று கூறலாம்.

## இளமையின் பிரகாசம்

இதைப்போன்றே "இளமையின் பிரகாசம்" எனும் நூலானது பல்கலைக்கழகத்தில் புதிய மாணவர்கள் வரும் போது, அவர்களுக்கு நடத்தப்பட வேண்டிய அறிமுக வகுப்புக்களில் (Orientation) இந்நூலைப் பயன்படுத்தி பாலியல்பு, பால்நிலை பற்றிய அறிவை ஊட்டுமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அனுப்பி வைத்துள்ளது.

பால்நிலைக் கல்வி பற்றிய இந்நூலிலே சிறுவர், சிறுமியர் வளர்ந்து வருகின்ற போது அதாவது கட்டிளமைப் பருவத்தை அடைகின்ற போது அவர்களின் உடலில் ஏற்படுகின்ற வளர்ச்சிகள், அதன் மூலமாக அவர்கள் எதிர் நோக்குகின்ற பிரச்சினைகள், அவற்றைத் தீர்க்கும் வழிமுறைகள், போன்ற அம்சங்களை முதல் இயல் ஆராய்கின்றது.

மேலும் பெண்ணோ அல்லது ஆணோ பருவ வயதை அடைந்து விட்டால் அவர்களின் உடலில் ஏற்படும் மாற்றங்கள் என்ன? என்பதை எடுத்துக் கூறி அந்த மாற்றங்களால் அவர்கள் மனதில் எழுகின்ற உணர்வலைகளையும் படம் போன்று எமக்கு விளக்குகின்றது. திருமணத்தின் போது முதல் இரவிலே உடலுறவு கொள்ளும் போது குருதி வெளியேறுவதன் தன்மை பற்றியும், குருதி வெளியேறாமைக்குரிய காரணங்கள் பற்றியும், விஞ்ஞான பூர்வமாக எடுத்துக் காட்டியுள்ளனர். அத்தோடு பெண்ணின் மாதவிடாய் சக்கரம் பற்றியும், மாதவிடாயக் கோளாறுகள், அவை எப்படி ஏற்படுகின்றன போன்ற விடயங்களும் கூறப்படுகின்றன. இவற்றோடு பெண்ணின் உணர்ச்சி உறுப்புகள், ஆணின் உணர்ச்சி உறுப்புகள் எவை எவை என்பதைக் கூறி கர்ப்பம் உற்றதின் ஆரம்ப அறிகுறிகள், மகப்பேறின்மைக்கான காரணங்கள், மகப்பேறின்மைக்காக இருபாலாரும் செய்து கொள்ளும் பரிசோதனைகள், அவற்றிற்கான தீர்வுகள், அவற்றோடு கருச்சிதைவு, கருச்சிதைவதன் மூலம் ஏற்படுகின்ற பாதிப்புகள், கருச்சிதைவிற்கான விளக்கங்கள் போன்ற விடயங்களை இரண்டாவது இயல் ஆராய்கின்றது.

ஆண், பெண் பாலுறவு எவ்வாறானதாக அமைய வேண்டும்? அதாவது பெண்ணின் உணர்வை ஆணும், ஆணின் உணர்வைப் பெண்ணும் உணர்ந்து உறவுகளை மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் அவர்களின் உறவில் ஏற்படும் பிரச்சினைகள், கசப்பான அனுபவங்கள் போன்றவற்றை எடுத்துக் காட்டி அவற்றிற்கான தீர்வுகளையும் கூறுவதாக மூன்றாவது இயல் அமைகின்றது.

நான்காவது அத்தியாயத்தில் பாலுறவின் போது ஏற்படும் நோய்கள் எவை எவை என எடுத்து கூறுவதோடு இந்நோய்கள் ஏற்படும் வழிமுறைகள் எவை என்பதையும் கூறி இந்நோய்க்கான குணங்குறிகளையும் சுட்டி அவற்றைத் தடுப்பதற்கான வழிமுறைகளையும் விளக்கி நிற்கின்றது.

மேலும் அடுத்த இயலிலே பாலுறவில் ஈடுபடும் போது இரு பாலாருக்கும் அது பற்றிய அறிவுறுத்தல், வழிகாட்டல் முக்கியமானது. அத்தகைய தன்மையினை விளக்குவதாக இவ்வத்தியாயம் அமைகின்றது. ஆண் என்றால் இப்படித்தான் இருப்பான், பெண் என்பவள் இவ்வாறுதான் இருப்பாள் என்ற பால் வேறுபாட்டை உடைத்து இருவரும் ஒன்று பட்டு சமமாக வாழ்வதன் மூலமே குடும்ப வாழ்வு சிறக்கும் என்பதைக் கூறி பால்நிலைப் பிரச்சினைகளை எவ்வாறு தீர்க்கலாம் என்று தீர்வுகளைக் கூறுவதோடு இறுதி அத்தியாயம் முடிகின்றது.

மேற்கூறப்பட்ட விடயங்களைப் பார்க்கின்ற போது இந்நூல், மாணவர்கள் பாலியல் ரீதியில் அறியாத பல விடயங்களை அறிந்து கொள்ள உதவுவதோடு எதிர்காலத்தில் குடும்ப மற்றும் பாலியல் ரீதியில் உரிய தீர்வுகளை எடுக்கக் கூடிய தன்மையை அவர்களுக்கு அளிப்பதாகவும் அமைகின்றது.

எனவே இவற்றைத் தொகுத்து நோக்கும் போது "மலர்ந்த யௌவனம்" ஆனது பாடசாலை மாணவர்களின் வயதிற்கேற்பவும், "இளமையின் பிரகாசம்" ஆனது பல்கலைக்கழக மட்டத்தினருக்கு ஏற்ற வகையிலும் அமைந்து காணப்பட்ட போதிலும், இவ்விருமட்டங்களிலும் பால்நிலைக் கல்வி பற்றிய விடயங்கள் விவாதங்களுடன் நின்றுவிட்டனவே அன்றி, அவை கல்வி நிறுவனங்களில் மாணவர் மத்தியில் கொண்டு செல்லப்படவில்லை என்பதே கவலைக்குரிய விடயமாகும். ■

**ச. ஜெயவதனி**
**சி. கோகிலராணி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அந்த ஒரு கணப்பொழுது...

என்னை
உன்னிடம்
வசீகரித்துச் சென்ற
அந்த ஒரு கணப்பொழுது...

காத்திருப்பை
கைவிட்டு விட்டு
நிசப்தத்தில் இருந்து விலகி
நெஞ்சை விட்டகலாத
பசுமையின் எதிரொலிகள்...

நட்சத்திரங்கள்
கண் சிமிட்டுகின்ற
இருண்ட வானத்தில்
அவற்றின்
வசீகரமும்
ஆளுமையும்...

மெல்ல மெல்ல
நான்
வல்லமையிழந்து
வலுவிழந்து செல்லுகையில்...

உண்மையின் பரிணாமம்
உயிர்ப்பதையும்
கால ஏட்டில்
புதிய
பக்கம் புரட்டப்படுவதையும்
உன்னால்
உருவாக்கப்பட்ட
அந்த
ஒரு கணப்பொழுதின்
விடியலினூடாக
என்னால்
உணர முடிந்தது.

**செந்துருத்தி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# முஸ்லிம் பெண்களும் பாலியல்பும்

இது 2004 இல் மும்பாயில் நடந்த உலக சமூக அமைப்பின் பணியமர்வில் சமர்ப்பிக்கப்பட்ட எண்ண அறிக்கை, இந்திய முஸ்லிம் பெண்களின் உரிமைக்கான வலையமைப்பு ஆஸ்வாஸ் -ஈ- நிஸ்வான் சபா ஐக்கியராச்சியத்தின் சவ்ராதிட்டம் (The SAFRA Project) ஆகியவற்றால் ஒழுங்கமைக்கப்பட்டது.

முஸ்லிம் பெண்களின் பாலியல்பு பற்றிய பிரதான எண்ணக்கருவானது அவர்களை மிகுந்த கருவளமுடைய முக்காடு போட்ட பணிவான பெண்கள் என்பதையும் தமக்கான எந்த உரிமையையும் அல்லது செயலாண்மையையும் அவர்கள் கொண்டிருக்காதவர்களாய் முற்றிலும் தமது ஆண் உறவினர்களில் தங்கியிருக்கிறாள் என்பதையும் உள்ளடககிய படிமமாக கொள்ளப்படுகிறது. மேற்கத்திய ஏகாதிபத்தியங்கள் இவ்வாய்பாடுகளை தமக்கு அனுகூலமாகக் கொண்டு முக்காட்டின் பின்னாலுள்ள முஸ்லிம் பெண்களின் வாழ்க்கையை விடுவிப்பது என்ற சாட்டில் நாடுகளுக்குக் குண்டு வீசியுள்ளன. இந்த வாய்பாடுகள் முஸ்லிம் பெண்களையும் அவர்களின் போராட்டங்களையும் சரியான முறையில் புரிந்துகொள்ளாததற்கான போதுமான சான்றுகளாகும். அதேநேரம் **முஸ்லிம் பெண்** என்ற வரைவிலக்கணத்தை முதன்மைப் படுத்துவதன் பொருட்டு தமது அரசியல் முடிவுகளுக்காக சமயத்தை தமக்கேற்ற முறையில் வியாக்கியானப்படுத்துகின்ற முஸ்லிம் சமூகததிலுள்ள பிற்போக்கு சக்திகளும் மாற்று அரசியற் சக்திகளை அழிப்பதற்காக இவ்வாய்பாடுகளுக்கு ஆதரவுகொடுத்து உற்சாகப்படுத்தியுள்ளன.

மாறாக பாலியல்பு பிரச்சினைகளும் முஸ்லிம் பெண்களின் பிரச்சினைகளும் செயற்பாட்டின் அடிப்படையில் ஒன்றிலொன்று வேறுபட்டனவாகத் தென்படுகின்றன. ஒருபுறத்தில் இந்தியாவில் நடைபெறுகின்ற பாலியல்பு பற்றிய உரையாடல் முரண்பாட்டிற்குரிய தந்தை வழிப் படிமங்களுக்கு வெளியே வாழ்கின்ற முஸ்லிம் பெண்களின் போராட்டங்களைப் பிரதிபலிக்கவில்லை. அதேவேளை இன்னொரு புறமாக தேசிய முஸ்லிம் பெண்கள் இயக்கங்கள் திருமண உரிமைப் பிரச்சினைகள் மீதும் சமூக பொருளாதார வலுவூட்டலிலும் கவனம் செலுத்துகின்றன. பாலியல்பு பற்றிய பிரச்சினைகள் எழும்போது அந்தக் குரல்கள் சிதறடிக்கப்பட்டு அவை இகழ்ச்சிக்குரியனவாகப் பார்க்கப்படுகின்றன.

சமயம் தமது வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சங்களையும் நெருங்கிய உறவுகள் சமூக பொருளாதாரத் தீர்மானங்கள் ஆகியவற்றை ஆளுகிறது என்ற இரட்டை நிலைமையை மத நம்பிக்கையற்ற முஸ்லிம் பெண்கள் தமது நம்பிக்கைகளுக்குப் பொருந்தாத நிலையில் எதிர்கொள்ளுகின்றனர். அதேசமயம் மத நம்பிக்கையுள்ள முஸ்லிம் பெண்களும் கூட சமயத்தின் பெயரால் தம்மைக் கட்டுப்படுத்துவதை எதிர்க்கின்றனர். நம்பிக்கை என்பது அவரவர் சொந்த





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயம் எனக் கருதுகின்றனர். முஸ்லிம்கள் பெரும்பான்மையாகவோ சிறுபான்மையாகவோ வாழுகின்ற நாடுகளில் குடும்பத்தில் பெண்களின் நாளாந்த வாழ்க்கை முறையாக தொகுக்கப்படாத முஸ்லிம் சட்டங்களாலும் குரான் ஹதீஸ் ஆகியவற்றை குறுகிய முறையில் வியாக்கியானம் செய்த சட்டங்களாலும் ஆளப்படுகிறது. அதற்கும் மேலால் அதிகமான சமூகங்களில் அதன் வழக்கங்கள் (சட்டங்களல்ல) பெண்களின் வாழ்க்கையை ஆளுகின்றன. இந்தச்சட்டங்களும் வழக்கங்களும் ஆணாதிக்கத்தை பிரதிபலிக்கின்றன. இவற்றை உடைத்து வெளிவர விரும்பும் முஸ்லிம் பெண்கள். இஸ்லாமிய அதிகாரத்தின் இடர்களையும் தமது "இஸ்லாமிய அல்லாத" "ஒழுக்கமற்ற" நடவடிக்கைகளுக்காக சமூகத்திலிருந்து விலக்கப்படும் நிலையையும் எதிர்நோக்குகிறார்கள்.

அவ்வளவு கட்டுப்பாடுகளுக்குள்ளும் ஆணின் உடைமையாக அல்ல எதிர்ப்பாலினத்தின் உடைமையாக இருப்பதைக் கேள்விக்கு உள்ளாக்கியுள்ளனர். இதுவரையும் உள்ள நிலைமைகளைக் கட்டிக்காத்தலுடன் மதத்தினை ஆதாரமாகக் கொண்டு அரசியல் ரீதியாகக் கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளும் அதிகாரத்தினரின் வியாக்கியானத்தை கேள்விக்கு உள்ளாக்கினர். சமயத்துக்குள்ளேயே காணப்படுகின்ற சமத்துவமின்மை பற்றி கேள்வி கேட்டுள்ளனர். பெண்களின் பாலியல்பைக் கட்டுப்படுத்துகின்ற ஆணாதிக்கத்துக்கு உட்பட்ட ஆணின் தனியாண்மைக்குட்பட்ட வியாக்கியானங்களைப் பற்றிக் கேள்வி கேட்கின்ற முறையில் எல்லா இயக்கங்கள் இடையேயும் ஒப்புமைகள் காணப்படுகின்றபோதும் முஸ்லிம் பெண்கள் எதிர் கொள்ளும் சவால்கள், கட்டுப்பாடு விதிக்கும் தனியான தன்மைகள் காரணமாகவும் சிறப்பாக பாலியல்பு தொடர்பாக கட்டுப்பாடு விதிக்கும் தன்மை காரணமாகவும் அவை தனித்துவமான தன்மைகளைக் கொண்டுள்ளன.

இந்தப் பணி அமர்வினூடாக முஸ்லிம் பெண்களின் பாலியல்பு விடயங்கள் பற்றியும் அதன் பல்வேறு இயங்குநிலை பற்றியும் விளங்கிக் கொள்வதை, சுற்றியிருக்கின்ற அமைதியை உடைக்க முயல்கிறோம். இந்தப் பணியமர்வு பாலியல் உரிமைகளுக்கான எமது போராட்டங்களை ஸ்திரப்படுத்தவும் அதனை அறிந்து கொள்ளவுமான ஒரு களமாக அமையும். எமது அனுபவங்களையும் இரண்டக நிலைமைகளையும் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளக் கூடியவாறு நட்புக் கூட்டுகளைக் கட்டியெழுப்பும் களமாக அமையும்.

## பாலியல்பு பற்றிய கண்டறியக் கூடிய விடயங்கள்

### 1. அரசும் பாலியல்பும்

எமது வாழ்க்கையின் ஏனைய அம்சங்களைப்போல இருக்கின்ற பாலியல்பு ஆனது மிகவும் தர்க்கத்துக்குட் படுத்தப்பட்டதும் அரசியல் ஆதிக்க வரம்புக் குட்பட்டதுமாகும்.

நாடுகளின் வளர்ச்சி வரலாறு முஸ்லிம் பெண்களின் பாலியல்பு பற்றிய பிரமாணங்களை வெவ்வேறு முறைகளில் மேலாண்மை செய்திருக்கிறது. உதாரணமாக நாடுகளின் குடித்தொகை அவர்களைச் சுற்றியுள்ள அரச உருவாக்கம் அவர்களின் சமூக வரலாற்று பொருளாதார உந்துதல்கள் செல்வாக்குச் செலுத்தியுள்ள முறையிலே முஸ்லிம் பெண்களின் பாலியல்பும் அரச நிறுவனங்களாலும் மக்களின் எண்ணத்திலும் ஆழப்பதிந்துள்ளன.

அந்த முறையிலே இறை அரசுகளிலும் உலகியல் அரசுகளிலும் முஸ்லிம்கள் பெரும்பான்மையாகவோ சிறுபான்மையாகவோ வாழுகின்ற நாடுகளிலும் காலனித்துவ அரசுகளிலும் அல்லது காலனித்துவம் இல்லாத நாடுகளிலும் முஸ்லிம் பெண்களின் பாலியல்பு மிகவும் வெவ்வேறான வகையில் ஆழப்பதிந்துள்ளன. அரசு வளர்ச்சியின் கருத்தியற் கட்டுமானங்களின் இடமாற்றம் சமூக பொருளாதார இலாப நோக்குகள் ஆகியனவும் அரசியலும் முஸ்லிம் பெண்களின் உடலின் மீதான கட்டுப்பாட்டையும் இயல்பையும் அளவையும் அவர்களின் உளவியல் சமூக சுதந்திரத்தையும் செயலாண்மையையும் தீர்மானித்துள்ளன.


அரசு உருவாக்கத்துக்கும் பாலியல்பு தொடர்பான பிரமாணங்களுக்கும் குறிப்பாக முஸ்லிம்பெண்களின் பாலியல்பு தொடர்பான பிரமாணங்களுக்கும் இடையே தொடர்புகளை ஏற்படுத்துவதன் மூலம் இந்தத் தோற்றப்பாட்டைக் கண்டடைவோமென நம்புகிறோம். **முஸ்லிம் பெண்** என்ற வகைப்பாடானது அசையாததொன்றல்ல அது முஸ்லிம் பெண்கள் வாழுகின்ற இட சூழமைவினால் சான்று காட்டக்கூடியதும் தீர்மானிக்கப்பட்டதும் என்ற புரிதலின் மூலம் இதனை நாம் செய்வோம்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் குழுவின் தேவையின் பொருட்டு முஸ்லிம் பெரும்பான்மையினரிடை அல்லது இறையரசில், அதுபோல முஸ்லிம்கள் சிறுபான்மையினரிடையே காணப்படுகின்ற பாலியல்பைக் கட்டமைத்தல் பற்றிய ஒரு அளிக்கை உபயோகமானதாகும். பாலியல்பினைத் தீர்மானிப்பதற்கும் இயங்கியலை வெளிப்படுத்துவதற்-

முஸ்லிம் அல்லாதவர்கள் குரானைக் குறைவாக மதிப்பிட்டு அதனால் பாதிக்கப்பட்டவர்களாக பாதுகாக்கப்பட வேண்டியவர்களாக உருவகிக்கப்பட்ட முஸ்லிம் பெண்களை இரக்கம் கொள்கின்ற போது சமூகத்துக்குள்ளேயுள்ள ஆணாதிக்கத்தை எவ்வாறு மறுதலிப்பார்கள். அதுபோல தமது சமூகத்துக்குள்ளே உள்ளஆதிக்கத்தை வெளிப்படுத்துவது முஸ்லிம் பெண்கள் தம் மீதும் தமது உடல் மீதும் கொண்டுள்ள அனுபவங்களில் குரானும் சமயமும் என்ன பங்கை வகிக்கின்றன?



குமல்லாது காலவோட்டத்தில் ஊக்கியாகவும் முற்றிலும் சரியானதெனவும் அரசியல் மயப்படுத்தப்பட்டதுமான இஸ்லாமியக் கட்டளைகளை குலைக்கவும் உதவும்.

## 2. பாலியல்பும் வலதுசாரிஅரசியலும்

2001 செப்டெம்பர் 11 இல் அமெரிக்காவுக் கெதிராக மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் பின் முஸ்லிம் என்பவர் அரசினுடைய எதிரியாக, இரத்ததாகமுள்ள, பயமுறுத்தும், பிற்போக்கு சக்தியாக பயங்கரவாதத்தின் மொத்த உருவமாக கொள்ளப்படுகின்றார். பயங்கரவாதம் என்ற இந்தச் சொல் முஸ்லிம்களுக்குரியதாகிற்று. சோவினியத்தின் (chauvinism) எழுச்சியுடன் சமயமும் அரசியலும் குடியுரிமைக்கும் சுதந்திரத்துக்கும் திரையிட்டு மூடுகின்றதாக நாட்டுக்கு அல்லது கடவுளுக்கு விசுவாசமாகவும் பணிவுள்ளவராகவும் இருக்கும் முக்கியத்துவத்தை ஏற்படுத்துகின்றதாக, சொந்த விமர்சனங்களுக்கு தடைவிதிக்கின்ற முறையில் பழக்கமான ஆனால் ஆபத்தான மொழியினால் உழப்பட்டன.

முஸ்லிம் பெண்களின் பாலியல்பு பற்றி இவை கொண்டுள்ள சம்பந்தம் யாது? அதிகமான முஸ்லிம் பெண்கள் அரசியல் சமய அடிப்படைவாத பிரிவினை நிலைமைகளில் தமது பாலியல்பு கட்டுப்படுத்தப்படுகின்றமையானது சமூகத்தின் மேன்மைக்கும் அதன் நேர்மைக்கும் தூய்மைக்குமான கருவியாக (நேர்மைக் கொலை குழந்தைமணம், பெண்கருவழிப்புஆகியன) தென்படுகின்றமையை கண்டுணர்ந்துள்ளனர். அதேநேரம் முஸ்லிம் பெண்களின் உடலானது தீவிரவாத போக்குடையோருக்குரிய, அவர்கள் விளங்கிக் கொண்டபடி சமூகத்தின் ஆன்மாவைத் தாக்குவதாக அதனை அழிப்பதற்குரிய விடயமாக காணப்படுகிறது. அடையாளத் தனித்துவத்தின் குறியீடுகளுடன் இரண்டறக் கலக்கும்போது அல்லது அதனைத் தாக்கும்போது ஏற்பட்ட விளைவாக முஸ்லிம் பெண்கள் தங்களுடைய **பாலியல்பிலும் உடலையும் முக்கியப்படுத்தி பர்தா அணிவதைக் காணலாம்.**

உலகளாவிய நிலையிலும் உள்ளூரிலும் வலதுசாரி அரசியலை ஸ்திரப்படுத்துவதானது முஸ்லிம் பெண்களின் பாலியல்பை எவ்வாறு வியாக்கியானப்படுத்துகிறது என்பதை பலவேறு நாடுகளின் அனுபவங்களையும் பயன்படுத்துவதன் மூலம் அறியமுடியும் என நம்புகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3. பால்நிலையும் பால் பன்மைத்துவமும் முஸ்லிம் பெண்களும்.

முஸ்லிம்பெண்கள் அவர்களின் சமூகத்தில் இயங்குகின்ற அதிகார இயங்கியலுக்குள் வாழும் அவர்களின் நிலையிலிருந்தும் அந்த சமூகங்களுக்கு வெளியே உள்ள பிற்போக்குத்தனமான அச்சுறுத்தலினால் உருவாக்கப்பட்ட குழப்பமான நிலைக்குள்ளிருந்து முஸ்லிம் பெண்களால் முன்வைக்கப்பட்ட பன்மைப் பால்நிலைக்கும் பாலியல் அடையாளத்துக்குமான உரிமைகோரலானது நடைபெறுகின்ற பிரதான உரையாடலில் போதுமான இடத்தைப் பெற்றதாகத் தெரியவில்லை. இன்றைய உலகமயமாக்கல் காட்சியில் நாடுகளின் ஏகாதிபத்தியங்கள் சந்தைப் பொருளாதாரத்தால் சுரண்டப்படுவதுடன் தேசிய சமய அடையாளங்கள் விழுமியங்களை **அதிகரிப்பதாகவும் தென்படுகின்றன.** ஆணாதிக்கத்துக்கு எதிராக முஸ்லிம் பெண்கள் மற்றவர்களுக்கு அச்சந்தருகின்றதாக, போதுமான அளவுக்கு விளங்கிக் கொள்ளப்படாது இருக்கின்ற, தம் உடல்மீதான கட்டுப்பாட்டினை தாமே வைத்திருக்கவும் **பால்நிலை பாலியல் விருப்பங்களை** கொண்டிருக்கவும் **போராடுகின்றனர்.**

முஸ்லிம் பெண்கள் தமது சமய எல்லைகளுக்கு வெளியேயும் உள்ளேயும் தாம், தமது சமூகம், தேசியம் என்பவற்றின் கருத்துகளை எதிர்த்துள்ளதுடன் அக்கருத்துகளுக்குப் புதிய அர்த்தம் கொடுத்துள்ளனர். இந்தப் புரட்சியாளரிற் (பெண்கள் குழுவினர் கல்விக்கான உரிமை போன்றன) சிலகுழுக்களிடையே (பெண்ணியக் குழுக்கள்) தர்க்கரீதியான தன்மையைக் கண்டபோதும் பாலியல்பை மையப்படுத்திய மறுப்பு பேசப்படாததாகவும் கண்காணாத ஒன்றாகவும் உள்ளது. சவால் கொள்வதற்காகவும் தந்தைவழி அமைப்புகளிலிருந்து விடுவிப்பதற்காகவும் முஸ்லிம் பெண்கள் தமது பால்நிலையையும் பாலியல்பையும் கையாண்ட வழிகளை நாம் பாராட்டுகிறோம்.

சிக்கலான நிலைமை என்னவென்றால் ஒருவருடைய பால்நிலை பாலியல் அடையாளம் என்பவற்றை சமய அடையாளம் தேசிய அடையாளம் ஆகியவற்றுடனும் சொந்த நம்பிக்கையுடனும் இணைத்தலாகும்.

### 4. முஸ்லிம் பெண்களின் உடல்அமைப்பும் குரானில் பாலியல்பும்

முஸ்லிம் பெண்கள் தமது மறுஉற்பத்தி பாலியல்பு பால்நிலை தங்களது உடலினை தாம் கட்டுப்படுத்தவும் அனுபவிக்கவும் (enjoy) ஆன விடுதலை வளங்களைப் பற்றிய குரானின் வியாக்கியானங்கள் யாவை? பெண்களின் உடல்மீது கட்டுப்பாடு விதிக்கின்ற மிக அவதானமாக கவனிக்கின்ற தந்தை வழிப்பட்ட நடைமுறைகளையும் ஆணாதிக்கத்தையும் சவாலிடுவதாக குரானை வியாக்கியானிக்க முடியுமா? முஸ்லிம் சமூகங்களில் ஆணாதிக்கத்தை வலியுறுத்துவதாக அல்லது பெண்களுக்கு வலுவூட்டுவதற்கான சாதனங்களில் ஒன்றாக குரான் உபயோகப்படுத்தப்படுகிறதா?

முஸ்லிம் அல்லாதவர்கள் குரானைக் குறைவாக மதிப்பிட்டு அதனால் பாதிக்கப்பட்டவர்களாக பாதுகாக்கப்பட வேண்டியவர்களாக உருவகிக்கப்பட்ட முஸ்லிம் பெண்களை இரக்கம் கொள்கின்ற போது சமூகத்துக்குள்ளேயுள்ள ஆணாதிக்கத்தை எவ்வாறு மறுதலிப்பார்கள். அதுபோல தமது சமூகத்துக்குள்ளே உள்ள ஆதிக்கத்தை வெளிப்படுத்துவது முஸ்லிம் பெண்கள் தம் மீதும் தமது உடல் மீதும் கொண்டுள்ள அனுபவங்களில் குரானும் சமயமும் என்ன பங்கை வகிக்கின்றன?

குரானால் அனுமதிக்கப்படாத பெண் வெறுப்புவாத வழமைகள் சமயத்தின் பேரால் எவ்வாறு சட்டரீதியானதாக (நேர்மைக் கொலைகள், பெண் கருவழிப்பு) ஆக்கப்படுகிறன? குரானுக்கு வெளியே முஸ்லிம் பெண்கள் தமது உரிமைகளைக் கோரும்போது என்ன சம்பவிக்கிறது? கடவுளை ஏற்றுக் கொள்ளாத முஸ்லிம் என்ற எண்ணக்கருவை ஒருவர் எவ்வாறு ஏற்றுக்கொள்கிறார்? முஸ்லிம்பெண்கள் தங்களை நிலைநிறுத்திக் கொள்வதற்கான முறையில் குரானை மீளவலியுறுத்திக் கொள்வதற்கான நிலையை எவ்வாறு உருவாக்கலாம்? அதுபோல முஸ்லிம் பெண்கள் தமது வாழ்க்கையை சரிசெய்வதற்கான போராட்டத்தை சட்டரீதியற்றதாக்க உபயோகப்படுத்தப்படும் குரான் பற்றிய விமர்சனங்களை விமர்சிப்பதற்கு தேவையான இடத்தை எவ்வாறு உருவாக்கலாம்? ■

---

மொழிபெயர்ப்பு

அம்மன்கிளி முருகதாஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கயல்விழி விரிந்த தோள்

இரத்தத்திலும்
வியர்வையிலும்
எழுதப்படும்
சரித்திரங்கள்
எந்த மனிதனாலும்
வாசிக்கப்படவுமில்லை
எழுதப்படவுமில்லை
இயந்திரப்பேய்கள் வாழுகின்ற
எல்லா வீட்டின்
சமையலறைச் சுவர்களிலும்
படுக்கையறைச் சுவர்களிலும்
இந்த சரித்திரங்கள் எழுதப்படுகின்றன.
ஒரு போதும் அழிந்து விடாமல்.
இயந்திரப்பேய்கள் ஒருபோதும்
தாங்கள் ஒரு சரித்திரம் என்பதை
உணர்வதில்லை.
படுக்கை விரிப்பை சரிசெய்வதையும்
புதிய சமையலை கண்டுபிடிப்பதையும் விட
இந்த உலகம் விரிவதே இல்லை.
இது பற்றிக் கூட
மிகப்பெருமையாய்
கூடிக் கூடிக்
குசுகுசுக்கின்றன
கண்ணாடி வளையல்கள்.
பார்வையை விட்டு
சற்றும் வளர்ந்து விடாமல்
கண்களின் எல்லைப்புறம்
பெரிய பெரிய மதில் சுவர்கள் கொண்டு
மறைக்கப்பட்டுள்ளதை
எந்தக் கயல்விழிக் கண்களும்
கண்டு கொள்ளவில்லை.
குனிந்து கொள்ளச் சொல்லும்
வெட்கத்தின் பின்னணியில்
என்னென்ன அரசியல் ஒளிந்துள்ளதோ.
ஒருபோதும் நானறியேன்,
பரந்த மார்பினையும்
விரிந்த தோள்களையும் கொண்ட
மானிடரை
இன்னும் எத்தனை தசாப்தங்களுக்கு
கயல்விழி உவமைகளும்
குனிந்த தலைகளும்
கட்டிக்காக்குமென்று.

# ஆணிவேரின் மரபணுக்கள்

வன்முறை நிகழ்த்தப்படும் போது
அது நிகழ்த்தப்படுகின்ற பக்கம்
நீளமான கூந்தல்கள்
அலங்கோலமாய் கலைக்கப்படுகின்றன.
நிகழ்த்திவிட்ட வன்முறையில் இருந்து
எச்சங்கள்
அசிங்கமான மனிதர்களாய்
எழுந்து செல்கின்றன.
நீளமான துணிகளைக்கொண்டு
அல்லது
நெ.்.ப்கீன்களைக் கொண்டு
அசிங்கங்களை அழித்துவிட முடியும்.
பேய்களின் நுனி விரல்களிலிருந்து
தோற்றமெடுக்கும்
ஆணிவேரின் மரபணுக்கள் கொண்ட
வாரிசுகளை
ஒரு போதும்
தான் என்ற சுய கர்வத்திலிருந்து
கட்டுடைக்க இயலாது.
வழிந்த சிவப்புத் திரவத்திலிருந்து
விருப்பமின்மை நிகழ்ந்தது என்பதைத் தவிர
வேறு பெரிய கண்டுபிடிப்பு எதனையும்
உணர முடியாமல் போன பின்னர்
உயிரிலிருந்து எதை எடுத்துக் கொள்ள முடியும்.
ரத்தமும் சகதியுமாய்
வரும் உணர்வில்
வன்முறையைத் தவிர
என்ன இன்பம் நிகழ்ந்தது?

stock.xchng

**பெண்ணியா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நளினி ஜமீலா - ஒரு பாலியல் தொழிலாளியின் சுயசரிதை - நூல் பற்றிய அறிமுகம்

நமது சமூகக் கலாசாரம் பெண்ணை இரண்டாம் பட்சமாகவே நோக்குகின்றது. இதற்கான காரணிகளில் முக்கியமானது ஆணை சார்ந்து பெண் வாழுதலாகும். பெண் முதலில் கணவனையும் பின்னர் மகனையும் சார்ந்து வாழுதலைக் காணலம். அதாவது ஒரு பெண் பொருளாதார ரீதியாகவும் பாதுகாப்பு ரீதியாகவும் சார்ந்து வாழ்கின்றாள். எனவே பொருளாதார ரீதியாகவும் பாதுகாப்பு ரீதியாகவும் பெண்ணை வலுப்படுத்தல் அவசியமாகின்றது. அடுத்து உடல் ரீதியாய் கவர்சிக்குரியவளாய், போகத்திற்குரியவளாய் பெண் பார்க்கப்படுகின்றாள். பால்நிலை வேறுபாடுகளை ஏற்றத் தாழ்வுகளாகக் கொண்டே இந்நிலை உருவாகியுள்ளது. இத்தகைய எமது கலாசார சூழலில் மலையாளத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்ப்பு செய்யப்பட்ட "நளினி ஜமீலா ஒரு பாலியல் தொழிலாளியின் சுயசரிதை" என்ற நூல் எமது கலாசாரம் பற்றிய கருத்துகளை மறுபரிசீலனை செய்கிறது. இதனால் இந்நூலைப் பற்றி அறிமுகம் செய்ய விரும்புகிறேன்.

இந்நூல் ஏழு அத்தியாயங்களைக் கொண்டது. கேரள மாநிலத்தில் ஒரு சிற்றூரில் வைஷ்ணவ குடும்பத்தில் பிறந்த நளினி தன் மூன்று வயதிலிருந்து இடம்பெற்ற சம்பவங்களையும் எதிர்கொண்ட பிரச்சினைகளையும் அனுபவமாக இந்நூலில் பகிர்ந்துள்ளார். முதல் அத்தியாயத்தில் கல்வி, வீடு, தன் இளமைப்பருவம், குடும்பம், எதிர்பாராமல் ஏற்பட்ட வறுமை, ஒன்பது வயதில் வேலைக்குச் சென்றமை, திருமணம் போன்ற நிகழ்வுகளைக் கூறுகின்றார்.

"பெரியம்மாதான் (பெரியப்பாவின் மனைவி ) குடும்ப சம்பந்தமான முக்கியமாக விஷயங்களை முடிவு செய்வாள். பெரியம்மா சொன்னாள், மூன்றாம் வகுப்பு வரை படித்தாயிற்றல்லவா இனிப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்ப வேண்டாமென்று. அதற்கான காரணம் என்னவென்று எனக்கு நினைவில்லை" என தன் கல்வி இடை நிறுத்தப்பட்டதனைக் கூறுகின்றார். அத்தோடு "படிக்க முடியாத வருத்தத்தை யாரிடமும் சொல்ல முடியாமல் இரண்டு கைகளையும் தலையில் வைத்துக் கொண்டு அழுவேன்" எனத் தன் விருப்பு, வெறுப்புகளை வெளிப்படுத்த முடியாத சூழலினை சுட்டிக் காட்டுகின்றார்.

"நான் படித்துப் பெரிய ஆளாக வேண்டும் என்று அம்மா ஆசைப்பட்டிருக்கிறாள். நான் ஏதோ பெரிய தியாகம் செய்துவிட்டதாக அம்மா நினைத்தாள். ஒட்டுத்




"ஏறுங்கடி ஜீப்பில் என்று சொன்னார்கள்". அடிபட்ட வேதனையும் வருத்தமும் முட்டிக் கொண்டு வந்தன. நான் சத்தமாகச் சொன்னேன். "இராத்திரி கூடப் படுக்கிறதும் பொலிஸ்தான், பகல்லே அடிச்சுக் கொல்லறதும் போலிஸ்தான்".

•••••••••••••

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணிகளால் ஏற்பட்ட கை சிராய்ப்புகளைப் பார்த்ததும் திரும்பவும் அழுதாள். நாளையிலிருந்து வேலைக்குப் போகக்கூடாது என்றாள். ஆனால் மறுநாள் நான் வேலைக்குப் புறப்படும் போது மறுப்பேதும் சொல்லவில்லை" எனத் தன் குடும்பநிலை, சிறுவர் வேலைக்குச் செல்வதால் ஏற்படும் மன அழுத்தம் பற்றிக் கூறுகின்றார்.

தன் திருமணம் பற்றிக் கூறும்போது, "என் திருமணம், முன் முடிவு செய்து நடந்த திருமணமல்ல. எதிர்பாராத வகையில் நடந்தது. அப்பா வேலைக்குப் போவதில்லை. ஆனால் வேலைக்குப் போகும் என் மீது கட்டுப்பாடுகள் விதிக்கவும், காசை எப்படி செலவு செய்ய வேண்டும் என்றும் அம்மாவிடம் சொல்வது போல் என்னிடமும் சொல்வார். அப்பா என்னை நன்றாக அடித்தார். வீட்டை விட்டு வெளியேறும்படி சொன்னார். வீட்டை விட்டு வந்து விட்டேன். பதினெட்டு வயதுப் பெண். எங்கேயாவது தங்கிவிடுவதும் நடக்கிற விஷயமல்ல. என்னைத் திருமணம் செய்ய நிறையப் பேரிருந்தனர். அவர்களில் ஒருவரைத் தேடிப் பிடிக்க முயற்சி செய்தேன்" இவ்வாறாகத் தனது பாதுகாப்பிற்காகவே திருமணம் செய்துள்ளதை கூறுகின்றார்.

இரண்டாவது அத்தியாயத்தில் திருமண முறிவு, புதியவேலை, பாலியல் தொழிலின் போது ஏற்பட்ட அனுபவங்கள், தொழில் நடத்துபவர்கள் பற்றிக் கூறுகின்றார். திருமண முறிவும் அதன் பின்னர் பாலியல் தொழிலை தெரிவு செய்தமைக்கான காரணம் பற்றிக் கூறுகையில். "கணவன் இறந்த பிறகு பெரிய ஒரு தொகையை பிள்ளைகளுக்கு செலவுக்குத் தரவேண்டுமென்று மாமியார் சொல்லி விட்டதைத் தொடர்ந்துதான் நான் பாலியல் தொழிலுக்கு வந்தேன்" என பாலியல் தொழிலில் ஈடுபடுவதற்கான காரணத்தைக் கூறுகின்றார்.

"ஏறுங்கடி ஜீப்பில் என்று சொன்னார்கள் அடிபட்ட வேதனையும் வருத்தமும் முட்டிக் கொண்டு வந்தன. நான் சத்தமாகச் சொன்னேன். "ராத்திரி கூடப் படுக்கிறதும் பொலிஸ்தான், பகல்லே அடிச்சுக் கொல்லறதும் போலிஸ்தான்". அடிக்கும்போது ஏ.எஸ்.ஐ கேட்டார் "ஏண்டி ராத்திரி சார்கூட படுத்துட்டா சார் எங்ககிட்டே சொல்லமாட்டார்னு நெனச்சுட்டியா? பிறகு எஸ்.ஐ வந்தார். அவர் என்னிடம் அன்பொழுக நடந்து கொண்டார். அடிப்பதை நிறுத்தச் சொன்னார். இராத்திரி தன்னுடன் வந்தால் விட்டு விடுவதாகப் பேரம் பேசினார். தற்சமயம் அங்கேயிருந்து போய்விட்டால் போதுமென்பதால் சம்மதம் தெரிவித்துவிட்டுத் தப்பி விட்டோம்" எனத் தன் அனுபவத்தினைக் கூறுகின்றார். இங்கு பொலிஸ் - சட்டப் பாதுகாப்புக்கான நிறுவனத்தின் போலித் தன்மையை சுட்டிக் காட்டுகிறார்.

பின்னர் பாலியல் தொழிலினை விட்டுவிடுகின்றார். அதற்கான காரணம் பற்றிக் கூறுகையில் "அப்போதும் வீட்டிற்குத் தொடர்ந்து பணம் அனுப்பிக் கொண்டுதானிருந்தேன். ஒரு முறை நான் அனுப்பி வைத்த பணம் கைப்பற்றப்படாமல் திரும்பி வந்தது. அதற்கான காரணம் பற்றி விசாரித்த போது என் கணவனின் தம்பி அரபு நாட்டுக்குப் போய் நன்றாக சம்பாதித்து வீட்டுக்கு நிறையப் பணம் அனுப்பிக் கொண்டிருப்பதாக அறிந்தேன். பணத்தைத் தொடர்ந்து பெற்றுக் கொண்டிருந்தால் நாளை ஒரு நாள் நான் குழந்தைகளின் மீது உரிமை கொண்டாடி விடுவேன் என்ற பயம் அவர்களுக்கு இருந்தது. குழந்தைகளை வளர்ப்பதற்காகத்தான் நான் இந்தத் தொழிலுக்கு வந்தேன். எல்லா தொழில்களையும் போல் இதிலும் அலுப்புத்தட்டிய பிறகும் கூட தொடர்ந்து இதில் ஈடுபட்டதும் குழந்தைகளைக் காப்பாற்றுவதற்காகவே. அதன் பின் இந்தத் தொழிலை நிறுத்திக் கொள்வது குறித்து தொடர்ந்தும் ஆலோசனை செய்தேன்" என பாலியல் தொழிலை விட்டு மீண்டு வாழ்ந்தமை பற்றி கூறுகின்றார்.

மூன்றாம் அத்தியாயத்தில் மீண்டும் திருமணம் செய்தமை (இரண்டாவது திருமணம்) குடும்ப வாழ்க்கை, உதக மண்டலத்தில் வியாபாரம், மகளின் கல்வி, வியாபார வீழ்ச்சி, மகளுடன் தெருவில், மீண்டும் பாலியல் தொழிலுக்கு செல்லல் போன்றவற்றினைப் பற்றி பகிர்ந்துள்ளார். இந்து மதத்தைச் சேர்ந்த நளினி இஸ்லாம் மதத்தை சேர்ந்தவரை மணம் செய்ததனால் பெயரினை நளினி ஜமீலா என மாற்றுகின்றார்.

நான்காவது அத்தியாயத்தில், திருமண முறிவுக்குப் பின்னர் குழந்தையைத் தனியே வளர்க்கிறார். இடையில் நோய் வாய்ப்படுகின்றார். இறுதியில் மீண்டும் பாலியல் தொழிலையே தெரிவு செய்கின்றார். அப்போதுதான் பாலியல் தொழிலாளர் அமைப்புடன் தொடர்பு ஏற்படுகின்றது. "இப்படியாக பல்வேறு நிலைகளில் வாழ்க்கை நடத்தியும் பாலியல் தொழில் செய்தும் வாழ்ந்து வந்த நான் ஒரு பாலியல் தொழிலாளியென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை பிரகடனம் செய்து உறுதியுடன் வாழத் தொடங்கியது ஜுவாலாமுகியின் தொடர்புக்குப் பிறகுதான்" என தன்னை ஒரு பாலியல் தொழிலாளியாக அடையாளப்படுத்துகின்றார்.

இதன் பின்னர் ஜீவாலாமுகி (இது நெருப்பு முகமுடையவள் என்ற அர்த்தம் கொண்டது) என்ற பாலியல் தொழிலாளர்களின் அமைப்புடன் இணைந்து செயற்படத் தொடங்கிய அனுபவங்களையும், எதிர்கொண்ட ஆபத்துகள், புதிய நண்பர்களுடனான தொடர்பு, தாய்லாந்துப் பயணம், மகளின் திருமணம், இவை பற்றிய அனுபவம் போன்றவற்றை பகிர்வதாக அமைந்துள்ளது.

அம்மாவின் நினைவு, ஊடகங்களுடனான தொடர்பு, தன்னைப் போன்ற சகோதரிகளின் பிரச்சினை பற்றியதாக ஐந்தாம் அத்தியாயமும், பாலியல், பாலியல் உறவு சார்ந்த கருத்துகள், வாடிக்கையாளர், தொழிலாளர்களின் மறுவாழ்வு பற்றியதாக ஆறாவது அத்தியாயமும், வெறும் பணத்தை மட்டும் தொழிலாளர் பார்ப்பதில்லை என குறிப்பிட்டதோடு ஆண் பாலியல் தொழிலாளர் பற்றிய அறிமுகத்துடன் சுயசரிதை முடிவடைகின்றது.

இவர் தனது சுயசரிதையில் பாலியல் சார்ந்து தெளிவாகப் பேசியுள்ளார். தான் வாழ்ந்த சூழலின் சமூகக் கட்டமைப்பு, சிறுவயதிலிருந்து தான் எதிர் நோக்கிய பிரச்சினைகள் பெண் என்பதால் சமூகம் பார்க்கும் பார்வை போன்றவற்றோடு தன்னைக் காப்பாற்றிக் கொள்ள பாலியல் தொழிலை தெரிவு செய்திருப்பதையும் கூறுகின்றார்.

பாலியல் சார்ந்து பேசுவது, குறிப்பாக பெண்கள் பாலியல் சார்ந்து வெளிப்படையாகப் பேசுவது ஒழுக்கத்திற்கு மாறான செயலாக பார்க்கப்படுகின்றது. தன் உடல் சார்ந்து முடிவுகள் எடுப்பதற்கும் பெண்கள் அனுமதிக்கப்படுவதில்லை. உதாரணமாக தமக்கு விருப்பமான வகையில் குழந்தைகளின் எண்ணிக்கையை தீர்மானிக்க முடியாமை போன்றவற்றை கூறலாம்.

ஒரு ஆண் தன் எழுத்தில் பாலியல் சார்ந்து பேசுவது தன் விருப்பு, வெறுப்பான தன் கருத்துகளை வெளிப்படுத்துவது என்பது சாதாரண விடயமாகின்றது. ஆனால் இதை ஒரு பெண் பேசும் போது அவள் குடும்பத்திற்கு ஏற்றவள் அல்ல என அசாதாரண விடயமாய் கண்டனத்துக்குரியதாய், ஒழுக்கக் கேடான விடயமாகப் பார்க்கப்படுகின்றது.

இதே போன்றுதான் பாலியல் தொழிலில் ஈடுபடும் பெண்களும் பார்க்கப்படுகின்றனர். பாலியல் தொழில் ஒரு தொழிலாக ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. மாறாக சமூக ஒழுக்கத்திற்குப் புறம்பான தொழிலாகவும் உயிர் கொல்லி நோய்க்கு முக்கிய காரணமெனவும் பேசும் ஒரு சூழலை அவதானிக்கலாம். சமூக விரோதிகள் என்றும் கூறுவதுண்டு. பொறுப்பாளியாக தண்டனைக்குரியவளாய் பெண்களே குற்றம் சாட்டப்படுகின்றார்கள். இவ்வாறான பெண்களே சமூக சீர்குலைவுக்கு காரணியாகின்றனர் என கூறும் நிலையைக் காணலாம். இவர்களையும் சக மனிதராய் பாவிக்கும் தன்மை சமூகங்களிடையே காணப்படுவதில்லை. அதேவேளை சமூக ஒடுக்குமுறைகள் காரணமாக பாலியல் தொழிலாளரும் தம்மை பாலியல் தொழிலாளி என அடையாளப்படுத்திக் கொள்வதில்லை.

ஆனால் பாலியல் தொழிலாளர்களை அங்கத்தவர்களாக கொண்டதாக ஜீவாலாமுகி அமைப்பு காணப்படுகின்றது. ஒரு பாலியல் தொழிலாளி சக மனிதர் போல் மதிக்கப்படவும் சுதந்திரமாய் வாழவும் செயற்படவும் முடியும் என்பதனை வலியுறுத்துவதாகவே



நளினி ஜமீலா

**ஒரு ஆண் தன் எழுத்தில் பாலியல் சார்ந்து பேசுவது தன் விருப்பு, வெறுப்பான தன் கருத்துகளை வெளிப்படுத்துவது என்பது சாதாரண விடயமாகின்றது. ஆனால் இதை ஒரு பெண் பேசும் போது அவள் குடும்பத்திற்கு ஏற்றவள் அல்ல என அசாதாரண விடயமாய் கண்டனத்துக்குரியதாய், ஒழுக்கக் கேடான விடயமாகப் பார்க்கப்படுகின்றது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவாலாமுகியின் செயற்பாடுகள் காணப்படுகின்றன. இவ்அமைப்புடன் ஏற்பட்ட தொடர்பின் பின்னர் நளினி ஜமீலா தன் சுயம் சார்ந்து, தொழில் சார்ந்து சிந்திக்கவும் செயற்படவும் விளைகின்றார். கட்டடத் தொழில், ஆசிரியத் தொழில் போன்று பாலியல் தொழிலை ஒரு தொழிலாக செய்ய முடியும் என்கின்றார்.

அதாவது "ஆசிரியரிடம் கல்வியை இனாமாகப் புகட்டச் சொன்னால் புகட்டுவாரோ? அதற்கு சம்பளம் தர வேண்டும். இதைப் போல்தான் பாலியலும் ஜேசுதாஸ் பாடுவதற்குப் பணம் வாங்குகிறாரே? இசையென்பது அனுபவிக்கத் தகுந்த உன்னதமான கலை இல்லையென்பதா இதற்கு காரணம்? இதைப் போன்றுதான் பாலியலும் பாடுபவன் தன் குரலுக்கும் ஆரோக்கியத்திற்கும் கேடுவராமல் பாதுகாத்துக் கொள்வது போன்ற கவனம் பாலியல் தொழிலாளர்களுக்கும் தேவைப்படுகின்றது" என சாதாரண தொழிலையும் அதற்குரிய பாதுகாப்புப் பற்றியும் கூறுகின்றார்.

பாலியல் தொழிலை விட்டு வாழ நினைப்பவர்களையும் சமூகம் ஏற்றுக் கொள்வதில்லை. அது பற்றி கூறுகையில் "மறுவாழ்வு என்பது அவர் சுதந்திரமாக சமூகத்தில் வாழுதலாகும்". அதாவது "பாலியல் தொழிலாளர்களுக்கு மறுவாழ்வு அளிக்க வேண்டும் என்று சொல்லும் நீங்கள் அவர்களது சமூகத் தொடர்புகள் எப்படியிருக்கிறது என்பதனைப் பற்றி தெரிந்து கொண்டிருக்கிறீர்களா? அவர்களது சமூக தொடர்புகளை வலுப்படுத்தும் விதமாக மறுவாழ்வு அளிப்பது பற்றி உங்களில் யாராவது சிந்தித்திருக்கிறீர்களா? இடத்தை மாற்றித் தங்க வைப்பதைத் தவிர அவர்களுக்கு உத்தரவாதமான வாழ்வாதாரங்களை ஏற்படுத்திக் கொடுக்க உங்களால் இயலுமா? எங்களுடைய கோரிக்கை பாலியல் தொழிலாளர்களை குற்றவாளிகளாகக் கருதுவதிலிருந்து விடுதலை தரவேண்டும் என்பது தான்" என மறுவாழ்வு பற்றிய தெளிவான கருத்தினைக் கூறுவதைக் காணலாம்.

நளினி ஜமீலாவின் சுயசரிதை பாலியல் தொழிலாளியின் இன்னொரு பக்கத்தினை எமக்குக் காட்டுகின்றது. அவரை ஒரு பெண்ணியவாதியாக, எழுத்தாளராக, குறும்பட இயக்குனராக மற்றும் ஆளுமை உள்ளவராக காண்கின்றோம். தங்கள் சுதந்திரம் சார்ந்து, தங்கள் மீதான ஒடுக்கு முறைகளுக்கு எதிராக போராடும் திறனையும் அவர்களிடம் அவதானிக்கலாம்.

இந்நூலை மலையாளத்திலிருந்து தமிழில் மொழிபெயர்த்தவர் குளச்சல் மு.யூசுப்

அவரது முன்னுரை குறிப்பிடத்தக்கது. "நளினி ஜமீலாவின் இந்த சுயசரிதை திருத்தி எழுதப்பட்ட மறு பதிப்பு. முதலில் தொகுக்கப்பட்ட அவரது பாலியல் தொழிலாளியின் சுயசரிதை கேரளத்தில் எந்த அளவிற்கு அதிர்வுகளை உருவாக்கியதோ அதே அளவிற்கு திருத்தியெழுதப்பட்டதும் விவாதத்திற்குள்ளானது. உலகில் சுயசரிதையை திருத்தியெழுதியவர் யாருமில்லை. இதற்கு எந்த முன்னுதாரணங் களும் கிடையாது. நளினி ஜமீலா தனக்கே உரித்தான எளிமையான நியாயங்களுடன் இதனை எதிர்கொண்டார். நான் இந்த தொழிலுக்கு வந்தது யாரையும் முன்னுதாரணமாகக் கொண்டல்லவே. எனவே இந்த முன்னுதாரணத்தை உருவாக்கிக் கொண்டவளும் நானாகவே இருக்கட்டும்.

திருத்தப்பட்ட மற்றும் திருத்தப்படாத இரண்டு நூல்களையும் மொழிபெயர்த்தவன் என்ற நிலையில் என்னால் புரிந்து கொள்ள முடிந்தவை நளினி ஜமிலா சொல்லும் போது, அவற்றை தொகுத்தவர் மூலப்பிரதியை தொலைத்துவிட்ட நிலையில் தன் நினைவுகளிலிருந்து எழுதிக் கொண்டதாக குறிப்பிடுகின்றார். முன்னதில் தகவல் பிழைகளோ விடுபடல்களோ இல்லையென்றாலும் தொகுத்தவரின் சார்பு விசாரணைகள் சில இடம்பெற்றிருந்தன. திருத்தப்பட்ட பிரதியை நளினியே எழுதியதால் அவை தவிர்க்கப்பட்டுள்ளன. இதுவே இரண்டிற்குமான வேறுபாடு." என இவரது முன்னுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.


கேரளத்தில் நளினி ஜமீலாவின் இந்நூல் பல விவாதங்களையும் சமூக கலாசார ரீதியான மாற்று சிந்தனைகளையும் ஏற்படுத்தியது. தமிழ் நாட்டில் இதன் மொழிபெயர்ப்பு குறுகிய காலத்துள் இரண்டாம் பதிப்பாகவும் வந்துள்ளது. இந்நூல் தமிழ் நாட்டிலும் பல அதிர்வுகளையும் விவாதங்களையும் உருவாக்கியுள்ளது. இதே போன்று நமது சூழலிலும் பாலியல் தொழிலாளர் பற்றிய புரிந்துணர்விற்கும் விவாதத்திற்கும் இந்நூல் வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை.■

**கி. கலைமகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேசப்படாத துயரங்கள்



"ஆகாயம் அலைவீசாக் கடல்
இன்ன பிற
நீர் நிலைக்கும் மட்டுமா
கோடானு கோடி நட்சத்திரப் பூக்கள்?
புழுங்கி வெதும்பாதே
நான் தருவேன் உனக்கு" என
பூமிக்காய் கொஞ்சம்
பூத்துச் சொரிகிறது பவளமல்லி.

சும்மா இருக்குமா காற்று?

"இங்கே பாரும் சாளரத்தைத் திறந்து
இன்னும் குலை ஈனா வாழை
மின்னொளியில் பளபளத்து
மெல்லத் தவழ்ந்து வரும்
நள்ளிரவின் மெல்லிசைக்கு
நளினமாய் நடனமிடும் கோலமதை.
சற்று வெளியே போவோமா அன்பரே?
கிணற்றடியில்
பின்னிலவு எழுந்து வரும்
பொழுது வரை பேசியிருந்து வருவோமா?

"சை என்ன புதினமிது?
சாத்தி வை சாளரத்தை
குளிர்காற்று
ஆகாது குழந்தைக்கும் உனக்கும்
பேசாமல் வந்து படு"

* ** ** ** ** ** *

நாக்கு அது நிமிடத்தில்
புரண்டெழும் ஒரு பூ நாகம்

"என்ன செய்யலாம்?
பெருமூச்செறியலாம்.
காலக் கனவின் மீதி இரு முத்தாய்
விழி நீரைச் சுண்டியெறிந்து
பத்திரமாய் என் கனவைப்
புதைத்து வைக்கலாம் புத்தகத்துள்."

* ** ** ** ** ** *

"என்ன அழுகை இது?
இந்த நிசியில் என் மகனே!
அற்புதப் பொழுதுகள் அர்த்தமற்றுப் போனதென்றா?"
பின்னாளில்
இது போல் இன்னோர் பொழுதில்
எங்கள் பேசப்படாத துயரங்களை
உன்னுடன் நான் பகிர்ந்து கொள்வேன்.
அப்போதும்
என் மகன் நீ அழாதே!
பெண் பூவுமல்ல பேயுமல்ல.
பெண்.
தனித்துவங்களுடன் புரிந்துகொள் அவளை
போதும் அது எனக்கு."

# தொய்வில்...

மின்சாரம் நின்று போனதில்
இருளின் நுட்பங்கள் பெருகும் இரவு
தென்னோலைக்கீற்றும் தூங்கிப் போனபின்
வெளியே பனி கசிந்து அழுதபடி
சுவாசக் குழாய்கள் இறுகிக் கனத்து
விழி மூடிச் சரிய
காதோரம் வழிகிறது நீர்
கழிவிரக்கம்.

சாமக்கோழி! என்தோழி!
வெளியே வரவா அழைக்கிறாய் என்னை?
என்ன தெரியும் உனக்கு?
வேதனையின் விம்முதலில்
ஒரு அறைப் பொந்தில்
தனித்து புலம்பி அழுது அலைந்து
சிறகடிக்கும் ஒரு குயில் நான்.

பின்னிரவு துயருற்று நலியும்
பிறை நிலவு வெகு தொலைவில்
நான் - நீ - இன்னும்
பொங்கும் கடலில் துயரைக் கழுவி
அலையும் முகிலைத் தாவி அணைக்க
இன்னும் இன்னும் சுழலும் உலகு.
தன்னைத் தானே சுற்றிச் சுழன்று
அமைதி காணும் சிருஷ்டி அது.

எனக்கோ குகை மனது
வலியது எனினும் தொடரும்
காற்றில் உலைந்தும் அலைந்தும்
எரிந்தும் அழியா அக்னி.
உள்ளே அடி இருளில்
தெரிகிறதா?
உடைந்துவிட்ட அஸ்திரம்?

யவனிகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்பதுகளில் ஈழத்து தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சிப் போக்கில் பெண்கள் முக்கிய இடத்தினைப் பெறுகின்றனர். இக்கால கட்டத்தில் எழுத்துத்துறை நோக்கிய பெண்களின் பிரவேசத்தைக் காண முடிகின்றது. குறிப்பாகச் சொல்வதானால் கவிதைத் துறையின் ஊடாக இவர்கள் தமது எண்ணங்களையும், அனுபவங்களையும், அபிலாசைகளையும் வெளிப்படுத்துகின்றனர். இதுவரை காலமும் சொல்லப்படாது, சொல்லப்படக் கூடாது என்று மரபுக் கட்டுக்குள் முடக்கப்பட்ட விடயங்களை "சொல்லாத சேதிகள்" மூலம் சமூகத்திற்கு எடுத்து சொல்லினர். எண்பதுகளில் ஈழத்தில் உருவாகிய ஒரு புதிய சமூக, அரசியல் பிரக்ஞையின் முக்கிய கூறாக பெண்களின் படைப்புகளைக் காணலாம். பெண்ணின் இருத்தல் பற்றியும், கலாசார விழிப்புணர்வு பற்றியும் சொல்வதோடு அக்கால கட்ட பிரச்சினைகளை வெளிப்படுத்துவனவாகவும் இத்தொகுப்பு அமைகிறது.




# ஈழத்துப் பெண் கவிஞைகளின் கவிதைகளில் உடல் பற்றிய கருத்துகள்...

மனித சமூகம் நீண்ட காலமாக ஆணாதிக்கம் கொண்ட சமூகமாகவே இயங்கி வந்துள்ளது. இன்றுவரை ஆணாதிக்கத்தின் தாக்கம் சமூகத்தின் பல்வேறு நிலைகளிலும் செல்வாக்கு செலுத்துவதைக் காண முடிகின்றது. இந்த நிலையில் உடலியல் அம்சத்தின் அடிப்படையில் ஒவ்வொரு நிலையிலும் பெண்கள் அடக்கப்பட்டும், முடக்கப்பட்டும் சுதந்திரம் பறிக்கப்படும் போதும் எதிர்த்துக் குரல் கொடுக்க வேண்டிய கட்டாய சூழல் தோன்றுகிறது. இந்நிலையில் பெண்கள் தமது உணர்வுகளையும், எண்ணங்களையும், கருத்துகளையும், ஆற்றல்களையும், சிந்தனைகளையும் இலக்கியங்களின் ஊடாக வெளியிடத் தலைப்பட்டனர். ஏனெனில் காலம் காலமாக பெண்களின் பிரச்சினைகளையும், உணர்வுகளையும், அனுபவங்களையும் ஆண்களே கூறி வந்துள்ள மரபைக் காணலாம். அவ்வாறான நிலைமையைத் தகர்த்து பெண்கள் தாங்களே தங்களது உணர்வுகளையும், எண்ணங்களையும், கருத்துகளையும், அனுபவங்களையும், அபிலாசைகளையும் கூறுவதோடு அவ்வாறு செயற்படுவதற்கு தடையாக இருக்கின்ற விடயங்களை எதிர்த்துக் குரல் கொடுக்கின்ற திறனையும் வளர்த்துக் கொண்டனர். இவ்வாறான சூழ்நிலை எண்பதுகளில் நிலவியது. தமிழ்த் தேசியம் பற்றிய கருத்துக்கள் வலுவடைந்த காலமாகவும் தமிழருக்கெதிரான இனரீதியான அடக்குமுறை கட்டவிழ்க்கப்பட்ட காலமாகவும் எண்பதுகளை அடையாளம் காணலாம். உரிமை, ஜனநாயகம், இனரீதியான தனித்துவம் போன்றன சிந்திக்கப்பட்ட காலம் இதுவாகும்

எனவே இக்காலத்தில் பெண்களது பங்கும் அவசியமாக உணரப்பட்டது. அவர்களும் தங்களது உரிமை, சுதந்திரம், சமத்துவம் பற்றிய சிந்தனைகளை முன்னெடுக்க வேண்டிய சூழ்நிலையை உணர்ந்து செயற்பட்டனர் என்றே கூறலாம். தங்களுக்கென ஒரு இலக்கியப் பாரம்பரியத்தை உருவாக்க முற்பட்டனர். சங்ககால ஔவை தொடக்கம் பெண்கள் தமிழ் இலக்கியப் பரப்பில் பிரகாசித்தாலும் பெண்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியப் பாரம்பரியத்தை தனித்து நோக்கப்பட வேண்டிய அவசியத்தை எண்பது கால கட்ட அரசியல் சூழ்நிலையும், பெண்ணிலைவாதம் தொடர்பான சிந்தனைகளும் உணர்ந்து செயற்பட்டன. இவ்வாறு தோன்றிய பெண்நிலைவாத சிந்தனைகளும், செயற்பாடுகளும் ஈழத்து இலக்கியப் பரப்பில் எண்பதுகளின் பின் பெண்கள் இலக்கியங்கள் தோன்றக் காரணமாயின.

எண்பதுகளின் பின் ஈழத்துப் பெண்கள் கவிதைகளில் அவர்களின் கருத்துகள் பற்றிப் பார்க்கும்போது பெண்கள் தங்கள் இருப்பு, ஆணாதிக்க சிந்தனைக்கெதிரான கருத்துகள், சமகால அரசியல்ப் பிரச்சினைகள், அவைகள் தங்கள் மீது செலுத்துகின்ற தாக்கம், மரபு ரீதியான கலாசாரக் கட்டுக்கள், காலம் காலமாக கூறப்பட்டு வந்த பெண்மை பற்றிய வர்ணிப்புகள் மற்றும் இலக்கணங்கள் போன்றவற்றை எதிர்த்துக் குரல் கொடுக்கின்ற தன்மை மற்றும் திருமணங்களில் சீதனம் பெறும் செல்வாக்கு போன்ற விடயங்களை விமர்சிக்கும் போக்கு போன்றவற்றைக் காணலாம். முதலிலே குடும்பங்களில் உடலியல் அம்சத்தின் அடிப்படையில் தங்களை பாலியல் பிண்டமாக நோக்குகின்ற இரண்டாம் நிலையை பெண்கள் உணரத் தலைப்பட்டனர். இதனை "சொல்லாத சேதிகள்" தொகுப்பு வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றது.

"எனக்கு முகம் இல்லை
இதயம் இல்லை
ஆத்மாவும் இல்லை
அவர்களின் பார்வையில்
இரண்டு மார்புகள்
நீண்ட கூந்தல்
சிறிய இடை
பருத்த தொடை
இவைகளே உள்ளன
சமையல் செய்தல்
படுக்கையை விரித்தல்
குழந்தை பெறுதல்
பணிந்து நடத்தல்
இவையே எமது கடமைகளாகும்.
கற்புப் பற்றியும்
மழை பெய்யெனப் பெய்வது பற்றியும்
கதைக்கும்
அவர்கள்
எப்போதும் எனது உடலையே
நோக்குவர்
கணவன் தொடக்கம்
கடைக்காரன் வரைக்கும்
இதுவே வழக்கம்"

(அவர்களின் பார்வையிலே, அ. சங்கரி)

மேற் கூறிய அதே விடயத்தை சுல்பிகா கூறும் போது பெண்ணிடத்தில் பாலியல் உணர்வு மட்டும் கலந்திருக்கவில்லை அரியதிறன், நெஞ்சுரம், சிந்தனைத் திறன் என எல்லா உணர்வும் திறனும் கலந்துள்ளது என்று குரலெழுப்புகிறார்.

சேற்றில் செழித்த
செங்கமல அரும்பு போல
மென் மஞ்சள் நிற முலைகள்
வெண்ணெயில் செதுக்கிய
உடல் வண்ணம்,
மென்மையான பெண்மையின் அங்கங்கள்
இவை மட்டுமா கொண்டு
இப் பூதம் உருவாகியுள்ளது?

செறிந்த பொருள் சேர்
சிந்தனைத் திறனையும்
அரிய திறன் மிகு
கொள்கையும்,
நெஞ்சுரமும்,
எம்மில் புதைந்துள்ளன.

பாலியல் உணர்வு
மட்டுமா எம்மில் கலந்துள்ளது?
பார்த்தல், கேட்டல்
ருசித்தல், மணத்தல்
உணர்தல் இவற்றுடன்
பகுத்தறிதல் என்பனவும்
எமக்கு உண்டு.

கண்களும், மூக்கும்
செவிகளும், நாவும்
உணர்மிகக் கொண்ட தோல் முடியும்
எம்மைக் காவலிட்டுள்ளன.
இவற்றினுள்ளே
இப்பிரபஞ்சத்தின் உயிர்ப்பே
உறைந்து கிடக்கிறது

(பெண்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணின் வெளிப்படுத்தல்கள், ஆளுமை, இருப்பு போன்றவற்றை சுட்டியும் அவற்றை வெளிப்படுத்துகின்ற உரிமைகள் தொடர்பாகவும் ஈழத்துப் பெண்கள் பலர் தமது கவிதைகளில் எடுத்துக் கூறியுள்ளனர். அவ்வாறான ஆளுமை, இருப்பு என்பவற்றை வெளிப்படுத்தும் போது தோன்றுகின்ற சமூக விமர்சனங்களுக்கு எதிராகவும் தமது கருத்துகளை முன் வைக்க அவர்கள் தவறவில்லை.

எண்பதுகளின் பின்னர் ஈழத்துப் பெண்கள் கவிதைகளில் மேலோங்கிக் காணப்படுகின்ற ஓர் விடயமாக ஆணாதிக்கத்திற்கு எதிரான கருத்துகளைக் கூறலாம். காலம் காலமாக வீட்டோடு முடக்கப்பட்ட பெண் வெளி நோக்கிப் புறப்படுகின்ற சூழல் தோன்றுகிறது. கல்வி, சமூகம், அரசியல் என சாதாரண பெண்களும் ஈர்க்கப்படுகின்ற தன்மையை இக்கால கட்டத்ததில் காணலாம். ஆகவே வெளி நோக்கிப் புறப்பட்ட பெண்ணிற்கு வீட்டுக்குள் இருந்து கிளம்புகின்ற ஆணாதிக்கம் தடையாக இருக்கும் போது அதனை எதிர்கொள்ள வேண்டிய கட்டாயம் அவளுக்கு ஏற்படுகிறது. ஆகவே தான் பெரும்பாலான பெண் கவிஞைகளின் கவிதைகளில் ஆணாதிக்க சிந்தனைக்கு எதிரான கருத்துகள் இடம்பெறுகின்றன. எடுத்துக் காட்டாக பெண்ணியா என்ற கவிஞை எழுதிய 'வதைபடலம்' என்ற கவிதையைப் பார்க்கலாம்.

"எப்போது
எனக்கும் என் தாய்க்கும்
என் சகோதரிக்கும்
உன் ஆதிக்கத்தில் இருந்து விடுதலை?

உன்னுள் சிறிதளவேனும்
மனிதம் என்ற ஒன்றுள்ளதா?
அது இருந்திருந்தால்
இப்போது நான்
இக்கவிதையை எழுதியிருக்கமாட்டேனே"
(என் கவிதைக்கு எதிர்த்தல் என்று தலைப்பு வை)

மேற் கூறப்பட்ட கருத்தினைக் கொண்டதாகவே ஆணாதிக்க சிந்தனைக்கு எதிரானதாக யாமினி வடிவேல் எழுதிய "இன்னும் என்னுள்?" என்ற கவிதையிலும் ஆண் என்ற குறியீட்டினால் பெண்ணை அடக்கி ஒடுக்கும் உண்மை நிலையையும், பெண் என்ற உடலியல் அம்சத்தின் அடிப்படையில் அவள் உணர்வுகள் புறந்தள்ளப்படுவதையும் எடுத்துக் காட்டுகிறார்.

"யார் பெண்
சதைப் பிண்டமான
ஒரு வெறும் உடலா?
உணர்வுகள் இருக்கிறதா?....

முருங்க மரத்தில்
ஏறும் வேதாளம் போல
ஆண் என்ற குறியீட்டையே
என்னிடம் காட்டிவிட்டான்

அவனின் கடைசிக் கடிதம்
வெறும் வெற்றுக்
கடதாசியாக
இன்னும் என்னுள்"

பெண்களை வர்ணிப்புகள் மூலமும் வார்த்தை ஜாலங்கள் மூலமும் கட்டுப்படுத்தி அவளது செயற்பாட்டுக்கு வேலி போடுகின்ற சூட்சுமம் பற்றியும் அவற்றை எதிர்த்தும், புறக்கணித்தும் பல கவிதைகள் எழுந்துள்ளன. எங்கள் வாழ்க்கை, எங்கள் எதிர்காலம், வாழவேண்டும், சவால்களை சந்திக்க வேண்டும் போன்ற தொனிப் பொருளில் இவை அமைந்துள்ளதைக் காணலாம். "பூக்கள் நாங்கள் உங்களுக்காய் புறப்படுவோம்" என்ற கவிதையில் சுதாகரி சுப்ரமணியம் மிகத் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார். இவர் தம்மை ஆண்கள் காலம் காலமாக முடக்கப் பயன்படுத்தி வந்த அலங்கார உடல் பற்றிய விடயங்களையும் வார்த்தைகளையும் எதிர்த்து குரல் கொடுக்கிறார்.

"மானம் இல்லா மனிதன் - எமை
பொன்னுக்கே ஒப்பிடுவான்
பூப் போன்ற கையென்றும்
இதழ் போன்ற வாயென்றும்...
எமைப் போன்று எனக் கூறி
எமைப் போலே பெண்ணினத்தை
கசக்கியும் எறிகின்றனர்
விஞ்ஞான அறிவு பெற்றும்
மனிதனுக்கோ மூளையில்லை
மலரெல்லாம் வாடிவிடும்
பெண்ணினம் வாடிடுமோ?"

சமூகத்தால் வரையறுக்கப்பட்ட கற்புக் கோட்பாடு பற்றியும், கற்பு என்கின்ற மாயையை பெண்களுக்குள் வலுக்கட்டாயமாக திணிக்கப்பட்ட தன்மையையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புராண காலம் தொடக்கம் இலக்கியங்கள் வாயிலாக காணலாம். இவை பெண்ணுடன் கற்புக் கோட்பாட்டை பிணைத்து செல்வதோடு அவளின் செயற்பாடுகள், வெளிப்படுத்தல்களை கட்டுப்படுத்தும் கருவியாக செயற்பட்டு வந்துள்ளது. இதனைப் பெண்கள் இலக்கியங்கள் வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன. சமூகத்தில் இடம்பெறுகின்ற அசம்பாவிதங்களால் பாதிக்கப்படுகின்ற பெண்ணைக் கூட சமூகம் ஆணாதிக்கத்தின் சார்பில் இருந்தே நோக்குகின்ற தன்மையை இன்று வரை காணலாம். இதனை "சொல்லாத சேதிகளில்" ரங்கா மிகத் தெளிவாகவும், வெளிப்படையாகவும் சொல்லியுள்ளார்.

"விரிந்து கிடந்த
கூந்தலை முடித்து
கலைந்து போன ஆடைகளை
அணிவதற்காய் நானும்
மெதுவாக எழுந்த போது
"இவள் அவனோட விரும்பித்தான்...?
வார்த்தைகள் என்னை அறுத்து வைத்தன
திரும்பிப் பார்த்தேன்
அம்மா, அக்கா, அண்ணா அனைவருமே
என்னைப் பிழையாக...
"தான் செத்திருக்கலாம்
இல்லாட்டி
அவனைச் சாக்காட்டியிருக்கலாம்
இரண்டுமில்லாமல் எங்கட மானத்தை...?"

தொடர்ந்தன பொறிகள்.
ஆனால்... நான் சிரித்தேன்
"இராணுவக் கற்பழிப்புக்காய் கலங்கிடாது" என
மேடையேறி முழங்கிய அண்ணன்
புத்தகங்களில் எழுதிய அக்கா
இன்று...
எனது ஊரவன்
அதே நிலையில்...

எனக்குப் புரியவில்லை
அந்நியன் ஆத்திரத்தில்
அடக்கு முறையின் வடிவில் நடந்து கொண்டான்.
ஆனால்... இவனோ...
காமனாய்... கயவனாய்...
இவனை என்ன செய்யலாம்?

கற்புக்காய் கண்ணீர் வடிக்க
நான் ஒன்றும் கண்ணகியல்ல.
மானத்தை நினைத்து நிற்க
நான் ஒன்றும் இழக்கவில்லை.
தற்கொலையில் உயிரைமாய்க்க
நான் ஒன்றும் கோழையல்ல.

இராணுவத்தை விட்டுத் தள்ளினோம்
ஆனால்...
நமது இனத்தவனை வெறி பிடித்தவனை
திருமணமாகி இரு குழந்தையும் பெற்றெடுத்தவளை
என்னைப் போல் இன்னும்
எத்தனைபேர்?
இவனைப்போல் இன்னும்
எத்தனை பேர்?
இவர்களுக்கு என்ன செய்யலாம்?
குழம்பினேன் நான் குழறவில்லை
குடும்ப கௌரவத்திற்காய்
என்னைக் கொல்லலாம்
ஆனால் நானாக...
அது நடக்காது.

எனது பாதங்கள் தொடரும் பயணத்தில்
முடிந்தால்... துணிவிருந்தால்
உண்மையிலும் உண்மையாக
எவராவது வாழ வரலாம்.

ஈழத்தில் எண்பதுகளின் பின்னர் தமிழ் சமூகத்தினிடையே இடம்பெற்ற அரசியல், சமூக மாற்றம் இடப்பெயர்வு, படித்த பெண்கள் மத்தியில் தோன்றிய எழுச்சி, இலக்கிய உருவாக்கம் மற்றும் ஆணாதிக்க சிந்தனைக்கெதிராக முகிழ்ந்த பெண்களின் குரல்கள், தமிழர் போராட்டத்திற்கு ஆதரவாகவும் அதே வேளை எதிர்ப்பாகவும் கவிதைகள் தோன்றக் காரணமாகின. இவை மட்டுமன்றி போராளிக் கவிஞைகளின் கவிதைகளும், புகலிட நாடுகளில் வாழ்கின்ற ஈழத்துப் பெண்கள் எழுதிய கவிதைகளும் ஈழத்து தமிழ்ப் பெண் கவிஞைகளின் கவிதைகள் வரிசையில் இடம் பிடிக்கின்றன. இவர்கள் அனைவரது கவிதைகளிலும் பெண் என்ற உணர்வும் அவர்களது இருப்பும் மேலோங்கிக் காணப்படுவதையும் தம்மை அடக்கி ஒடுக்க முற்படுகின்ற சமூகத்தினை எதிர்த்துக் குரலெழுப்புகின்ற தன்மையையும் தாங்கள் பெண் என்ற நிலையில் இருந்து தமது உடல் பற்றியும், உணர்வு பற்றியும் பெருமை கொள்வதையும் காணலாம். ■

**குகநிதி குகநேசன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கன்னித்திரையும் கன்னித்தன்மையும்

மணப்பெண் தனது முதலிரவின்போது தான் மாசற்றவள் என்பதை உறுதிசெய்யும் சமுதாய மரபுகள் இன்றும் இலங்கையின் எல்லா சமூகங்களிலும் காணப்படுகிறது. முதலிரவின்போது குருதி வெளியேறாவிட்டால் மணப்பெண்கள் சொல்லொண்ணாத் துயரங்களுக்கு முகம்கொடுக்க நேரிடும். இதனால் தொடக்கம் முதலே இல்லற வாழ்க்கை களிப்பற்றுவிடும். ஒவ்வொரு கன்னிப் பெண்ணுக்கும் முதலிரவின்போது குருதி வெளியேற வேண்டுமெனவும் அவ்வாறு வெளியேறாவிட்டால் அப்பெண் ஏற்கனவே உடலுறவில் ஈடுபட்டுள்ளார் என்ற தவறான நம்பிக்கை பெரும்பாலான இலங்கையர்களிடம் காணப்படுகின்றமையே இதற்கு காரணம்.

இலங்கையில் இன்றும்கூட தனது தேனிலவைக் கழிக்கச் செல்லும் மணப்பெண்கள் வெண்ணிறப் படுக்கை விரிப்பை கொண்டு செல்ல வேண்டும். எமது கலாசாரம், குருதி படிந்த வெண்ணிறப் படுக்கை விரிப்பை, மணப்பெண்ணின் கன்னித் தன்மைக்கு சான்றாக ஏற்றுக்கொண்டுள்ளது. இது பொய்யானதும் எந்த விதத்திலும் அறிவியல் அடிப்படையற்ற பரிசோதனை முறையுமாகும். எமது சமூகத்தில் இன்றும் நிலவும் இதுபோன்ற படிப்பறிவில்லாத கற்பனைகள் மற்றும் விடயத்துறைசார்ந்த அறிவின்மை காரணமாக பல அப்பாவிப் பெண்கள் காரணமின்றி துயரம்கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே கன்னித்திரை மற்றும் கன்னித்தன்மை பற்றிய அறிவியல்சார்ந்த தகவல்களை அறிந்திருத்தல் பொதுமக்களாகிய உங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும்.

**கன்னித்திரை அற்றிருத்தல் அல்லது முதலிரவின்போது குருதி வெளியேறாதிருத்தல் என்பன பெண் கன்னித்தன்மை அற்றவள் என்பதற்கான உத்தரவாதமல்ல. சில நேரங்களில் பெண்கள் கன்னித்திரை அற்றவளாக பிறக்க வாய்ப்புள்ளது. அதேநேரம் அது மிகவும் மென்மையானதாகவும் விரிவடையும் தன்மை கொண்டதாகவும் இருக்கக்கூடும். இல்லாவிட்டால் தீவிர உடற்பயிற்சியின்போது எதிர்பாராத வகையில் கன்னித்திரை பாதிக்கப்படலாம்.**

## கன்னிப் பெண் என்பவர் யார்?

சரியாக வரைவிலக்கணம் கூறின், கன்னிப்பெண் எனப்படுபவர் பெரும்பாலானவர்களின் நம்பிக்கையின் பிரகாரம் முதலிரவின்போது குருதி வெளியேறும் பெண் அல்ல. முன்னொருபோதும் உடலுறவில் ஈடுபடாத பெண். கன்னித்திரை அமைவின் பிரகாரம் கன்னிப் பெண்களில் சுமார் 20% - 30% ஆனோருக்கு முதலிரவின்போது குருதி வெளியேறுவதில்லை-யென்பதை அனைவரும் அறிந்திருத்தல் முக்கியமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கன்னித்திரை என்றால் என்ன?

கன்னித்திரை எனப்படுவது யோனி மார்க்கத்தை பாதியளவில் மூடியவாறு காணப்படும் விரிவடையும் தன்மையுள்ள மென்தோலாகும். இதில் காணப்படும் துவாரம் ஒருவருக்கொருவர் வேறுபட்டு காணப்படும் அதேவேளை மாதவிடாயின்போது வெளியேறும் குருதி அதனூடாக வெளிச்செல்லும். இந்த மென்தோல் மூலம் இடம்பெறும் முக்கியமான அல்லது பயனுள்ள செயற்பாடுகள் பற்றி அறிய அவசியமில்லையென்றே கூறவேண்டும். பொதுவாக முதலிரவின்போது இந்த மென்தோல் துளைக்கப்பட்டு அவ்விடத்தைச் சுற்றி சில துண்டுகள் எஞ்சியிருக்கும். இவை முதலிரவின்போது குருதி வெளியேவரக் காரணமாகின்றன.

கன்னித்திரை அற்றிருத்தல் அல்லது முதலிரவின்போது குருதி வெளியேறாதிருத்தல் என்பன பெண் கன்னித்தன்மை அற்றவள் என்பதற்கான உத்தரவாதமல்ல. சில நேரங்களில் பெண்கள் கன்னித்திரை அற்றவளாக பிறக்க வாய்ப்புள்ளது. அதேநேரம் அது மிகவும் மென்மையானதாகவும் விரிவடையும் தன்மை கொண்டதாகவும் இருக்கக்கூடும். இல்லாவிட்டால் தீவிர உடற்பயிற்சியின்போது எதிர்பாராத வகையில் கன்னித்திரை பாதிக்கப்படலாம். எனினும் விளையாடுதல், ஓடுதல், பாய்தல் மற்றும் உயரம் பாய்தல் போன்றவற்றால் கன்னித்திரை கிழியாதென்பதை குறிப்பிட்டு சொல்ல வேண்டும். இது அபூர்வ நிகழ்வாக ஏற்படலாம்.

எனவே, பெண் கன்னியாக இருப்பினும் முதலிரவின்போது குருதி வெளியேறாதிருப்பதற்கு ஏதுவான காரணங்கள் பற்றி மக்களை அறிவூட்டுவது அவசியமானதாகும்.

முதலிரவின்போது குறைந்தளவிலோ அல்லது கூடுதலான அளவிலோ குருதி வெளியேற இடமுண்டு. எனினும், இதனால் ஒருபோதும் ஆபத்து ஏற்பட வாய்ப்பில்லை. ஒருசில பெண்களுக்கு முதலிரவின்போது வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சைபெற வேண்டிய அளவுக்கு குருதி வெளியேற்றம் அதிகமாக இருக்குமென்பதில் எதுவித உண்மையும் இல்லை.

பெண்ணுக்கு முதலிரவின்போது சிறு வலி அல்லது சிரமம் எற்பட இடமுண்டு. முதல் முறையாக உடலுறவு கொள்ளும்போது ஏற்படும் வலி கன்னித்திரை கிழிவதன் வெளிப்பாடென பலர் கருதுகிறார்கள். இது பெரும்பாலும் அச்சம் அல்லது அறியாமையின் விளைவாகும். பெண் அச்சத்துடன் அல்லது தயக்க நிலையில் இருக்கும்போது யோனியின் புறப்பக்கத் தசைகள் சுருங்கிவிடும். இதனால் யோனி மார்க்கம் சுருங்கி விறைப்பாக காணப்படும். இந்நிலை காரணமாக முதலாவது உடலுறவின்போது வலி ஏற்படுகிறது.

பாலியல் ரீதியான அறியாமை மற்றும் முன்னாயத்தம் இன்றி ஆண்குறி உள்ளே செலுத்தப்படுதல் யோனியின் புறப்பக்க தசைகள் விறைப்பாக இன்னொரு காரணமாகும். முன்னாயத்தம், பாலியல் உணர்வை அதிகரிக்கச் செய்வதால் யோனியிலிருந்து சீழ் வெளியேறுதல் அதிகரித்து ஈரலிப்பு அதிகரிக்கும். இது ஆண்குறி உள்ளே செல்வதை இலகுபடுத்தும். ஈரலிப்பு குறைவாக இருக்கும்போது ஏற்படக்கூடிய சிரமத்தை தவிர்த்துக் கொள்வதற்கு அதற்கேற்ற ஏதாவதொரு கிறீம் வகையைப் பயன்படுத்த முடியும்.

## கன்னிப் பெண்ணொருவர் கருத்தரிக்க முடியுமா?

ஆம். சரியான முறையில் உடலுறவில் ஈடுபடாவிட்டாலும்கூட ஆணின் விந்துகள் யோனித் துவாரத்தைச் சுற்றி படிந்தால் அவை கன்னித்திரையில் காணப்படும் துவாரங்கள் ஊடாக கருப்பையை சென்றடைய இடமுண்டு. இது ஓர் அபூர்வ நிகழ்வாகும். இருப்பினும் தற்செயலாக நிகழவும் இடமுண்டு. ■

---

இலங்கைக் குடும்பக் கட்டப்பாட்டு சங்கத்தினால் வெளியிடப்பட்ட கையேட்டில் வைத்தியர் திருமதி ஸ்ரீயானி பஸ்நாயக்க அவர்கள் கூறிய கருத்துகள் இங்கு தரப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்பகங்களின் கதைகள்

கலை, இலக்கியத்தினது பாடு பொருள்களில் ஒன்றாகப் பெண்களின் மார்பகங்கள் அமைந்துள்ளன. பழங்காலத்திலிருந்து இன்றுவரை பல்வேறு கலாசாரங்களிலும் நாடுகளிலும் மனித உறுப்புகளில் மிக அதிகமான வர்ணனைக்கும், புனைவுக்கும் உட்பட்டதாகப் பெண்களின் மார்பகங்கள் அமைகின்றன.

தென்னாசியாவில் நீண்டகாலமாக எழுத்து இலக்கியம் வளர்ந்திருக்கும் மொழிகளில் மார்பகங்களைக் குறிப்பதற்குப் பல சொற்கள் உள்ளன. அவை ஒரு பொருள் பல சொற்களாக விளங்குகின்றன. அத்துடன் அவற்றை வர்ணிக்கும் நூற்றுக்கணக்கான தொடர்களும் உருவாகியுள்ளன.

தமிழில் முலை, நகில், கொங்கை, ஸ்தனம் என்றொல்லாம் பல சொற்களாகக் காணப்படுகின்றன. பெண்களை வர்ணிக்கும் போதெல்லாம் "இளமுலை மடவார்", "குரம்பை இளமுலையினர்", "பந்தெனத் திரண்ட மார்பினர்" என்றெல்லாம் குறிப்பிடப்படுவதை எல்லோரும் அறிவர். இந்த வர்ணனைத் தொடர்கள் பழைய இலக்கியங்களிலிருந்து தற்கால இலக்கியங்கள் வரை தொடர்ந்து வருகின்றன. "வண் கொங்கை, முத்தணி கொங்கை, கொங்கைக் குடம், கலசமுலை, வார் உருவப் பூண்முலையீர்," என்றெல்லாம் இவை அமைந்துள்ளன. இத்தொடர்கள் மார்பகங்களை காம உறவுக்கும், இன்பத்துக்கும் மாத்திரம் உரிய இலக்காக வர்ணித்திருப்பது தென்படும்.

உயர் இலக்கியங்களில் மனோரதியப் பாங்கில் விபரித்திருப்பது போன்றே வாய்மொழி இலக்கியங்களிலும் உயர்வு நவிற்சியுடன் பெண்களின் மார்பகங்கள் விபரிக்கப்பட்டுள்ளன. உதாரணமாக 'செம்பதும கும்பதன தங்கரதி', 'வாரிட்டிறுக்கும் முலையார்' போன்ற தொடர்களைக் கூறலாம். மத்திய கால ஓவியம், சிற்பம் ஆகியவற்றிலும் மார்பகங்களைப் பெரிதுபடுத்தியே காட்டியுள்ளனர்.

பண்டைக்கால ஓவியம், சிற்பங்கள் ஆகியவற்றில் பெண்ணின் உடல் உயிர்ப்பினதும் வளத்தினதும் குறியீடாகவே பெரும்பாலும் அமைந்துள்ளது. பெரிய வயிறு, பெரிய மார்பகங்கள், அகன்ற இடுப்புப் பகுதியுடன் புராதன நாகரிகங்களில் காணப்படும் பெண் சிற்பங்கள் அமைந்துள்ளன.

இத்தகைய வளத்தின் அம்சமாகப் பெண்ணைப் பார்த்த போது மார்பகங்கள் அந்த வளத்தின் பிரதான குறியீடாகக் காணப்பட்டன.

ஆனால் பெண்ணானவள் ஆணினது காம இச்சைக்குரிய பாலின்பத்துக்குரிய ஒரு பொருள் என்ற எண்ணம் காலப் போக்கில் வளர்ந்து நிலை கொண்டு பரவிய போது மார்பகங்களும் தனியே ஆணினது இன்ப நுகர்ச்சிக்குரிய பொருளாகவே நோக்கப்பட்டன. அதுவும் தனியே ஆணினது இன்பத்துக்கெனப் படைக்கப்பட்டவையாகவே கருதப்பட்டன. அதனாலேயேதான் இயற்கைக்கு மாறான வகையில் மார்பகங்கள் பற்றிய பல்வேறு புனைவுகளும் வர்ணனைகளும் தோன்றின.

மார்பகங்களை ஆண்களின் வன்செயலுக்குரிய இலக்குகளாக கட்டமைக்கப்படும் நிலையும் இத்தகைய ஒரு பின்னணியிலேயே உருவாகியது. பால் இன்பம் பற்றிப் பேசும்போது அதில் ஒரு வன்முறை கலந்திருப்பதையும் அந்த வன்முறை கற்பனையினது பொருளாக மார்பகத்தைக் கொள்வதும் மேற்கூறியதன் விளைவு என்றே கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களுக்கோ மார்பகங்கள் வெவ்வேறு வகையான உணர்வுகளுக்கு இடமளித்துள்ளன. கருவுறுதல், பிரசவித்தல் ஆகிய பெண் உடலின் தொழிற்பாட்டுடன் தொடர்புபட்டதே சிறுகுழந்தையின் உணவான தாய்ப்பால் மார்பகங்களில் உருவாதலாகும். கருவுற்ற காலத்திலும் பிரசவிக்கும் காலத்தில் உடலில் ஹோர்மோன்களின் ஒருவகையான இயக்கத்தால் பெண்ணின் மார்பகங்களில் பால் சுரக்கிறது. குழந்தை உறிஞ்சிப்பால் குடித்தல் பாலின் சுரப்பைப் பெருக்குகிறது. குழந்தையைப் போஷிக்க அதிக செலவற்ற பாதுகாப்பான இலகுவான ஒரு வழிமுறையே தாய்ப்பாலூட்டல் ஆகும்.

பால் சுரப்பதைப் பேணவும் பால் சுரப்பைப் பெருக்கவும் பாரம்பரியமாகப் பெண்கள் பலவழிமுறைகளைக் கையாண்டு வந்துள்ளனர். குறிப்பாக சில வகையான உணவுகள் பால் சுரப்பை அதிகரிக்கும் என நம்பப்படுகிறது. மேலும் சில வகையான இலைகளைச் சூடாக்கி மார்பகத்தில் ஒத்தடம் கொடுத்தால் பால் பெருகும் என்ற நம்பிக்கையுமுண்டு. இவ்வாறு தாய்ப்பால் பற்றிய அக்கறையும் கவனமும் பாலூட்டும் பெண்களிடமும் வயதான பெண்களிடமும் காணப்படும். அவர்களது உரையாடல்களில் மார்பகங்கள் அதிகமாக இடம் பெறுவது இத்தகைய ஒரு தொடர்பிலேயாகும். இத்தகைய உரையாடல்களும், கவனமும் பெண்களின் உலகம் சார்ந்தவையாக உள்ளன. மார்பகம் பற்றிய பெண்களின் இத்தகைய உணர்வுகள் பொதுத் தளத்தில் மேல் வருவதில்லை.

மாறாகப் பெண்களின் மார்பகங்கள் பற்றிய ஆண்களின் நோக்கே இலக்கியம், கலையாவற்றிலும் வியாபித்து பொதுவான ஒரு பார்வையாக நிலை பெற்றுள்ளது.

பெண் தனது குழந்தையை மாத்திரமல்லாது வேறு குழந்தைகளுக்கும் பாலூட்டுவதை இன்று எமது கிராமங்களிற் காணலாம். உறவு காரணமாகவும் குடும்பத் தொடர்புகள் காரணமாகவும் இத்தகைய பராமரிப்பு இடம் பெறுகிறது.

ஆனால் பல்வேறு காரணங்களால் ஒரு பெண் தனது குழந்தைக்குப் பாலூட்ட முடியாமல் போகுமிடத்து வேறு பெண்களை பால் கொடுப்பதற்காக சம்பளத்திற்கு அமர்த்தும் வழக்கமும் தென்னாசிய சமூகங்களிலும் தமிழ் சமூகத்திடமும் இடம் பெற்று வந்துள்ளது. தமிழ சமூகத்தின் சாதி முறைமையும் அதனையொட்டி உயர் சாதியினர் எனக் கூறப்பட்டோருக்கிருந்த அதிகார நிலையும் இவ்வாறு பால் கொடுப்பதற்குப் பெண்களைக் கூலிக்கமர்த்தும் வழக்கத்தில் செயற்பட்டுள்ளது. குறிப்பாக உயர் சாதியினர் 'தாழ்த்தப்பட்ட' சாதிப் பெண்களைத் தமது குழந்தைகளுக்குப் பால் கொடுப்பதற்காக வேலைக்கு அமர்த்தியிருந்தனர். அதற்காக அவர்களுக்கு மானியங்களும் வழங்கினர். பெரும்பாலும் பெண்களைக் கட்டாயப்படுத்தியும் அவர்களது விருப்பத்திற்கு மாறாகவுமே இது நடைபெற்று வந்ததை செவிவழிமரபுக் கதைகளும் கூறுகின்றன. சொத்துடைய உயர் சாதியினரும் அவர்களது 'அடிமை குடிமைகளாக' வாழ்ந்த மக்களுக்கும் இடையே காணப்பட்ட அதிகார நிலைப்பட்ட, சுரண்டல் தன்மை மிகுந்த ஒரு உறவு நிலையின் அடிப்படையிலேயே இது நிகழ்ந்தது. நாவலாசிரியர் கே.டானியல் தமது நாவல்கள் சிலவற்றில் இவ்விடயத்தைத் தொட்டுக் காட்டுகின்றார்.

பண்டைய இந்திய கலாசாரத்திலும் இவ்வழக்கம் நிலவியிருந்தது. பிரபுக்களதும், அரசர்களதும் குடும்பங்களில் குழந்தைக்குப் பாலூட்டுவதற்குப் பெண்களை வேலையாட்களாக அமர்த்தும் வழக்கம் இருந்தது. ஐரோப்பிய நாடுகளிலும் மத்திய காலத்தில் இவ்வழக்கம் நிலவியது. Wet Nurse என்ற தொடர் இவ்வாறு பிற குழந்தைகளுக்குப் பாலூட்டும் பெண்களையே குறித்தது. இவ்வகையில் பெண்ணின் மார்பகங்கள் அவற்றின் பால் சுரப்பு ஆகியவை ஒரு வகையான பண்டமயமாக்கலுக்கு உட்பட்டன. பெண்ணின் பாலியல்பை ஆண்தலைமை ஆதிக்க முறைமை (Patriarchy) தனது நலன்களுக்காகப் பயன்படுத்தும் நடவடிக்கைகளில் இது ஒன்றாகும். (தற்காலத்தில் மருத்துவ விஞ்ஞானத்தின் வளர்ச்சி பெண்களின் கருப்பையையே வாடகைப் பொருளாக்க வழிவகுத்ததை இங்கு சுட்டிக்காட்டலாம். முதலாளித்துவத்தினதும் ஆண் ஆதிக்க முறையினதும் (Capitalism &Patriarchy) கூட்டுச் செயற்பாட்டுக்கு இது நல்ல உதாரணமாகும்.)

அழகு, இன்பம், பாலியல்பு ஆகிய கருத்துகள் மாத்திரம் மார்பகங்களைச் சுற்றி நிலவவில்லை. மாறாகப் பெண்ணினது பாலியல்பே வியாபாரத்திற்குரிய ஒரு பொருளாக மாற்றப்பட்டுள்ளது என்பதே எமது அக்கறைக்குரியது. இவ்வாறு மாற்றப்பட்ட செயல் முறையின் பின்னாலுள்ள அதிகார ஒடுக்குமுறை அம்சங்களைப் புரிந்து கொள்வதும், இந்நிலை தொடர்பாக மறைக்கப்பட்டிருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணினது கதைகளையும் மன உணர்வுகளையும் வெளிக் கொண்டு வருவதும் முக்கியமானதாகும்.

அடுத்த விடயம் தற்காலத்தில் பெண்களை அச்சுறுத்தும் ஒரு நோய் மார்புப் புற்று நோய். இன்று பெண்களைத் தாக்குகின்ற நோய்களுள் ஒன்றாக இது கொள்ளப்படுகின்றது. மார்புப் புற்றுநோய் வளர்முக நாடுகளில் பெண்களின் மரணத்துக்கு ஒரு முக்கிய காரணமான நோயாகும் என ஆய்வுகள் கூறுகின்றன.

மார்பில் ஒரு சிறு கொப்புளம் ஏற்பட்டாலே அது மார்புப் புற்று நோயின் ஆரம்பமோ என்று பல பெண்கள் மன உளைச்சல் கொள்கின்றனர். மார்புப் புற்று நோய் பற்றிய பயம் இன்று பெண்கள் மத்தியில் நிலவுகின்றது. இன்று மார்பகங்கள் பற்றிய பெண் உணர்வுகள் இத்தகைய அச்சமாகவும் உள்ளன. ஆனால் மிக வெளிப்படையாக இவை கதைக்கப்படுவதில்லை. அதற்கான கலாசாரத் தடைகள் எமது சமூகத்தில் ஏராளம்.

சமீப காலம் வரை மார்புப் புற்று நோய் பற்றிய அறிவு, அக்கறை பெண்களிடமும் வைத்தியர்களிடமும் இருக்கவில்லை. பெண்களின் இனப்பெருக்க சுகாதாரம், உரிமைகள் ஆகியவை பற்றி (Reproductive Health and Right) பெண்கள் அமைப்புகளின் இடைவிடாத வற்புறுத்தல்களால் தற்காலத்தில் இந்த நோய் பற்றி அக்கறை காட்டப்படுகின்றது. பெண்ணின் உடலை மறைபொருளாகவும், பேசப்படக்கூடாத விடயமாகவும் கட்டமைத்து விட்ட எமது கலாசாரத்தின் மார்புப் புற்று நோயால் இறந்து போன பெண்களது கதைகள் அவர்களது மரணத்துடன் புதைந்து போயும் விட்டது. தமக்கு ஏற்பட்ட நோயையும் அது தந்த துன்பத்தையும் அச்சத்தாலும் வெட்கத்தாலும் வெளிக்காட்டாது மரணித்த பெண்கள் பலராவர். அவர்களது மார்பகங்களின் கதைகள் சொல்லப்படாதவை.

இத்தகைய பிரச்சினைகள் எல்லாம் இருந்தும் கூட இவற்றையெல்லாம் மூடி மறைத்து விட்டு ஆணுடைய பாலின்பத்துக்கு மாத்திரம் உரிய ஒரு பொருளாக மார்பகத்தை மிகை எளிமைப்படுத்துவதும், புனைந்து காட்டுவதும் எம்மால் சரியானபடி புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

பாலியல்பு, காதல், காமம், பாலின்பம் ஆகியவை மனிதரதும் மனித வாழ்க்கையினதும் பிரிக்க முடியாத, அவசியமான, இயற்கையான அம்சங்கள் என்பதை யாவருமே ஏற்றுக் கொள்வர். பெண்கள் இதற்கு விதிவிலக்கானவர்கள் அல்லர். பாலியல்பு பற்றிய உணர்வு அவர்களுக்கு உண்டு. தமது அழகிலும் இன்பத்தை உணர்வதிலும் அவர்களுக்கு உரிமையும் பங்கும் உள்ளன.

ஆனால் எமது சமூகத்தில் 'இதுதான் அழகு' என்றும் 'இதுதான் உனது உணர்வு' என்றும் 'இதுதான் உனது இன்பம்' என்றும் குறிப்பிட்ட சில விடயங்களே பெண்ணுக்குக் கூறப்படுகின்றன. இவ்வாறு கூறப்படுபவை கருத்து ரீதியான கட்டமைப்புகளே. பெண்ணைச் சுற்றி ஒரு மாயையை உருவாக்கவே இவை பயன்படுகின்றன. பெண்ணுடைய தன்னாற்றலை (agency) நிராகரித்து அவளை நுகர்ச்சிக்குரிய ஒரு பொருளாக்கியதன் விளைவே பெண்ணின் மார்பகம் பற்றிய மிகை எளிமைப்படுத்தப்பட்ட புனைவுகள்.

'குரும்பை இளமுலை' என்ற பண்டைய இலக்கிய தொடரிலிருந்து ரவிக்கைக்குள் இருப்பது என்ன? (சோளி கீ பிச்சே) என்ற பாடல் ஈறாக உயர் இலக்கியத்திலிருந்து சினிமாப் பாடல் வரையும், கோயில் சிற்பத்திலிருந்து நீலப்படம் வரையும் சாராம்சத்தில் இதனையே செய்கின்றன.

பாலியல்பு, பாலின்பம் ஆகியவற்றின் ஒரு பகுதியான மார்பகங்கள் இத்தகைய ஒரு புள்ளியில் தான் பலாத்காரத்தினதும் பாலியல் வன்முறையினதும் இலக்குகளாக மாறுகின்றன. அவ்வாறு மாறுவதற்கு எமது இலக்கியத்தினதும், கருத்துகளினதும் வினோதப் புனைவுகள் வழி சமைத்தும் உள்ளன.

இப்புனைவுகள் மார்பகங்களின் உண்மையான கதைகளை மறைத்து விடுகின்றன. இதனால் பொய்யான புனைவும் கற்பனையுமே வளர்கின்றது. பெண்ணின் தன்னாற்றல் குறித்தும், பெண்களுக்குத் தமது உடலின் மீதும் உணர்வுகள் மீதும் உள்ள உரிமைகள் குறித்தும் காத்திரமாக சிந்திக்கத் தலைப்பட்டு விட்ட இக்கால கட்டத்தில் பெண் உடல் பற்றிய புனைவுகள் மறு பரிசீலனையினதும் மாற்றுக் கருத்தினதும் ஆரம்பப் புள்ளியாகவே இக்கட்டுரை அமைகிறது.■

**சித்ரா**

"பெண்", தொகுதி : 04 இலக்கம் : 02 - 1999

---

**குறிப்பு:**

வங்காளப் பெண் சிறுகதையாசிரியர் மஹேஸ்வதாதேவியின் சிறுகதைத் தொகுப்பொன்றின் தலைப்பு மார்பகங்களின் கதைகள் (Breast Stories – 1997) ஆங்கில மொழி பெயர்ப்பு) என்பதாகும். இதைப் பின்பற்றியதாகவே எனது கட்டுரைத் தலைப்பு அமைகிறது. அவருக்கு எனது நன்றிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்படியும் நடக்கிறதே!!!

"பத்மினி ஏன் உன்ர முகம் ஒரு மாதிரி இருக்கு....?"

"அதயேன் கேட்கிறாய்...?"

"என்னடி?... என்ன நடந்தது? "

"என்ன நடந்தது எண்டு சொன்னால் ஏங்கிப் போவாய்"

"என்ன நடந்ததெண்டு சொன்னால் தானே தெரியும்"

"இண்டைக்கு எனக்கு அவசரமா மெயில் ஒண்டு அனுப்ப வேண்டி இருந்தது. எங்கட ஒபிஸ்ல இன்ரநெட் வேலை செய்யல. அதால வேல முடிய வாற வழியில நெட் கவே ஒண்டுக்குப் போனன். "

"சரி. அதுக்கென்னடி?"

"அங்க என்ன நடந்தது தெரியுமோ?"

"என்னட்ட கேள்வி கேட்காம, அங்க நடந்ததை சொல்லன்டி"

"நெட் கவே போய் மெயில் அனுப்பவேணும் எண்டு போனன்"

"அங்க வேலை செய்யிற பொடியன் மாடியில கடைசியில இருக்கிற ஆறாவது பெட்டிக்குள் போகச் சொன்னான்."

"நான் மேல போய் ஆறாவது பெட்டிக்க போய் மெயில் பாக்கத் தொடங்கினன்.."

"கொஞ்ச நேரத்துக்கு பிறகு பக்கத்து பெட்டி ஆடுறது போல இருந்தது."

"பிறகு?"

"எனக்கு பக்கத்து பெட்டிகளுக்குள்ள ஆக்கள் இருந்தினம். ஆனால் பெட்டி மறைச்சு அடிச்சிருந்ததால யாரெண்டு பாக்கத் தெரியாது."

"திரும்பவும் பக்கத்து பெட்டி வித்தியாசமாக ஆடுறது போல இருந்தது."

"திரும்பிப் பாத்தன் விளங்கல."

"அதுக்கு பிறகு மெயில் அனுப்பிறதில பிஸி ஆகிட்டன்."

"கொஞ்ச நேரத்தில திரும்பவும் பெட்டிக்குள்ள யாரோ அசையுறது போல விளங்கிச்சு"

"எனக்கு ஏதோ சந்தேகம் வந்தது. ஓரக்கண்ணால கால்ப் பக்கம் பார்த்தன்... அங்க... அடக்கடவுளே...!!!"

"என்னத்தைக் கண்டனீ?"

"அத எப்பிடிடீ சொல்லுறது?"

"இப்ப சொல்லப் போறாயா? இல்லையா?"

"அங்க ஒருத்தன்..."

"சொல்லித் துலையன்ரி"

"ஐயோ அந்தப் பொடியன் ... தன்ர கையால... பிடிச்சுக் கொண்டிருந்தான்"

" எதை?"

"உனக்கு எல்லாத்தையும் விளக்கமா சொல்லவேணும்"

"எதையெண்டு சொல்லன் பிளீஸ்"

"அதைத் தான்"

எ...ன்...ன...டீ...!!!"

" ஓ...ம...டீ..."

"அவன் செய்து கொண்டிருந்த வேலையைப் பார்த்து நான் நடுங்கிப் போனன். உடனை அந்த இடத்தை விட்டு போவம் எண்டிட்டு திரும்பி எழும்பும் போது, பெட்டியின்ர பின்பக்கம் கண்ணாடி இருந்தது. அதில அவன் இன்டநெட்ல Porn படங்கள் பாத்துக் கொண்டிருந்தான்."

"அதுக்குப் பிறகு நான் உடனை வெளிய வந்திட்டன். அதான்டி அப்செட்டாய் இருந்தன்."

"நெட் கவேல் இப்பிடியும் நடக்குதாடி...?"

"அதானேடி, நாங்கள் ஏதாவது வேல செய்ய எண்டு போனால், இவனுகள் காசைக் குடுத்து இதுகள் பாக்கவெண்டு வாறானுகள்."

"எங்களிட்ட இன்ரநெட் வசதி இல்லை எண்டு தானே நெட் கவே போறம். இவனுகள் இப்பிடி நடந்தா...? "

"நெட் கவே நடத்துறவங்களும் பெட்டிய அடிச்சு வைச்சு அதுக்குள்ள கொம்பியூட்டரை வைச்சு இவங்களுக்கு மேலும் வசதியை செய்து குடுக்கினம்."

"நீ சொல்லுறது நூத்துக்கு நூறு வீதம் சரி".■

**வேலாயுதம் ஜெயச்சித்ரா**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அட்டைப்படம் :
உலக பாரம்பரிய கலாசார நிலையங்களுள் ஒன்றாக யுனெஸ்கோவி-னால் பிரகடனப்படுத்தப்பட்டதும் இந்தியாவின் மத்திய பிரதேசத்தைச் சேர்ந்ததுமான கஜிராஹோ கோயில் தொகுதிகளில் (கி.பி- 9-12 நூற்றாண்டு) காணப்படும் சிற்பங்களின் புகைப்படங்கள்.
முன் அட்டை :- காந்தாரிய மகாதேவ கோவில் சிற்பம்.
பின் அட்டை :- ஆதிநாதர் கோவில் சிற்பம்.

ரூ.60/-

Globe Printing Works [illegible] 2329739

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org